பக்கம் : 24
வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

UTHAYAN - A Lively National Tamil Daily

சுடர்: 29 கதிர்: 021 வள்ளுவர் ஆண்டு: 2044 | மார்கழி 02, செவ்வாய் 17.12.2013


மப்பான வானிலை

29 C 24 C


பக்கம் 05
இந்து மகா சபை ஏற்பாட்டில் பாதயாத்திரை


பக்கம் 06
மீனவர்கள் பிரச்சினையில் 'ஜெ'க்கு அக்கறையில்லை


பக்கம் 07
பற்றியெரிகின்றது பங்களாதேஷ்


பக்கம் 23
மெஸ்சியை முந்தினார் டெல் போட்ரோ

# தாய்லாந்து அரசியல் சிக்கலை தீர்க்க இலங்கை அனுசரணை

## *அந்த நாட்டு சர்வ கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்தது கொழும்பு*

கொழும்பு, டிசெ. 17
தாய்லாந்தில் அரசுக்கு எதிராக நீடித்துவரும் கலவரங்களுக்கு சுமுகமான தீர்வை எட்டுவதற்கு உதவ இலங்கைஅரசுமுன் வந்துள்ளது. இதன் பொருட்டு, அனைத்துக் கட்சிகளையும் கலந்துரையாடலுக்கு வருமாறு இலங்கை அரசு அறை கூவல் விடுத்துள்ளது.
வெளிவிவகார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையொன்றில் இத்தகவல் வெளியாகியுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-
தாய்லாந்தில் இடம்பெறும் சம்பவங்களை இலங்கை அரசு கூர்ந்து அவதானித்து வருகிறது. தாய்லாந்து மக்களின் அபிலாஷையைப் பிரதி பலிக்கும் வகையில் ஜனநாயகக் கோட்பாடுகளைக் கைக்கொள்வதற்கும், சட்ட ஒழுங்கு முறை

21 ஆம் பக்கம் பார்க்க

## பர்தாவை தடை செய்க

கொழும்பு, டிசெ. 17
"முஸ்லிம் பெண்கள் அணியும் பர்தாவை தேசிய அடையாள அட்டையிலிருந்து மட்டுமல்ல, இலங்கையிலிருந்தே மொத்தமாக இல்லாதொழிக்க வேண்டும்" எனப் பொது பல சேனாவின் நிறைவேற்றுக் குழு உறுப்பினரான பேராசிரியர் டிலாந்த விதானகே தெரிவித்தார்.

21 ஆம் பக்கம் பார்க்க

# திட்டமிட்டே றெக்ஷயனை ஈ.பி.டி.பியினர் கொன்றனர்

## *திடமாகக் குற்றஞ்சாட்டுகிறார் அவரது மாமியார் தனலட்சுமி*
## *தன் மகளுக்கும் கமலுக்கும் உறவே கிடையாது எனவும் மறுப்பு*

புங்குடுதீவு, டிசெம்பர் 17
நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் தானியேல் றெக்ஷயனை ஈ.பி.டி.பியினரே திட்டமிட்டுக் கொலை செய்தனர் என்று அவரது மாமியாரான கருணானந்த சிவம் தனலட்சுமி 'உதயன்' பத்திரிகையிடம் நேற்றுத் தெரிவித்தார். தனது மகளும் றெக்ஷயனின் மனைவியுமான அனித்தாவுக்கும் ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளரான கமல் எனப்படும் கந்தசாமி கமலேந்திரனுக்கும் இடையில் சட்டரீதியற்ற தொடர்பு இருந்ததாகப் பொலிஸார் கூறுவதையும் அவர் அடியோடு மறுத்தார்.

> "விடுதலைப் புலிகள் மீது பழியை விழுத்தும் விதத்தில் நீண்டகாலமாகத் திட்டமிட்டு இந்தக் கொலையை அவர்கள் செய்துள்ளார்கள் என்றும் அவர் குற்றஞ்சாட்டு.

"எனது மகளுக்கும் கமலுக்கும் இடையில் தொடர்போ உறவோ கிடையாது. அவர்கள் (ஈ.பி.டி.பி) எனது வீட்டுக்குள் வந்ததே கிடையாது. வீட்டின் அருகே றெக்ஷயன் தனக்கென ஏற்பாடு செய்து வைத்திருந்த கொட்டகைக்குத்தான் அவர்கள் வந்து

21 ஆம் பக்கம் பார்க்க

## போரழிவு மதிப்பீட்டில் தாமதம்

யாழ்ப்பாணம், டிசெ. 17
போர்ப் பாதிப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுவரும் மதிப்பீட்டு நடவடிக்கை எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமையுடன் நிறைவடையவுள்ள நிலையில், பெரும்பாலான கிராம சேவையாளர்கள் தமது கணக்கெடுப்பு நடவடிக்கைகளை இன்னும் நிறைவு செய்யவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும்நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையின் பரிந்துரைக்கு அமைவாக உள்நாட்டுப் போரினால் உயிரிழந்த அல்லது காயமடைந்த, அங்கவீனமடைந்த நபர்கள் மற்றும் சொத்துச் சேதங்கள் தொடர்பான கணக்கெடுப்பு நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
கிராம சேவையாளர்கள் வீடு வீடாகச் சென்று இந்த நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். கிராம சேவையாளர்கள் இல்லாத பிரதேசங்களில் பட்டதாரிப் பயிலுநர்கள் கணக்கெடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.
கடந்த நவம்பர் மாதம் 28 ஆம் திகதி ஆரம்பமான இந்த நடவடிக்கை எதிர்வரும் வெள்ளிக்கிழமையுடன் நிறைவடையவுள்ளது. இந்த நிலையில் பெரும்பாலான கிராம சேவகர்கள் கணக்கெடுப்பு நடவடிக்கைகளைப் பூரணப்படுத்தவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

21 ஆம் பக்கம் பார்க்க

## ஜெனிவாவில் நெருக்கடியை சமாளிக்க விசேட அறிக்கை

### *தயாரிப்பதில் அரசு தீவிரம்*

கொழும்பு, டிசெ. 17
ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச்சில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தொடரில் கடும் இராஜதந்திர நெருக்கடிகளை எதிர்நோக்கவுள்ள இலங்கை அரசு, அத்தகைய நெருக்கடிகளைச் சமாளிக்கும் வகையில் விசேடமான அறிக்கையொன்றை தயாரிக்கும் பணியில் தீவிரமாக இறங்கியுள்ளது என அறியமுடிகின்றது.
குறித்த அறிக்கையில், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் இதுவரையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள விதம், வடமாகாண சபையை நிறுவி அங்கு முன்னெடுக்கப்பட்டு வரும் செயற்பாடுகள், போர்க்கால இழப்பீட்டு தொடர்பில் முன்னெடுக்கப்படும் மதிப்பீட்டு நடவடிக்கை, காணாமற்போனோர் சம்பந்தமான ஜனாதிபதி ஆணைக்குழு உட்பட முக்கிய பல அம்சங்களை

21 ஆம் பக்கம் பார்க்க

## எங்கள் வாழ்வையே நாசமாக்கி விட்டனர்

### *றெக்ஷயனின் மகள் குமுறல்*

புங்குடுதீவு, டிசெ. 17
எங்கள் அம்மாவுக்கும் கமலுக்கும் தொடர்பு என்றுகூறி எங்கள் வாழ்க்கையையே நாசமாக்கிவிட்டார்கள் என்று கோபத்தில் கொந்தழிக்கிறார் றெக்ஷயனின் 16 வயது மகள். தற்போது ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை எழுதி வருகிறார் அவர்.
"அப்பாவைக் கொன்றது மட்டுமல்லாமல் அம்மாவையும் கேவலப்படுத்தி எங்கள் வாழ்க்கையை எதிர்காலத்தையே நாசப்படுத்திவிட்டார்கள். கட்சியை விட்டு விலகச் சொல்லி அவர்கள் அப்பாவைக் கட்டாயப்படுத்தியபோது கூட்டமைப்பில் போய் சேருங்கள் என்று அவரிடம் சொன்னோம். ஆனால் அவர் மறுத்துவிட்டார். அப்படிச் செய்தால் கொன்றுவிடுவார்கள் என்று சொன்னார். அதே நேரம் இருந்தாலும் கொன்றுவிடுவார்கள் என்றும் சொல்லியிருக்கிறார். அப்போது அதன் பாரதூரம் எனக்குப் புரியவில்லை. இப்போதுதான் அதன் அர்த்தம் புரிகிறது" என்றார் அவர். (உ-5)

## சர்வதேச நாடுகளை மிரட்டுகின்றது அரசு

### *இனியும் பொறுக்க முடியாது என்கிறார் மஹிந்த சமரசிங்க*

கொழும்பு, டிசெ. 17
இலங்கை மீது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளை முன்வைக்க மேற்குலக நாடுகள் இனியும் முயற்சித்தால், அந்நாடுகளில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் குறித்த தகவல்களை வெளியிட நேரிடும் என மனித உரிமை விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் விசேட பிரதிநிதியும் அமைச்சருமான மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.
மனித உரிமைகள் விவகாரத்தில் இலங்கைக்கு எதிராகக் குரல் கொடுக்கும் சில நாடுகளின் அரசமைப்பில் ஏனைய சமயங்களுக்கு இடமில்லை

21 ஆம் பக்கம் பார்க்க

## விவசாய அபிவிருத்திக்கே 2014 இல் அரசு முன்னுரிமை

### *நிதி அமைச்சின் செயலர் கூறுகிறார்*

யாழ்ப்பாணம், டிசெ 17
விவசாய அபிவிருத்திக்குரிய ஆண்டாகவே அடுத்த ஆண்டை தீர்மானித்து அதற்குரிய வகையிலேயே வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர வவுனியாவில் வைத்துத் தெரிவித்துள்ளார்.
வடக்கு மற்றும், வடமத்திய மாகாணங்களைச் சேர்ந்த அரச அதிபர்கள் மற்றும் அரச அதிகாரிகளுக்கு வரவு - செலவுத் திட்டம் தொடர்பிலான விளக்க கருத்தரங்கு வவுனியா கலாசார மண்டபத்தில் நேற்று திங்கள்கிழமை காலை இடம்பெற்றது. இதில் நிதியமைச்சின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர, பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின்

21 ஆம் பக்கம் பார்க்க

## திருமலைத் தாக்குதல் குறித்து நடவடிக்கை எடுக்கவேண்டும்

### *சம்பந்தன் ஜனாதிபதிக்கு கடிதம்*

கொழும்பு, டிசெ. 17
திருமலையில் கடந்த 10 ஆம் திகதி காணாமற்போனோரின் உறவுகள் நடத்திய போராட்டத்தின் போது தாக்குதல் நடத்தியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி உள்ளார்.
அந்தக் கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

21 ஆம் பக்கம் பார்க்க

# சரியான தயார்ப்படுத்தல் இல்லாவிடின் ஜெனிவாவில் இலங்கைக்கு நெருக்கடி

## எச்சரிக்கிறார் தயான் ஜயதிலக்க

கொழும்பு,டிசெ 17

ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் சபையின் கூட்டத்துக்கான தயார்ப்படுத்தல்களை இலங்கை முன்னரை விட அதிகமாக மேற்கொள்ள வேண்டும் என அரசியல் விமர்சகரும் முன்னாள் இராஜதந்திரியுமான கலாநிதி தயான் ஜயதிலக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

இல்லாவிட்டால் பிரதிபலன்கள் மிகவும் கடுமையானதாக இருக்கக் கூடும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ரோம் இணக்கப்பாடுகளில் இலங்கை கையெழுத்திடவில்லை என்பதால் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய முடியாது எனச் சிலர் கூறுகின்றனர்.

இவை அறியாமல் கூறும் கதைகள். உலகில் இருப்பது ஒருசர்வதேச நீதிமன்றம் அல்ல. யூகோஸ்லாவியாவின் முன்னாள் ஜனாதிபதி சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குக் கொண்டுசெல்லப்படவில்லை. இதற்குப் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட நீதிமன்றத்துக்கே அவர் கொண்டு செல்லப்பட்டார்.

சுமார் ஒரு வருடத்துக்கு முன்னர் தொலைக்காட்சி ஒன்றில் பேசிய சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் பிரதான பணிப்பாளர் மொரோனோ ஒக்கம்போ இலங்கைக்கு எதிரான வழக்குக் கோப்பு ஒன்று ஏற்கனவே திறக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

அதேவேளை போர்க்குற்றங்கள் மற்றும் ஏனைய மனித உரிமை மீறல்கள் தொடர்பில் எதிர்வரும் மார்ச் மாதத்திற்கு முன்னர் வெளிப்படையான சுயாதீனமான விசாரணை நடத்தப்படவில்லை என்றால் இலங்கை தொடர்பாக கடுமையான யோசனை முன்வைக்கப்படும் என பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்திருந்தார்.

இதனைச் சிறிய விடயமாக கருதிவிட முடியாது. கமரூன் கோமாளி அல்ல. அத்துடன் அவர் தனக்கு தெரியாமல் கடிதங்களை எழுதும் செயலாளர்களையும் அதிகாரிகளையும் வைத்திருப்பவர் அல்ல.

இலங்கை தொடர்பில் அவர் பிரிட்டன் நாடாளுமன்றத்தில் கருத்துக்களை முன்வைக்கும் போது இது அவரது அரசியல் கௌரவம் தொடர்பான பிரச்சினை.



இதனால் எதிர்வரும் மார்ச் மாதம் முழுமையான தரவுகளுடன் இலங்கைக்கு எதிரான யோசனை ஒன்று கட்டாயம் முன்வைக்கப்பட போவது உறுதியானது- என்றார். (த)

## ஆப்கான், சீசெல்ஸ் நாடுகளில் இலங்கையின் தூதரகங்கள்

கொழும்பு,டிசெ 17

ஆப்கானிஸ்தான் மற்றும் சீசெல்ஸ் ஆகிய நாடுகளில் புதிய தூதரகங்கள் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆப்கானிஸ்தானின் காபூல் நகரிலும் சீசெல்ஸின் விக்டோரியா நகரிலும் தூதரகங்கள் அமைக்கப்படவுள்ளன. இலங்கை வெளிவிவகார அமைச்சு இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

இந்த ஆண்டில் நைஜீரியா, உகண்டா, பஹ்ரெய்ன் ஆகிய நாடுகளில் இலங்கை தூதரகங்களை ஆரம்பித்திருந்தது.

இதற்கு மேலதிகமாக எதிர்வரும் ஆண்டு இந்தியாவின் கொல்கத்தாவில் துணைத் தூதரகம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. (த)

# துட்டகைமுனு மன்னனின் கிரீடத்தை விற்க முயன்ற இராணுவ அதிகாரி

கொழும்பு,டிசெ 17

30 கோடி ரூபா பெறுமதியான கீரிடம் ஒன்றை விற்பனை செய்ய முயற்சித்த ஓய்வுபெற்ற இராணுவ கேணல் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சுமார் 800 ஆண்டுகள் பழமையான கிரீடம் ஒன்றை ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி வர்த்தகர் ஒருவருடன் இணைந்து ஜப்பானியர் ஒருவருக்கு விற்பனை செய்ய முயற்சித்துள்ளார்.

தங்கத்தினால் செய்யப்பட்ட கிரீடத்தில் 35 மாணிக்கக் கற்கள் பதிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரின் அலுவலகம் தெரிவித்தது.

> “சுமார் 800 ஆண்டுகள் பழமை யான கிரீடம் ஒன்றை ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி வர்த்தகர் ஒருவருடன் இணைந்து ஜப்பானியர் ஒருவருக்கு விற்பனை செய்ய முயற்சித்துள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டதுடன் தங்கக் கிரீடமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தக் கிரீடம் துட்டகைமுனு மன்னனின் கிரீடமாக இருக்கலாம் எனத் தொல் பொருள் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். கிரீடத்தில் பொறிக்கப்பட்டுள்ள மாணிக்கக் கல் ஒன்றின் பெறுமதி சுமார் ஒரு கோடி ரூபா எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காகத் தொல் பொருள் திணைக்களத்தின் விசாரணைப் பிரிவுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (த)

## பொருளாதார நெருக்கடிக்குள் மக்கள்

### சொல்கிறார் சரத்

கொழும்பு,டிசெ.17

நாட்டுமக்கள் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கி வருகின்றனர் என்று ஜன நாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

மூன்றுவேளை சாப்பிடும் குடும்பங்களின் எண்ணிக்கை நாட்டில் குறைந்துள்ளது என்று அவர் கூறினார்.

95 வீதமான மக்களால் மூன்று வேளையும் உணவு சாப்பிட முடிவதில்லை என்று அவர் தெரிவித்தார். இதுவே நாட்டின் தற்போதைய அபிவிருத்தி என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கை அகதிகளுக்கு இந்தியக் குடியுரிமை

இராமேஸ்வரம்,டிசெ 17

தமிழர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்க வேண்டும் என்று வாழும் கலை மையத்தின் நிறுவுனர் ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இராமேஸ்வரம் மண்டபம் அகதிகள் முகாமுக்கு வாழும் கலை மையத்தின் நிறுவனரும் ஆன்மிகவாதியுமான ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் நேற்றுமுன்தினம் பயணம் ஒன்றை மேற்கொண்டார்.

அதன்போது அவர் அங்கு தங்கியுள்ள இலங்கை அகதிகளைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட அவர், இலங்கை தமிழர்கள் நீண்ட காலமாக அகதிகளாக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில், அவர்களுக்கு இந்தியக் குடியுரிமையை வழங்க வேண்டும். அல்லது, அவர்கள் கௌரவமாக வாழ வழிவகை செய்ய மத்திய அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார். (த)

## காணாமற் போனவர் நேற்று சடலமாக மீட்பு

புதுக்குடியிருப்பு, டிசெ.17

உறவினரின் பிதிர்க்கடனை நிறைவேற்றச் சென்று காணாமற்போன குடும்பஸ்தரின் சடலம் நேற்று திங்கட்கிழமை புதுமாத்தளன் கடற்கரையில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு கடலுக்கு உறவினரின் பிதிர்க்கடன் நிறைவேற்றுவதற்காக நேற்று முன்தினம் சென்ற குடும்பஸ்தர் கடலுக்குள் நீராடச் சென்ற போது காணாமற் போய்விட்டார்.

புதுக்குடியிருப்பு கோம்பாவில் இரண்டாம் வட்டாரத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் தவசீலன் (வயது 30) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே கடலில் ஏற்பட்ட சுழியில் அகப்பட்டு காணாமற் போயிருந்தார்.

இந்த நிலையில் இவரது சடலம் நேற்று மாலை புதுமாத்தளன் கடற் பகுதியில் கரையொதுங்கியிருந்தது. இது தொடர்பாகப் புதுக்குடியிருப்பு பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து பொலிஸாரால் சடலம் மீட்கப்பட்டு புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில்ஒப்படைக்கப்பட்டது. (த-400)

# நியமனம் கோரிப் போராட்டம் நேற்று ஐந்தாவது நாளாகவும்

## யாழ். போதனா வைத்தியசாலைத் தொண்டர்கள் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.17

இரண்டு வருடங்களுக்கு மேலாக பணிபுரிந்து வரும் எமக்கு சிறந்த அனுபவம் இருக்கிறது. கல்வித் தகமையைக் காரணம் காட்டி எம்மை புறக்கணித்தது எந்தவிதத்திலும் நியாயம் ஆகாது. நாங்கள் செய்யும் பணிகளையே தான் அவர்களும் செய்யவுள்ளனர். தவிர எமது அனுபவம்கூட அவர்களுக்கு இல்லை. இவ்வாறு தெரிவித்தனர் யாழ். போதனா வைத்தியசாலைத் தொண்டர்கள்.

தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி ஐந்தாவது நாளாகவும் நேற்று அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். நேற்றைய போராட்டத்தின் போது;

"எங்களை தொண்டராக பணிக்கு அமர்த்தும் போது 8 ஆம் தரச் சித்தி போதும் என்று கூறிய உங்கள் வார்த்தைகளை இன்று ஊமையாக்கி விட்டீர்களா?, எமக்குப் பெற்றுத் தாருங்கள் நியமனத்தை. சிந்தித்துப் பாருங்கள் நாங்கள் செய்த சேவைகளையும் உதவிகளையும், எமக்கு உதவி செய்ய யாருமேயில்லையா? ஒரு நாளுக்கு 175 ரூபா வீதம் பணியில் ஈடுபட்ட எமது எதிர்காலம் என்ன? குடும்பத்தோடு தற்கொலை செய்வதா?, நாங்கள் 6 வருடங்களாகச் செய்த வேலையை விட பொடங்களது சித்தி வேண்டுமா?, நாம் சேவை செய்து காலங்கள் கடந்தது தான் மிச்சம், எமது தாகங்கள் தணிக்கப்படவில்லை" உட்பட பல வாசகங்கள் உள்ளடங்கிய பதாகைகளைத் தொண்டர்கள் ஏந்தியிருந்தனர்.

தமது போராட்டம் குறித்து தொண்டர்கள் மேலும் தெரிவித்ததாவது;



வைத்தியசாலையில் சகல பிரிவுகளிலும் நாம் பணியாற்றி வருகிறோம். உணவு, தண்ணீரைக் கூட உரிய நேரத்தில் உண்டு குடித்திருக்கவில்லை. நோயாளர்கள் பாதிக்கப்படக் கூடாது என்று இரவுபகலாக வேலை செய்கிறோம். 5 மாடிக் கட்டடத் தொகுதிக்கு லிப்ற் அமைக்கும் வரை நாங்களே நோயாளர்களை மாடிப் படிகளூடாகக் காவிச் சென்றோம்.

தூர இடங்களைச் சேர்ந்த பெண்கள் பலர் யாழ்ப்பாணத்தில் அறை எடுத்து தங்கி இருந்து தொண்டர்களாகப் பணியாற்றி வருகிறார்கள். 175 ரூபா சம்பளம் அவர்களுக்கு எதற்குமே போதாது. வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களை சேர்ந்தவர்களே இந்த வேலையில் ஈடுபடுகிறோம். எமது குடும்பங்கள் எங்கள் வருமானத்திலேயே தங்கியிருக்கின்றன.

எம்மை தொண்டராக இணைக்கும் போது 8 ஆம் தரம் சித்தியடைந்திருந்தால் போதும் என்று தான் நிர்வாகத்தினர் கூறினர். இப்போது அது போதாது என்று தட்டிக் கழிப்பது எந்தவிதத்தில் நியாயமானது. கடந்த வருடம் நியமனம் செய்யப்பட்டவர்களில் பலர் 8 ஆம் தரச் சித்தி பெற்றிருக்கவில்லை. சித்தியடைந்த பலருக்கு இன்றுவரை நியமனம் வழங்கப்படவில்லை. ஜீ.சீ.ஈ உயர்தரம் சித்தியடைந்தவர்களுக்கு கூட இங்கு நியமனம் வழங்கப்படவில்லை. இவற்றை வைத்துப் பார்க்கும் போது எம்மீது பாரபட்சம் காட்டப்படுகிறது என்பது தெளிவாகிறது என்று தெரிவித்தனர்.

இதேவேளை போராட்டத்தில் ஈடுபட்டுவரும் தொண்டர்களுக்கு நியமனம் வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அமைச்சர்கள் முன்வரவேண்டும் என்று அரச தாதிய உத்தியோகத்தர்கள் சங்கமும் கோரிக்கை விடுத்துள்ளது. (ஐ-4)

# போகம்பரை சிறை ஜனவரியில் ஜனாதிபதியிடம்

கண்டி, போகம்பரை சிறைச்சாலை வளாகம் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவிடம் கையளிக்கப்படவுள்ளது என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் சந்திரரட்ன பல்லேகம தெரிவித்தார்.

போகம்பரை சிறைச்சாலை வளாகம் பல்லேகல திறந்த வெளிச் சிறைச்சாலை வளாகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள நிலையில் பழைய சிறைச்சாலை வளாகம் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளது.

'எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி மேற்படி போகம்பரை சிறைச்சாலை வளாகத்தை ஜனாதிபதியிடம் கையளிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். இவ்வருட இறுதிக்குள் இங்குள்ள சிறைக்கைதிகள் அனைவரையும் பல்லேகல சிறைச்சாலைக்கு இடமாற்றம் செய்து விட எதிர்ப்பார்க்கிறோம்' என்றும் சிறைச்சாலைகள் ஆணையாளர் குறிப்பிட்டார்.

மேலதிக நடவடிக்கைகள் அனைத்தும் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர நாடு திரும்பியதும் முன்னெடுக்கப்படும் என்றும் ஆணையாளர் கூறினார்.

# தமிழகத்துக்குள் ஈழப் போராளிகள்?

## இந்தியப் பொலிஸார் தீவிர தேடுதல்

கொழும்பு, டிசெ.17

இலங்கையில் இருந்து சட்டவிரோதமாக வந்ததாக கூறப்படும் தமிழ் அகதிகள் பலரைப் பிடிக்க தமிழகத்தில் தேடுதல்கள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

சாந்தன் என்ற இலங்கை அகதி ஒருவர் தனுஷ்கோடிக்கு அருகில் உள்ள அரிச்சல் முனை பகுதியில் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்ட பின்னரே இந்தத் தேடுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்துக்கு வந்த படகில் பலர் தம்முடன் பயணித்ததாக சாந்தன் பொலிஸாரிடம் கூறியுள்ளார்.

எனினும் அவர்கள் எங்கேயிருக்கிறார்கள் என்பது தமக்குத் தெரியாது என்றும் அவர் வாக்குமூலம் அளித் துள்ளார்.

இந்தநிலையில் படகில் வந்த ஏனையோர் போராளிகளாக இருப்பார்களா? என்ற சந்தேகம் தமிழக பொலிஸாருக்கு ஏற்பட்டுள்ளது.

## வாளுடன் பொலிஸிடம் சிக்கிய இளைஞர்கள்

வலி.தென்மேற்கு, டிசெ.17

இரவு நேரம் வாளுடன் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞர்கள் மூவர், ரோந்து சென்ற பொலிஸாரிடம் வகையாக மாட்டிக்கொண்டனர். வாளையும், மோட்டார் சைக்கிளையும் கைப்பற்றிய பொலிஸார் இளைஞர்கள் மூவரையும் கைது செய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

மானிப்பாய் பொலிஸார் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு நேரம் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது ஒரு மோட்டார் சைக்கிளில் இளைஞர்கள் மூவர் வருவதைக் கண்டு மறித்து சோதனை செய்த சமயம் உரப்பையில் வாள் மறைத்து வைத்திருந்தமை தெரியவந்தது.

வாளையும், மோட்டார் சைக்கிளையும் கைப்பற்றிய பொலிஸார் அவர்களைக் கைதுசெய்து பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

இதேவேளை கடந்த இரு மாதங்களுக்கு முன்பு ஆனைக்கோட்டைச் சந்தியில் கடமையில் நின்ற பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்களின் வாள்வெட்டுக்கு இலக்கானமை இங்கு குறிப்பிடத்தக்கது. (வ-115)

# அரசு மீது சர்வதேச விசாரணை அதுவே கூட்டமைப்பின் இலக்கு

*சொல்கிறார் மாகாண சபை உறுப்பினர் சிவமோகன்*

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகள் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசை சர்வதேச போர்க் குற்ற விசாரணைக்கு உட்படுத்துவதே இலக்காக இருக்க வேண்டும் என்று வடமாகாண சபை உறுப்பினர் வைத்தியக் கலாநிதி சி.சிவமோகன் தெரிவித்துள்ளார். தமது ஆதரவாளர்களுடனான சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சந்திப்பின் போது அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில்:-

எமது மண்ணில் இடம்பெற்ற கொடூரப் போரால் மரணித்த போராளிகள், பொது மக்கள் ஆகியோரின் ஆன்மாக்கள் சர்வதேசத்தின் மனச்சாட்சியைத் தட்டியெழுப்பியுள்ளன. இதனால் ராஜபக்ஷ தலைமையிலான அரசை சர்வதேச போர்க்குற்ற விசாரணைக் குட்படுத்த 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தை சர்வதேசம் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றது.


இதனால் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இருக்கும் எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கைகளும், அறிக்கைகளும் அது நோக்கியதாக இருக்க வேண்டும்.

"_"

**ராஜபக்ஷ தலைமையிலான அரசை சர்வதேச போர்க்குற்ற விசாரணைக் குட்படுத்த 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தை சர்வதேசம் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றது.**

இந்த விடயத்தில் எமது மக்களுக்காகப் போராடுகின்ற இந்திய மக்கள், தென்னிந்திய மீனவர்கள், புலம்பெயர் தமிழர்கள், ஜனநாயக பண்புகளை மதிக்கும் சிங்கள, முஸ்லிம் சகோதரர்கள் ஆகியோரின் மனங்களைப் புண்படுத்தும் அறிக்கைகளையோ அல்லது கருத்துக்களையோ கூட்டமைப்பு உறுப்பினர்கள் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

அரசு போர்க் குற்ற விசாரணையில் இருந்து தப்புவதற்காக எமக்கு ஆதரவாகச் செயற்படுபவர்களை எமது மக்களிடம் இருந்தும் கூட்டமைப்பிடம் இருந்தும் பிரித்து வைக்க முயன்று வருகின்றது. குறிப்பாக தென்னிந்திய மீனவர்கள் பிரச்சினையைக் கூட அரசு அவ்வாறு தான் கையாள முயல்கிறது. எனவே அந்த விடயத்தில் நாம் கவனமாக செயற்பட வேண்டும் - என்றார். (வ-402)



வலி.தென்மேற்கு கல்லுண்டாய் வெளியில் வகை தொகையின்றி மீண்டும் திண்மக் கழிவுகள் கொட்டப்படுகின்றன. கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக முறையான திண்மக் கழிவு முகாமைத்துவம் பின்பற்றப்படாமல் இருக்கும் நிலையை இது எடுத்துக்காட்டுகின்றது. கால்நடைகள் தாகத்தைத் தீர்க்க கழிவு குட்டையில் உள்ள நீரைப் பருகுகின்றன. (வ-50)

# முன்னுரிமை வழங்கப்பட்ட வீதிகளை உடன் புனரமைக்குக

*வடக்கு முதலமைச்சருக்கு கோரிக்கை*

யாழ்ப்பாணம், டிசெ.17

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட 28 கிராம அலுவலர் பிரிவுக்குள்ளும் இருக்கும் 247 வீதிகளில் புள்ளி ஒழுங்கில் முன்னுரிமை வழங்கப்பட்ட 50 வீதிகளையாவது 2014 இல் புனரமைத்து வழங்குங்கள்.

இவ்வாறு மானிப்பாய் பிரதேச சபை உறுப்பினர் சின்னத்துரை மகேந்திரன் வடக்கு மாகாண சபை முதலமைச்சர் க.வி.விக்கினேஸ்வரனுக்குக் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வருடாந்தம் வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்படுகிறது. இதற்கேற்ப உட்கட்டுமான அபிவிருத்தி இடம்பெறுவதில்லை.

கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் ஆரம்பித்த வீதி வலைப்பின்னல் திட்டம் வேலை முற்றுப் பெற்று எமது பிரதேச சபைக்குட்பட்ட வீதிகள் வலைப்பின்னல் திட்டத்தில் உள்வாங்கப்பட்டன. அவை யாவும் ஆராய்ச்சிக்குட்படுத்தப்பட்ட பின்னர் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவுள்ளன.

இவ்வாறு முன்னுரிமைப் பிரகாரம் தயாரிக்கப்பட்ட பிரதேச சபை வீதிகளில் முதல் 50 கிலோ மீற்றர் வீதிக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. ஆனால் இது வரை இந்த வீதி அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கீடுகள் பெற்றுத் தரப்படவில்லை.

வீதி விவரங்களைத் தொகுப்பதும், மதிப்பீடு செய்வதும், வரவு - செலவு திட்டத்தில் புகுத்துவதும் பின்னர் கைவிடுவதுமாகவே உள்ளன.

எனவே 2014 ஆம் ஆண்டில் கிராம அலுவலர் பிரிவுக்கு இரண்டு வீதி என்ற அடிப்படையில் 50 வீதிகளை மீள்புனரமைப்புச் செய்ய ஒதுக்கீடு செய்து தரவும் -என்றுள்ளது.

இதன் பிரதியை வீதி வலைப்பின்னல் திட்டத்தைத் தயாரித்த பெர்ணாண்டோ பிள்ளைக்கும் அனுப்பிவைத்துள்ளார். (வ-50)

# வட மாகாண பட்டதாரிகளுக்கு தகுதியான நியமனங்களை வழங்குக

*அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் வலியுறுத்து*

அம்பாறை, டிசெ.17

"வடமாகாண அரச அலுவலகங்களிலும், உள்ளூராட்சி மன்றங்களிலும் கீழ் நிலைப் பதவிகளில் அமர்த்தப்பட்டு கடமையாற்றும் பட்டம்பெற்ற பட்டதாரிகளை தகுந்த நியமனத்துக்குள் உள்வாங்கி நியமனம் வழங்கவேண்டும்".

இவ்வாறு அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம், வடமாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ள மனு ஒன்றில் வலியுறுத்தியுள்ளது.

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் சார்பில் தலைவர் எஸ்.லோகநாதன் பொதுச் செயலாளர் எம்.எம்.ஏ.வகாப் ஆகியோர் ஒப்பமிட்டு இந்த மனுவை அனுப்பி வைத்துள்ளனர்.

அந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"வடமாகாண அரச அலுவலகங்களிலும், உள்ளூராட்சி மன்றங்களான மாநகரசபை, நகரசபை, பிரதேச சபைகளிலும் பட்டதாரிகள் பலர் கீழ் நிலை பதவிகளில் அமர்த்தப்பட்டு கடமையாற்றுகின்றனர்.

இவ்வாறு கடமையாற்றுவோர் அலுவலகப் பணியாளர் சேவை குறிப்பிடுகின்ற பதவி களிலும், ஆயுள்வேத மருந்துக் கலவையாளர்களாகவும், வேறு பதவிகளிலும் பணியாற்றுகின்றனர்.

வடக்கில் நிலவிய போர் சூழ் நிலை மற்றும் குடும்ப கஷ்ட நிலை காரணமாக அவர்கள் இந்தப்பதவிகளையேற்று கடமையாற்றுகின்ற போதிலும் குறைந்த வேதனத்தையே பெற்றுக் கொள்கின்றனர்.

அவர்கள் பீ.ஏ.சி.06/2006 (IV) சுற்றறிக்கைக்கு அமைவாக பட்டதாரிகளுக்குரிய சம்பளத்தைப் பெறவில்லை என்பது கவலைக்குரிய விடய மாகும்.



"_"

**வடக்கில் நிலவிய போர் சூழ் நிலை மற்றும் குடும்ப கஷ்ட நிலை காரணமாக அவர்கள் இந்தப் பதவிகளையேற்று கடமையாற்றுகின்றபோதிலும் குறைந்த வேதனத்தையே பெற்றுக் கொள்கின்றனர்.**

இவ்வாறான பட்டம் பெற்ற பட்டதாரிகளின் விவரங்களைத் திணைக்கள ரீதியாகத் திரட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அத்துடன் இத்தகைய பட்டதாரிகளின் சேவைக்காலம் பாதிக்கப்படாத வகையில் வடமாகாணத்தில் காணப்படும் ஆளணிக்குள் அவர்கள் உள்வாங்கப்படல் வேண்டும்.

எதிர்காலத்தில் அவர்களது பதவிப்பெயரை, அபிவிருத்தி உத்தியோகத்தர், நிகழ்ச்சித் திட்ட உதவியாளர், நிதி உதவியாளர், கணினி தரவு இயக்குநர், பட்டதாரி ஆசிரியர் போன்ற வகுதிக்குள் உள்வாங்குவதற்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

மனித நேயத்தின் பால் எமது சங்கம் இந்தக்கோரிக்கையை முன்வைக்கின்றது - என்றுள்ளது. மனுவின் பிரதிகள் வடமாகாண முதலமைச்சர் மற்றும் மாகாண ஆளுநருக்கும் அனுப்பப்பட்டுள்ளதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் எம்.எம்.ஏ.வகாப் தெரிவித்தார். (வ-30)

## முதலமைச்சர் விக்னேஸ்வரனின் இணைப்புச் செயலர் திடீர் விலகல்

யாழ்ப்பாணம், டிசெ. 17

வடமாகாண முதலமைச்சரின் இணைப்புச் செயலாளராக நியமிக்கப்பட்டிருந்த வலி. வடக்கு பிரதேச சபைத் தலைவர் சோ.சுகிர்தன் தனது பதவியை விட்டு விலகியுள்ளார்.

நியமனம் வழங்கப்பட்ட இரண்டு மாத காலத்தினுள் அவர் பதவி விலகியுள்ளார். முதலமைச்சரின் இணைப்புச் செயலாளர்களில் ஒருவராக ஒக்ரோபர் மாதம் அவருக்கு நியமனம் வழங்கப்பட்டிருந்தது. அவரது பதவி விலகலுக்கான காரணம் எதனையும் முதலமைச்சர் அலுவலகம் தெரிவிக்கவில்லை.

இதேவேளை தனது பதவி விலகல் குறித்து இப்போதைக்குத் தான் கருத்து எதனையும் தெரிவிக்க விரும்பவில்லை என்று சுகிர்தன் உதயன் பத்திரிகையிடம் தெரிவித்தார். (உ-5)

# வலி.வடக்கில் மலேரியா இரத்தப் பரிசோதனை


வலி.தென்மேற்கு, டிசெ.17

குடாநாட்டில் இரண்டாவது மூளை மலேரியா நோயாளி இனங் காணப்பட்டதைத் தொடர்ந்து உஷார் அடைந்த சுகாதாரப் பிரிவினர் நோயாளியின் சுற்றாடலில் வசிப்பவர்கள் மத்தியில் இரத்தப் பரிசோதனையை மேற் கொண்டனர்.

வலி.வடக்கு பிரதேசத்தில் அளவெட்டி பகுதியில் வசிக்கும் 15 வயதுடைய சிறுவனே மூளை மலேரியா நோயால் பாதிக்கப்பட்டு தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

போர் சூழ்நிலை காரணமாகத் தமிழ் நாட்டுக்கு அகதிகளாகச் சென்று பழனி முகாமில் தங்கியிருந்த சிறுவனின் குடும்பத்தினர் 23 வருடங்களுக்குப் பின் கடந்த நவம்பர் மாதம் 16 ஆம் திகதி யாழ்ப்பாணம் வந்து அளவெட்டி கிராமத்தில் வசித்து வந்தனர்.

காய்ச்சலால் பாதிக்கப்பட்ட சிறுவன் சிகிச்சைக்காக தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்குச் சென்றபோது மூளைமலேரியா நோயால் பாதிக் கப்பட்டிருந்தமை தெரியவந்தது. சிறுவன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சைக்குட்படுத்தப் பட்டுள்ளார். அதையடுத்து குறித்த சிறுவன் வசிக்கும் சுற்றாடலில் வசிப்போர்கள் மத்தியில் இரத்தப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.



இதே வேளை, கடந்த இரு வாரங்களுக்கு முன்பு ஆபிரிக்க நாட்டிலிருந்து வந்த வட்டுக்கோட்டையைச் சேர்ந்த வாலிபரொருவரும் மூளை மலேரியா நோயால் பாதிக்கப்பட்டுச் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

குறித்த நோயாளிகளை இனங்கண்ட இடங்களில் சுகாதாரப் பிரிவினரால் இரத்தப் பரிசோதனை மட்டும் மேற்கொள்ளப்பட்டமை குறித்து அதிருப்தி தெரிவித்துள்ள மக்கள் அப்பகுதிகளில் மருந்து விசிறும் நடவடிக்கைகளையும் மேலதிக தடுப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர். (வ-115-86)

# போர்க்காலத்தைப் போன்று மீனவர் கடத்தப்படுகின்றனர்

*'ஜெ' குற்றச்சாட்டு*

போர்க்காலத்தைப் போன்று தமிழக மீனவர்களை இலங் கைக் கடற்படையினர் கடத்திச் செல்கின்றனர் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா குற்றம் சுமத்தியுள்ளார்.

இவ்வாறு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு அவர் எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தநிலையில் அயல்நாடு என்ற அடிப்படையில் இந்திய மத்திய அரசு இந்த ஏதேச் சாதிகாரப் போக்கைக் கண்டு கொள்ளாமல் இருக்கின்றது.

இந்த விடயத்தில் தலையிட்டால் இலங்கையுடனான உறவு பாதிக் கப்படும் என்று இந்திய மத்திய அரசு எண்ணுகின்றது என்றார்.

இது குறித்து ஜெயலலிதா பிரதமர் மன்மோகன் சிங்குக்கு கடு மையான வார்த்தைகளை பயன்படுத்திக் கடிதங்களை அனுப் பியுள்ளார்.

இலங்கை அரசின் முன்னால் இந்தியா துவண்டுபோயுள்ள தாகவும் அவர் விமர்சித்துள்ளார்.

மீனவர்களின் பிரச்சினைகளைக் களைவதற்காக இரண்டு நாட்டு மீனவர்கள் மத்தியில் பேச்சு ஒன்றை இந்திய மத்திய அரசால் ஏற்பாடுசெய்ய முடியாமல் போயுள்ளமையையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்தநிலையில் இலங்கைக் கடற்படை யால் 140 தமிழக மீனவர்கள் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (வ)

# திருவாதிரை உற்சவம்

யாழ்ப்பாணம்,டிசெ.17

நீர்வேலி தெற்கு ஞானவைரவர் ஆலயத்தில் நாளை புதன்கிழமை காலை திருவாதிரையை முன்னிட்டு விசேட அபிஷேகம் மற்றும் பூஜை வழிபாடுகள் இடம்பெறும். (கு-17)

* * *

யாழ்ப்பாணம்,டிசெ.17

நீர்வேலி கந்தசுவாமி கோயிலில் திருவாதிரையை முன்னிட்டு இன்று மாலை சுவாமி மஞ்சத்தில் வீதி வலம் வருவார். நாளை புதன் கிழமை காலை தீர்த்த உற்சவமும் நடைபெறும். (கு-17)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## அதிரடி மலிவு விற்பனை

மாங்களா

சகல தளபாடங்களுக்கும்
10% – 50% விலை குறைப்பு
தெரிவுக்கு முந்துங்கள்

10% – 50% கழிவு

NIPPON ARPICO Nilkamal DAMRO

இல. 536, கே.கே.எஸ் வீதி, மனோகராச் சந்தி, யாழ்ப்பாணம்.
021 – 2228367, 0777 286069

## மரண அறிவித்தல்



### கந்தவனம் அருமைத்துரை

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தவனம் அருமைத் துரை நேற்று (16.12.2013) திங்கட்கிழமை கால மானார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிங்கம் லேன்
உடுவில் சுன்னாகம்.

தகவல்: பிள்ளைகள். 077 1387886

## மரண அறிவித்தல்

### திருமதி வள்ளியம்மை கதிர்காமு



யாழ். மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும், இள வாலையை வசிப்பிடமாகவும், பிரான்ஸை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட வள்ளியம்மை கதிர்காமு அவர்கள் (14.12.2013) சனிக்கிழமை அன்று பிரான் சில் காலமானார்.

அன்னார் திரு திருமதி வல்லிபுரம் தம்பதியரின் அன்புப்புதல்வியும் திரு திருமதி கந்தப்பிள்ளை தம்பதி யரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற கதிர் காமுவின் அன்புமனைவியும் கருணாகரன் (நோர் வே), பிரபாகரன் (கனடா), பிறேமாவதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தாயும் காலஞ் சென்ற வயிர முத்து, தெய்வானைப்பிள்ளை, கதிர வேற்பிள்ளை, பொன்னம்மா, சின்னத்துரை, தேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவராணி, சுதாசினி, கையலாயநாதன் ஆகியோரின் அன்பு மாமியும் இராஜேஸ்வரி, நகுலேஸ் வரி காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, இரத்தினம் ஆகியோரின் மைத்துனியும் வரதராசா, தர்மராசா காலஞ்சென்ற சிவராசா, ஜெயராசா, ஜெயசித்ரா, ஜெயலலிதா, அஜந்தினி, லவக்குமார், சதீஸ்குமார் ஆகியோரின் அன்புமாமியும் கலைவாணி, கஜமுகன் காலஞ்சென்ற நாராயணி ஆகியோரின் பெரிய தாயும் வாகினி சுபாங்கன், கோபிதன், ஜஸ்மிதன், லக்சனா ஆகியோரின் அன்பு அப்பம்மாவும் சாரங்கன், விதுசன், தீபிகா ஆகியோரின் ஆருயிர் அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.


இந்த அறிவித்தலைஉற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். தகவல்: இ.கஜமுகன்

தொடர்பு : கைலாயநாதன் (பிரான்ஸ்)

தொலைபேசி : +33148030541 செல்லிடப்பேசி : +33651899094

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### கதிர்காமு முருகேசு (சிவபாதம்)



தோற்றம் 18 . 12 . 1955

மறைவு 17 . 12 . 2005

எங்கள் குடும்ப விளக்காய்
வாழ்ந்திட்ட எங்கள் தம்பியே
உறவுகள் இருந்தாலும்
நீர் இருக்கிற மாதிரி இல்லை தம்பி
என்றும் உன் பாசம் எங்களை
விட்டு அகலாது தம்பி

நாகர் கோயில் கிழக்கு, நாகர்கோயில்

அன்பின் சகோதரிகள்,
இராசமலர், நாகேஸ்வரி,
மருமகன், மனைவி

## மரண அறிவித்தல்

### நடராசா சிவயோகராசா

(களஞ்சிய காப்பாளர், லங்கா சிமெந்து லிமிட்டெட், சுன்னாகம் மின்சாரசபை)



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், கந்த ரோடையை வசிப்பிட மாகவும் கொண்ட நட ராசா சிவயோகராசா நேற்று (16.12.2013) திங்கட் கிழமை கால மானார்.

அன்னார் நடராஜா - சிவமணி தம்பதியரின் மக னும் ஜெயந்திமாலாவின் அன்புக்கணவரும் யசோ தராஜா, ராமகிருஷ்ணராஜா, துர்க்கா ஆகி யோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2013) செவ்வாய்க்கிழமை பி.ப. 4 மணியள வில் அவரது இல்லத்தில் நடை பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கந்தரோடை,
சுன்னாகம்

தகவல்: நந்தன்.
(072 7734676)

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் பஞ்சலிங்கம் செல்வராஜன்

திதி : பூரணை

தோற்றம் 13.06.1946

மறைவு 20.12.2010



ஆண்டுகள் மூன்று சென்றாலும்
ஆறவில்லை உங்கள் நினைவுகள்
என்றும் எம்மை விட்டகலாத தெய்வமே
உங்கள் ஆத்மா சாந்தியடை இறைவனை வேண்டுகின்றோம்.

ஏழாலை மேற்கு,
ஏழாலை

என்றும் நினைவுடன்
குடும்பத்தினர்.

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை 10 ஆம் நாள்



ஆவரங்கால் பார்வதி பத் தினி சமேத ஸ்ரீ இராமலிங்க நடராஜப் பெருமானை மூப் பேறு திருமேனி விண்டிய சிவாச்சாரிய பெருந்தகை

அமரர்

### வே. நடராஜக்குருக்கள்

அவர்களின் பத்தாவது நாளாகிய இன்று (17.12.2013) செவ்வாய்க்கிழமை அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வள்ளி மண வாளனாகிய கந்தவேற் பெருமானைப் பிரார்த்திக் கின்றோம். ஓம் சாந்தி

இராஜேந்திர சுவாமிநாதக்குருக்கள்
பாலமுருகன் சர்மா
நீர்வையூர் அந்தண சமூகம்

நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தானம்

## மரண அறிவித்தல்

### திருமதி மேரிமக்டலின் (சந்திரா) ஜெயசிங்கம்



மேரிமக்டலின் (சந்திரா) ஜெயசிங்கம் நேற்று (16.12.2013) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஜெயசிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை-இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், S. அல்பிரட் (ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்), சறோஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும், றமணன், லக்சிகா, நிருபா (ஆசிரியை, ஞானக்குழந்தை இல்லம்) ஆகியோரின் அன்புத் தாயும், N.S. அன்ரனிப் பிள்ளை, N.S. மரியநாயகம், ஜெயராணி, ஜெயமணி, ஆகியோரின் மைத்துனி யும், T. இராச நாயகம்-இராசமணி தம்பதியரின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (17.12.2013) செவ்வாய்க்கிழமை பி.ப.3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று சென் நீக்கிலஸ் தேவாலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நாவாந்துறை சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 37/6, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
பிஸ்மார்க் (றமணன்)

## 45 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

### அமரர் கனகலிங்கம் சிவலிங்கம்

தோற்றம் 1966.02.06

மறைவு 2013.11.03



அன்னாரின் பிரிவால் நாம் துயரடைந்து இருந்த போது இறுதி நிகழ்வில் கலந்து கொண்டோர்கள் மற்றும் கண்ணீர் அஞ்சலி செலுத்தியோர் அத்துடன் தொலைபேசி மூலமாக துயர்பகிர்ந்தோர் மற்றும் அனைத்து வழிகளிலும் எமது துயரில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (17.12.2013) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மா சாந்திப் பிரார்த்தனை யிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம். இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

இல. 6A, 4 ஆம் குறுக்குத் தெரு, கொழும்புத் துறை.

குடும்பத்தினர்.

## விற்பனைக்கு

நல்ல இன நாய்க்குட்டி விற்பனைக்குண்டு. (ஜேர்மன் செப்பேட்)

தொடர்பு: 077 6450801 (சின்னப்பா வீதி, நவாலி)

## வீடு விற்பனைக்கு உண்டு

"வெள்ளியம்பதி" அளவெட்டி வடக்கில் 4 அறைகள் கோல் உட்பட உள்ள வீடு விற்பனைக்குண்டு.

T.P. No: 077 8923480

## காணி விற்பனைக்கு உண்டு

மருதனார்மடம் உரும்பிராய் றோட்டில் 20 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. அண்ணா பாம் அருகில்

தொடர்பு: 075 0415775

## தவறிவிட்டது

மாணிக்கம் கிருஸ்ணவேல் என்பவரின் லைசன்ஸ் சாவகச்சேரிக்கும், சங்கத்தானைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதபவம்.

T.P : 077 3650940

5000 சதுர அடிக்கு மேற்பட்ட பழைய மாடி கட்டடம் இடித்து எடுத்து செல்லலாம். வீட்டுடன் கதவு, ஜன்னல், நிலைகள் அனைத்தும் உள்ளது.

தொடர்பு: 077 2349933

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நல்லூர் வைமன் வீதியில் 2 3/4 பரப்புடன் 5 அறைகள் கொண்ட சகலவசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 3477498

## குப்பிளானில் கர்ப்பிணிக்கு டெங்கு

வலி.வடக்கு, டிசெ.17
கர்ப்பிணி ஒருவர் டெங்கு நோய் தாக்கத்துக்கு உள்ளாகிய நிலையில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சனிக்கிழமை சேர்க்கப்பட்டார். குப்பிளான் வடக்கைச் சேர்ந்த 30 வயது நிரம்பிய பெண் மணியொருவரே மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவராவார். குறித்த கர்ப்பிணிப் பெண் டெங்கு நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகியமை இனம் காணப்பட்டதை தொடர்ந்து அந்தப் பகுதியில் புகையூட்டும் நடவடிக்கை உடுவில் சுகாதார வைத்தியதிகாரி தலைமையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (வ-86)

# நிபந்தனைக்கு அமைய இடமாற்றக் கொள்கை

## *வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் ஏற்பாடு*

அச்சுவேலி, டிசெ.17
வடக்கு மாகாண பாடசாலைகளில் ஆசிரியர், அதிபர்களின் ஆளணியை குறித்த நிபந்தனைகளுக்கு அமைய சீராக்கம் செய்வதற்குப் பொருத்தமான வகையில் இடமாற்றக் கொள்கை உருவாக்கப்பட்டுஅதன் அடிப்படையில் ஆசிரி யர்கள்- அதிபர்களின் இட மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வுள்ளன.
இதற்கான ஏற்பாடுகளை வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.
வடக்கு மாகாண ஆசிரியர் இடமாற்றக் கொள்கை உருவாக்கம் தொடர்பாக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா இவ்வாறு தெரி வித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:
வடக்கு மாகாண பாடசாலைகளில் ஆசிரியர் இடமாற்றம் தொடர்பாக நிலவிவரும் நடைமுறைச் சிக்கல்களை சீராக்கம் செய்வதற்கு பொருத்தமான நடைமுறை ஒழுங்குகளை உள்ளடக்கியதாகஇடமாற்றக்கொள்கை உருவாக்கப்படுகின்றது.
அதிபர்கள், ஆசிரியர்களின் கஷ்டப் பிரதேச அதிகஷ்டப் பிரதேச கடமைக்காலம் மற்றும் வசதியான, மிகவசதியான பாடசாலைகளின் கடமைக் காலம்என் பன வடக்கு மாகாண பாடசாலைகள் மற்றும் களநிலைக்கு அமைவாக உருவாக்கப்பட்டு நடைமுறைப் படுத்தபடவுள்ளன.
ஆசிரியர் அதிபர்களின் இடமாற்றம் தொடர்பான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் ஒழுங்குமுறை, இடமாற்றச் சபைகளின் அனுமதியை பெற்றுக் கொள்ளல், கஷ்ட, அதிகஷ்ட, வசதியான, மிக வசதியான பாடசாலைகளில் கடமை புரிய வேண்டிய கால அளவு மற்றும் இடமாற்ற நடைமுறை ஒழுங்கு, மேன்முறையீடு செய்வது தொடர்பான ஒழுங்கு விதி முறை, கால அளவு அடிப் படையில் அதிபர், ஆசிரி யர்கள் சேவை புரிவதை ஒழுங்கமைக்கப்பட்ட முறை யில் நடைமுறைப்படுத்தல் என்பன வரையறை செய்யப் பட்டு இடமாற்றக் கொள்கையின் விதிமுறைகள் கண்டிப்பான முறையில் பின்பற்றப்படவுள்ளன என்றார்.

"_"
**பொருத்தமான வகையில் இடமாற்றக் கொள்கை உருவாக்கப்பட்டு அதன் அடிப்படையில் ஆசிரியர்கள்- அதிபர்களின் இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.**

இதேவேளை, கடந்த காலங்களில் இடமாற்றங்களை நடைமுறைப்படுத்தலில் நிலவிய அரசியல் தலையீடு மற்றும் அதிகாரத் துஷ்பிரயோகம் போன்ற நிலைப்பாடுகள் எதிர்காலத்தில் செசல்வாக்கு செலுத்த முடியாத சமூக நிலை நிலவுவதால் ஆசிரியர், அதிபர் இடமாற்றம் நியாயமான முறையில் மேற்கொள்ளப்படும் என்று ஆசிரியர் சமூகம் நம்பிக்கை தெரிவிக்கின்றது. (வ-11)

## யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளராக குகநாதன்

யாழ்ப்பாணம், டிசெ.17
யாழ்.மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளராக மீண்டும் பொ.குகநாதன் நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன் தற்போதைய உதவித் தேர்தல்கள் ஆணையாளர், தலைமைத் தேர்தல்கள் திணைக்களத்துக்கு மாற்றம் செய்யப் பட் டுள்ளார்.
யாழ்.மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளராகப் பணியாற்றிய பொ.குகநாதன் கடந்த வருட ஆரம்பத்தில் முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலராக இடமாற்றம் செய்யப்பட்டதுடன், யாழ்.மாவட்ட உதவித் தேர் தல்கள் ஆணையாளராக சி.அச்சுதன் நியமிக்கப்பட் டிருந்தார்.
இந்த நிலையில் கடந்த 15 ஆம் திகதி முதல் யாழ்.மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளராக பொ.குகநாதன் மீண்டும்நியமிக்கப்பட்டுள்ளார். இது வரை காலமும் இந்தப் பதவியில் இருந்த சி. அச்சுதன் தலைமைத் தேர்தல்கள் திணைக்களத்தின் நிர்வாக உதவித் தேர்தல்கள் ஆணையாளராக நியமிக்கப் பட்டுள்ளார். (வ-5)



## வலி.மேற்குபிரதேச சபையின் வருமானப் பகுதி கணினிமயம்



யாழ்ப்பாணம், டிசெ.17
வலி.மேற்கு பிரதேச சபையின் வருமானப் பகுதி விரைவில் கணினி மயப்படுத்தப் படவுள்ளது.
இதற்கான ஒத்துழைப்பை வழங்க ஆசியான் நிதிய உள்ளூராட்சி சிரேஷ்ட ஆலோசகர் உறுதி யளித்துள்ளார் என்று வலி.மேற்கு பிரதேச சபை தவிசாளர் திருமதி நா.ஐங்கரன் தெரி வித்துள்ளார்.
வலி.மேற்கு பிரதேச சபை 25 கிராம அலுவலர் பிரிவுகளையும் சுழிபுரம், சங்கானை, வட்டுக்கோட்டை, அராலி ஆகிய நான்கு உப அலுவலகங்களைக் கொண்ட பரந்த பிரதேசம்.
இதில் 22, 343 ஆதனங்களை வருமான நோக்கத்தை எய்தும் பொருட்டு கணினி மயப்படுத்த வேண்டியுள்ளது என்று அவர் மேலும் கூறினார். (வ-50)

## இந்து மகா சபை ஏற்பாட்டில் பாதயாத்திரை

வலி.வடக்கு, டிசெ.17
திருவெம்பாவையை முன்னிட்டு இந்து மகா சபையின் ஏற்பாட்டில் சித்தன்கேணி சிவன் ஆலயத்திலிருந்து பாதயாத்திரை நேற்று திங்கட் கிழமை காலை 8 மணிக்கு காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் என்று அழைக்கப்படும் காரைநகர் சிவன் கோயிலுக்கு புறப் பட்டது.
சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியத் தலைவர் வாசுதேவக் குருக்களின் ஆசியுடன் பாதயாத்திரை ஆரம்பமாகியது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வலி.மேற்கு பிரதேசசபைத் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன், சபை உறுப்பினர் த.நடனேந்திரன் உட்பட மற்றும் இந்து சமய அமைப்புக்களின் பிரதிநிதிகள், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், பொதுமக்கள், இளைஞர்கள், யுவதிகள் என சுமார் எழுநூற்று ஐம்பதுக்கும் மேற்பட்டோர் பாதயாத்திரையில் கலந்துகொண்டனர்.
காலையில் புறப்பட்ட இந்தப் பாதயாத்திரை சித்தன்கேணி சிவசிதம்பரேஸ்வரர் ஆலயம், சித்தன்கேணி பிள்ளையார் ஆலயம், தொல் புரம் வழக்கம்பரை முத்து மாரியம்மன் ஆலயம், சுழி புரம் பெரியபுலோ ஞானவைரவர் ஆலயம், சுழிபுரம் மேற்கு அரிஹரபுத்திர ஐயனார் ஆலயம், சுழிபுரம் பறாளை விநாயகர் ஆலயம், முருகன் ஆல யம், பனிப்புலம் முத்துமாரி யம்மன் ஆலயம், சம்பில் துறை சம்புநாதேஸ்வரர் ஆல யம், பொன்னாலை வரத ராஜப் பெருமாள் ஆலயம், காரைநகர் வலந்தலை மடத் துக்கரை முத்துமாரியம்மன் ஆலயம் ஆகியவற்றினூடாக காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் ஆலயத்தை சென்றடையவுள் ளது.
சுமார் பதினெட்டு கிலோ மீற்றர் தூரம் வரை இந்த பாதயாத்திரை நடைபெறுகின்றது. (வ-86)

## 90 முன்பள்ளிகள் சமச்சீர் கல்வி அலகுத் திட்டத்தில்

### *அடுத்த வருடம் முதல் நடைமுறைக்கு என்கிறார் வலயக் கல்விப் பணிப்பாளர்*

தென்மராட்சி, நவ.17
தென்மராட்சி கல்வி வலயப் பிரிவில் உள்ள 90 முன்பள்ளிகளும் அடுத்த ஆண்டு தொடக்கம் ஒரே கல்வி அலகுத் திட்டத்தின் கீழ் செயற்படவுள்ளன.
இதற்கான ஏற்பாடுகள் வலயக் கல்வி அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
இவ்வாறு தென்மராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர்சு.கிருஷ்ணகுமார், தென்மராட்சி கலை மன்ற கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற புவேந்தன் பாலர் பகல்பராமரிப்புநிலைய ஆண்டு விழாவில் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-
சிறார்களை சமூகத்துடன் இணைக்கும்முன்பள்ளிக்கல்வி அவர்களது எதிர்காலத்துக்கு இடப்படும் அத்திபாரம் போன்றது. இதனால் பிரதேசத்தில் உள்ள அனைத்து முன்பள்ளிகளிலும் ஒரே வகையான கல்வி அலகை மேற்கொண்டால் தரம் ஒன்றில் மாணவர்கள் இணையும் போது சமச்சீரான தொடர் கல்வியைப் பெற முடியும். அதற்கான திட்ட வரைவுகள் வலயத்தால் தயாரிக்கப்பட்டுள்ளன. இது அடுத்த ஆண்டு தொடக்கம் முன்பள்ளிகளில் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது - என்றார்.

"_"
**சிறார்களை சமூகத்துடன் இணைக்கும் முன்பள்ளிக் கல்வி அவர்களின் எதிர்காலத்துக்கு இடப்படும் அத்திபாரம் போன்றது.**

இதேவேளை சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தின் கலை விழா நேற்று முன்தினம் சாவகச்சேரி சிவன் கோயில் வீதியில் உள்ள தென்மராட்சி கலை மன்ற கலாசார மண்டபத்தில் இடம் பெற்றது.
நிலையத் தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் ஆசியுரையை பண்டிதர், கலாநிதி சிவஸ்ரீ கு.து.ஜெகதீஸ்வரக் குருக்கள் நிகழ்த்தினார்.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு சேவைகள் திணைக்கள ஆணையாளர் சு.விஸ்வரூபனும், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார், உளநல மருத்துவ நிபுணர் எஸ்.சிவயோகன், தென்மராட்சி பிரதேச நிலையப் பொறுப்பு நன்னடத்தை அலுவலர் ப.விக்னராஜா, முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.பாக்கியராஜா, வடமாகாண சான்று பெற்ற பாடசாலைஅதிபர்க.சிவகுரன்ஆகியோரும் கலந்து கொண்டனர்.
விருந்தினர்கள் சாவகச்சேரி சிவன் கோயிலிருந்து சிறார்களின் 'பாண்ட்' வாத்திய இசையுடன் விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.
சிறார்களின் கலை நிகழ்வுகளுடன் விருந்தினர்களின் உரைகளும் இடம்பெற்றன.
அடுத்த வருடம் பாடசாலைகளில் தரம் 1 வகுப்பில் இணையவுள்ள சிறார்கள் ஞாபகார்த்த பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.
அத்துடன் தொலைத் தொடர் பாடல் அமைச்சால் நிலையச் சிறார்களுக்கு சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க 'நெசனல' கணினிக் கூடத்தில் நடத்தப்பட்ட கணினிப் பயிற்சியில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (வ-9)

## இந்தியா செல்வோருக்கு மலேரியா தடுப்பு சிகிச்சை

*வலி.வடக்கு, டிசெ.17*
*சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்து இந்தியாவுக்கு பயணத்தை மேற்கொள்வோருக்கு மலேரியா கட்டுப்பாட்டு மருந்து குளிசை கொடுத்துவிடும் நடவடிக்கைகள் சுகாதார வைத்தியதிகாரியால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் கடந்த காலத்தில் மலேரியா நோய்த்தாக்கத்துக்கு உள்ளாகியோர் சிலர் இனம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் இந்தியா சென்று திரும்பியவர்கள் என்று இனம் காணப்பட்டுள்ளது.*
*இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் இருந்து ஐயப்ப சுவாமி உற்சவத்துக்கும் ஏனைய யாத்திரைகள் உட்பட சுற்றுலா செல்பவர்களும் ஏற்கெனவே மலேரியாவுக்கு எதிரான தடை மருந்துகளை பெற்று உட்கொண்டு சென்று திரும்புவதன் மூலம் யாழ்ப்பாணத்தில் மலேரியா பரவுவதைத் தடுக்க முடியும் என்ற அடிப்படையில் இந்த நடவடிக்கையை சங்கானை சுகாதார வைத்தியதிகாரி மேற்கொண்டுள்ளார்.*
*இன்று இந்த நடவடிக்கை சங்கானை சுகாதார வைத்தியதிகாரி பணிமனையில் ஆரம்பமாகவுள்ளதாகவும், இந்தியா செல்லவுள்ளவர்கள் இதனைக் கடைப்பிடிப்பது அனைவருக்கும் பாதுகாப்பு என்றும் சங்கானை பிரதேச சுகாதார வைத்தியதிகாரி தெரிவித்துள்ளார்.*
*(வ-86)*

# மீனவர்கள் பிரச்சினையில் 'ஜெ'க்கு அக்கறையில்லை

## குற்றஞ்சாட்டுகின்றார் நாராயணசாமி

புதுச்சேரி, டிசெ.17

தமிழக மீனவர் பிரச்சினை தொடர்பாக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு கடிதம் எழுவதோடு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா நிறுத்திக் கொள்கின்றார். அதுகுறித்து ஆக்கபூர்வமான நடவடிக்கை எதையும் அவர் எடுக்கவில்லை என்று குற்றஞ்சாட்டியுள்ளார் மத்திய இணை அமைச்சர் நாராயண சாமி.



புதுச்சேரியில் ஊடகவியலாளர்களைச் சந்தித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இந்தவிடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கைக் கடற்படையினர் மற்றும் அந்த நாட்டு மீனவர்களால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதைத் தடுக்க இரு நாட்டு மீனவர் பிரநிதிகளும் பேச்சு நடத்துவதே சிறந்த தீர்வாக அமையும். அதற்கான திகதி மற்றும் நிகழ்ச்சி நிரலை தமிழக அரசே முடிவு செய்ய வேண்டும். அதுகுறித்து தமிழக அரசுக்கு அறிவுறுத்தியுள்ள போதும் இதுவரை பேச்சுக்கான திகதி தமிழக அரசால் முடிவு செய்யப்படவில்லை.

தமிழக மீனவர்கள் தாக்கப்படும் விடயத்தில் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு கடிதம் எழுவதோடு முதலமைச்சர் ஜெயலலிதா நிறுத்திக் கொள்கின்றார்.

அந்தப் பிரச்சினை குறித்த ஆக்கபூர்வமான நடவடிக்கை எதையும் அவர் முன்னெடுப்பதாகத் தெரியவில்லை.

இந்திய மத்திய அரசைக் குற்றஞ்சாட்டுவதை விடுத்து இரு நாட்டு மீனவர் பிரநிதிகளுக்கிடையிலான பேச்சுக்களைத் துரிதப்படுத்துவதே இந்தப் பிரச்சினைக்குச் சிறந்த தீர்வாக இருக்கும்" என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

# காங்கிரஸுடன் இனிமேல் கூட்டணி என்பது இல்லை

## தி.மு.க. திட்டவட்டம்

சென்னை, டிசெ.17

எமக்குத் துரோகம் இழைத்த காங்கிரஸ் கட்சியுடன் இனிமேலும் கூட்டணி அமைக்கத் தயாராக இல்லை என்று தெரிவித்துள்ளார் தி.மு.க. கட்சியின் தலைவர் மு.கருணாநிதி.

நாடாளுமன்றத் தேர்தல் குறித்து ஆராய்வதற்காக நேற்று முன்தினம் நடைபெற்ற தி.மு.க. பொதுக்குழுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,

"அண்மைக் காலங்களில் ஊடகங்களில் வரும் செய்திகளை வைத்து நரேந்திர மோடி குறித்து நீங்கள் பேசுகிறீர்கள். ஆனால் எமக்கு அந்தச் சலனம் ஏற்படவில்லை. பாரதிய ஜனதாக் கட்சி எம்முடன் கூட்டணி வைக்காத கட்சி இல்லை. பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர்களான வாஜ்பாய், அத்வானி ஆகியோர் கண்ணியமான தலைவர்கள். அவர்கள் இருவரும் எந்தக் கோரிக்கை வைத்தாலும் நிறைவேற்றிக் கொடுத்து இருக்கிறார்கள். அந்த வகையில் அவர்களை மதிப்புமிக்க தலைவர்களாகவே கருதுகிறோம்.

ஆனால் அப்போது இருந்த பாரதிய ஜனதா வேறு. தற்போதுள்ள பாரதிய ஜனதா வேறு. கூட்டணி குறித்துப் பேசும்போது அந்தக் கட்சியின் தலைமை யார்? என்பதைப் பார்க்க வேண்டும். அதிலிருந்து வித்தியாசங்களை உணர முடியும். நாடாளுமன்றத் தேர்தலில் கூட்டணியே இல்லை என்று சொல்லவில்லை. குழு அமைக்கப்பட்டுள்ளது. அந்த குழு கூட்டணி குறித்து முடிவு செய்யும். எமக்குத் துரோகம் செய்த காங்கிரஸுடன் இனிமேல் கூட்டணி கிடையாது. காங்கிரஸுடன் கூட்டணி வைத்துக் கொள்வோம் என்று நீங்கள் ஒரு போதும் எண்ண வேண்டாம். ஊழல் குற்றச்சாட்டில் கனிமொழிக்கு களங்கம் விளைவித்தும், ஆ.ராசா மீது பழி சுமத்தியும், தயாளு அம்மாளுக்கு துயரத்தை ஏற்படுத்தியதோடு கட்சிக்கும் களங்கம் விளைவித்தவர்கள், எம்மைப் பலிக்கடாவாக மாற்றிவிட்டு அவர்கள் தப்பித்துக் கொண்டார்கள். அந்த வழக்கு இன்னமும் நடக்கிறது. சி.பி.ஐ. யாருடைய நிர்வாகத்தில் உள்ளது என்பது உங்களுக்குத் தெரியும்.

பூஜ்ஜியங்களை போட்டு ஊழல் குற்றச்சாட்டில் தி.மு.க.வை சிக்க வைத்து விட்டார்கள். தனித்து நின்று தேர்தலை சந்திக்கும் தைரியம் நமக்கு உண்டு. கழகம் நிறுத்தும் வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்ய வேண்டும். கடைசி வரை ஒற்றுமையாக இருந்து கட்சியின் வெற்றிக்கு உழைக்க வேண்டும்" - என்று தெரிவித்தார். (ற)

# மோடியை எதிர்க்கின்றார் கெஜ்ரிவால்

புதுடில்லி, டிசெ.17

அடுத்தாண்டு நடைபெறவுள்ள இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடியை எதிர்த்துக் களமிறங்கவுள்ளார் ஆம் ஆத்மி கட்சியின் தலைவர் அரவிந்த் கெஜ்ரிவால்.

ஊழலுக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட அரவிந்த் கெஜ்ரிவாலின் ஆம் ஆத்மி கட்சி புதுடில்லி சட்ட சபைத் தேர்தலில் 28 இடங்களில் வெற்றி பெற்றது. முதல்முறையாக தேர்தலைச் சந்தித்த அந்தக் கட்சி, செல்வாக்குப் பெற்ற கட்சியான காங்கிரஸை 3ஆவது இடத்துக்கு தள்ளியது.

இந்த நிலையில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலிலும் அந்தக் கட்சி போட்டியிடவுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. ராகுல் காந்தியை எதிர்த்து ஆம் ஆத்மி கட்சி போட்டியிடும் என்று ஏற்கனவே அறிவித்திருந்தது. தற்போது நரேந்திர மோடியை எதிர்த்து அந்தக் கட்சியின் தலைவர் அரவிந்த் கெஜ்ரிவால் போட்டியிடவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. கடந்த சட்ட சபைத் தேர்தலில் 25 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த புதுடில்லியின் முதலமைச்சர் ஷிலா தீட்சித்தை அவர் தோற்கடித்துள்ள நிலையில் இந்தத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

2004 ஆம் ஆண்டு, 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தல்களில் ராகுல் காந்தி அமோக வெற்றி பெற்ற அமேதி தொகுதியில் அவரை எதிர்த்து ஆம் ஆத்மி கட்சியின் குமார் விஸ்வாஸ் போட்டியிடவுள்ளார். (ற)

# உத்தர்காண்டை சீரழிக்கின்றது காங்கிரஸ்

## பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி தெரிவிப்பு

டேராடூன், டிசெ.17

உத்தர்காண்ட் மாநிலம் பிரிக்கப்பட்டதில் இருந்து அதை வளர்ச்சி அடையவிடாமல் சீரழிக்கும் வேலையை காங்கிரஸ் செய்கிறது என்று குற்றஞ்சாட்டியுள்ளார் பா.ஜ.க. பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி.

உத்தர்காண்ட் மாநிலத்தில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:

"இங்கு வெள்ளப்பெருக்கால் ஏற்பட்ட சேதம் என்னைப் பெரும் சோகத்தில் ஆழ்த்தியது. முடிந்த அளவிற்கு நாங்கள் உதவி செய்தோம். பா.ஜ.க.வை பொறுத்தவரை பேரிடர் பிரச்சினைகளில் அரசியல் செய்வதில்லை. உத்தர்காண்ட் மாநிலத்திற்கு தேசிய ஜனநாயக கூட்டணி அரசு சிறப்பு திட்டங்களை அறிவித்தது.

ஆனால் ஆளும் காங்கிரஸ் அரசு உத்தர்காண்ட் மாநிலம் பிரிக்கப்பட்டதில் இருந்து அதை வளர்ச்சி அடையவிடாமல் சீரழிக்கும் வேலையை செய்கிறது. மக்களின் வறுமையைப் போக்க காங்கிரஸ் இதுவரை முன்வரவில்லை" என்று தெரிவித்துள்ளார். (ற)



இரும்பு மனிதன் என்று போற்றப்பட்ட இந்தியாவின் முதலாவது உள்துறை அமைச்சர் சர்தார் வல்லபாய் படேலின் 63ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இந்தியா முழுவதும் ஆயிரத்து 100 இடங்களில் 'ஒற்றுமை ஓட்டம்' நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டது. குஜராத் மாநிலம் வதோதராவில் அம்மாநில முதலமைச்சர் நரேந்திர மோடி 'ஒற்றுமை ஓட்டத்தை' ஆரம்பித்து வைத்தார். உலகிலேயே மிக உயரமான, 182 மீற்றர் கொண்ட பட்டேலின் சிலையை நிர்மாணிப் பதற்கு குஜராத் அரசு தீர்மானித்துள்ளது. அந்தச் சிலைக்கான இரும்பு சேகரிக்கும் முயற்சியாகவும் அதுகுறித்து விழிப் புணர்வு ஏற்படுத்தும் நடவடிக்கையாகவும் குறித்த 'ஒற்றுமை ஓட்டம்' பாரதிய ஜனதாக் கட்சியால் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. (ற)

# மூன்றாவது முறையாகவும் காங்கிரஸ் ஆட்சியமைக்கும்



தஞ்சாவூர், டிசெ.17

2004 ஆம் ஆண்டு போன்றே எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலிலும் வெற்றிக் கூட்டணியை அமைத்து மூன்றாவது முறையாகவும் காங்கிரஸ் ஆட்சி அமைக்கும் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளார் இந்திய மத்திய கப்பல்துறை அமைச்சர் ஜி.கே.வாசன்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,

"எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலைச் சந்திப்பதற்காக காங்கிரஸ் கட்சி வியூகம் அமைத்து வருகின்றது. 2004 ஆம் ஆண்டு வெற்றிக் கூட்டணி அமைந்தது போன்றே எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலிலும் வெற்றிக் கூட்டணி அமைத்து மூன்றாவது முறையாகவும் காங்கிரஸ் கட்சி ஆட்சி அமைக்கும்.

தற்போது நடைபெற்றுவரும் நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடரில் முக்கியமான சட்டத்திருத்தங்களை நிறைவேற்ற வேண்டும் என்று மத்தியில் உள்ள காங்கிரஸ் அரசு முயற்சித்து வருகிறது. ஆனால் எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் அமளியை ஏற்படுத்தி அதனை முடக்க வேண்டும் என நினைப்பது சரியல்ல." - என்று தெரிவித்துள்ளார். (ற)

# மனைவி மீது சந்தேகம்; நெற்றியில் ஆணி அடித்த கணவன்

## புதுடில்லியில் நடைபெற்ற கொடூரம்

புதுடில்லி, டிசெ.17

மனைவியின் மீது சந்தேகம் கொண்ட கணவன், மனைவியின் நெற்றியில் ஆணியால் அடித்த கொடூர சம்பவம் இந்தியத் தலைநகர் புதுடில்லியில் இடம்பெற்றுள்ளது.

புதுடில்லியில் உள்ள சங்கம் விஹார் பகுதியைச் சேர்ந்தவர் பப்பு. அவரது மனைவி மம்தா (27). இவர்களுக்கு 3 குழந்தைகள். பப்புவுக்கு தனது மனைவி மீது சந்தேகம் இருந்துள்ளது. தனது மனைவி தன்னை ஏமாற்றுவதாக பப்பு நினைத்தார். அதனால் அவர்களுக்கிடையே அடிக்கடி சண்டை ஏற்பட்டு வந்தது. இரு நாள்களுக்கு முன்னர் வழமை போன்று கணவன் மனைவிக்கு இடையே சண்டை ஏற்பட்டுள்ளது.

சண்டையின் உச்சக்கட்டமாக ஆத்திரம் அடைந்த பப்பு மம்தாவின் கைகளை கட்டிப் போட்டுவிட்டு நெற்றியில் 5 அங்குல ஆணியை அடித்துள்ளார்.

ஆணியின் பாதிப் பகுதி மம்தாவின் நெற்றிக்குள் இறங்கியவுடன் அவர் வீட்டின் கதவை வெளிப்புறமாக பூட்டிவிட்டு அங்கிருந்து தப்பியோடிவிட்டார்.

பக்கத்து அறையில் தூங்கிக் கொண்டிருந்த குழந்தைகள் எழுந்து மம்மதாவின் கைக் கட்டை அவிழ்த்துவிட்டு இரத்த வெள்ளத்தில் கிடந்த தாயின் அருகில் அமர்ந்து இரவு முழுவதும் அழுது கொண்டிருந்தனர். அதிகாலையில் அந்த வீட்டு உரிமையாளர் குழந்தைகள் 3 பேரும் அழும் சத்தம் கேட்டு வந்து பார்த்தபின்னரே மம்தா மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

தற்போது கோமா நிலையில் இருக்கும் மம்தாவின் உடல் நிலை மோசமாக உள்ளது என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போது பப்பு வைக் கைது செய்துள்ள பொலிஸார், வழக்குப் பதிவு செய்துள்ளனர். (ற)

# பற்றியெரிகின்றது பங்களாதேஷ்

## அப்துல் காதரின் தூக்குத் தண்டனையின் எதிரொலி

டாக்கா, டிசெ.17
போர்க்குற்றங்களில் ஈடுபட்டமைக்காக பங்களாதேஷில் ஜமாத் இ இஸ்லாமி கட்சியின் மூத்த தலைவர் அப்துல்காதர் மொல்லா (வயது 75) தூக்கிலிடப்பட்டதை அடுத்து வெடித்த வன்முறைகள் அந்நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் பரவியுள்ளன.

1971 ஆம் ஆண்டு பங்களாதேஷ் விடுதலைப் போரின் போது நடந்த வன்முறைகளுக்கு காரணகர்த்தாவாக அப்துல்காதர் மொல்லா இருந்தமை உறுதி செய்யப்பட்டதை அடுத்தே அவருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

அப்துல் காதருக்குத் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டதை அடுத்து கடந்த சில நாள்களாக பங்களாதேஷில் வன்முறைச் சம்பவங்கள் பெருமளவில்நடைபெறஆரம்பித்துள்ளன.

வன்முறைச் சம்பவங்களில் ஏற்கனவே 21 பேர் உயிரிழந்துள்ளநிலையில், நேற்றும் 5 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வன்முறைகளைக் கட்டுப்படுத்தும் பொலிஸாரின் முயற்சிகள் தோல்வியில் முடிந்துள்ளன. அதனால் அந்த நாட்டின் இயல்பு நிலை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. (ற)



## சிரியாவில் விமானத் தாக்குதல்: 37 பேர் சாவு



டமஸ்கஸ், டிசெ.17
சிரியாவில் கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகள் மீது நடத்தப்பட்ட விமானத் தாக்குதலில் 37 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளர்ச்சியாளர்களின் பிடியில் இருக்கும் அலப்போ நகரின் வடபகுதியான ஹய்டாரியா, அரத் அல் ஹாம்ரா, சுகோர் ஆகிய பகுதிகளிலே சிரிய இராணுவம் விமானத் தாக்குதலை நடத்தியுள்ளது.

இந்தத் தாக்குதலில் 37 பேர் உயிரிழந்துள்ளதுடன், பெருமளவிலான கட்டடங்கள் சேதமடைந்துள்ளன என்று அங்குள்ள மனித உரிமை அமைப்புகள் தகவல் வெளியிட்டுள்ளன. (ற)

## பிரிட்டன் குடிவரவுத் திட்டங்கள் கடுமை: ஆங்கில அறிவை நிரூபிப்பது அவசியம்

லண்டன், டிசெ.17
தமது நாட்டுக்கு பணி நிமித்தம் வருவோரின் ஆங்கில தகுதித் தேர்வை பிரிட்டன் அரசு கடுமையாக்கி உள்ளது.

பிரிட்டனில் பணிபுரிய விரும்பும் வெளிநாட்டவர்கள் முதலில் தங்களுடைய ஆங்கில மொழித் திறமையை நிரூபிக்க வேண்டும். ஆங்கில மொழித்திறனை சோதிக்க நடத்தப்படும் நேர்முகத் தேர்வில் கேட்கப்படும் 200 கேள்விகள் கடுமையாக்கப்பட்டு உள்ளன. கடந்தவாரம்முதல்நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இந் தப் புதிய விதிமுறைகள் அனைத்து




வெளிநாட்டினருக்கும் பொருந்தும். பிரிட்டனில் பிறந்து வெளிநாட்டில் வளர்ந்து மீண்டும் தாய்நாட்டுக்குத் திரும்ப விரும்பினாலும் அந்தத் தேர்வில் வெற்றி பெற வேண்டியது அவசியம்.

இதுகுறித்து பிரிட்டன் அமைச்சர் இயான் டங்கன் ஸ்மித் கூறுகையில்,
"வெளிநாட்டினர் இங்கு வந்து லாபமடைவதைத் தடுக்க வேண்டும் என்று பிரிட்டன் மக்கள் விரும்புகின்றனர். அவர்களின் விருப்பத்துக்கு இணங்கவும், பொய்யான காரணங்களைக் கூறிப் பிரிட்டனில் குடியுரிமை பெறுவதைத் தடுப்பதற்காகவும், பணிகளில் சரியான நபர்களை நியமிப்பதற்காகவும் இந்தத் தேர்வு கடினமாக்கப்பட்டு உள்ளது" என்று தெரிவித்துள்ளார். (ற)

## சிலியின் ஜனாதிபதியாக மிச்செலி தெரிவானார்

சாண்டியாகோ, டிச.17
சிலியில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் பெண் ஜனாதிபதி மிச்செலி மீண்டும் அமோக வெற்றி பெற்றுள்ளார்.

லத்தீன் அமெரிக்க நாடான சிலியில் அண்மையில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. அதில் ஆளும் சோசலிஸ்ட் கட்சி சார்பில் முன்னாள் அமைச்சர் எவ்லின் மத்தேயியும், எதிர்க் கட்சியின் சார்பாக இடது சாரி வேட்பாளராக மிச்செலி பேச்லெட்டும் போட்டியிட்டனர்.



தேர்தல் முடிந்ததை அடுத்து நேற்றுமுன் தினம் வாக்கு எண்ணும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. 90 சதவீத வாக்குகள்எண்ணிமுடிக்கப்பட்ட நிலையில் எதிர்க் கட்சி வேட்பாளர் மிச்செலி பேச்லெட் அமோக வெற்றி பெற்றுள்ளார். இவருக்கு 62 சதவீத வாக்குகளும் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட எவ்லின் மத்தோயிக்கு 38 சதவீத வாக்குகளும் கிடைத்துள்ளன. தேர்தலில் வெற்றி பெற்றுள்ள 62 வயதான எச்செலி 2006ஆம் ஆண்டுமுதல்2010ஆம்ஆண்டு வரை ஜனாதிபதியாகப் பதவி வகித்தவர்.

தற்போதைய வெற்றி குறித்துக் கருத்து தெரிவித்துள்ள மிச்செலி "சிலி நாட்டு மக்கள் அனைவருக்கும் ஜனாதிபதியாக இருந்து நாட்டின் முன்னேற்றத்திற்கு பாடுபடுவேன்" என்று தெரிவித்துள்ளார். வெற்றி பெற்ற மிச்செலிக்கு பதவி விலகும் ஜனாதிபதி செபஸ்டியன் பினேரா வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார். (ற)


## 10 பேர் எரித்துக் கொலை: மெக்ஸிக்கோவில் கொடூரம்

டசாகா, டிசெ.17
மெக்ஸிக்கோவில் 10 பேர் எரித்துக் கொல்லப்பட்டுள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மெக்ஸிக்கோவில் போதைப் பொருள் கடத்தல் கொடிகட்டிப் பறக்கின்றது. அதனால் அங்கு ஏற்படும் கோஷ்டி மோதல்களால் மாதந்தோறும் நூற்றுக் கணக்கானோர் உயிரிழக்கின்றனர்.

இந்தநிலையில் டாசாகா மாகாணத்திலுள்ள சான்டியாகோ ஜூஸ்காஹூவா நகருக்கு அருகே லொறி ஒன்றில் எரிந்த நிலையில் 10 பேரின் உடல்கள் பொலிஸாரால் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அந்த லொறியின் அருகே தலையில் குண்டுபாய்ந்த நிலையில் ஒருவரின் உடலும் காணப்பட்டது.

உயிரிழந்தவர்கள் யார் என்பது குறித்தும், கொலைக்கான காரணங்கள் குறித்தும் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ற)



சந்திரனில் வெற்றிகரமாக தரையிறங்கிய சீனாவின் 'சாங் ஈ-3' விண்கலத்திலிருந்து 'யுடு' ஆய்வுக்கலம் தனியாகப் பிரிந்து ஆய்வுகளை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளது. நேற்று அதிகாலை 'யுடு' ரோவர் விண்கலம் தனியாக இயங்கத் தொடங்கியது என்றும், நிலவின் மிருதுவான மணற்பரப்பில் யுடு' ஆய்வுக்கலம் அழுத்தமான தடங்களை ஏற்படுத்திச் சென்றது என்றும் சீன விண்வெணி ஆய்வு மையம் தகவல் வெளியிட்டுள்ளது. 'சாங் ஈ-3' தரையி றங்கும் விண்கலமும், 'யுடு' ஆய்வுக்கலமும் ஒன்றையொன்று படமெடுத்து பூமிக்கு அனுப் பியுள்ளன. 'சாங் ஈ-3' ஓர் ஆண்டும், யுடு' மூன்று மாதங்களும் நிலவில் இயங்கி ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளன. சந்திரனில் ஆய்வுக் கலங்களை வெற்றிகரமாக தரையிறக் கிய நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா மற்றும் முன்னாள் சோவியத்யூனியன்ஆகியநாடுகளைத்தொடர்ந்துதற்போதுசீனாவும்இடம்பெற்றுள்ளது. (ற)

## சீனாவில் வன்முறைகள் பொலிஸார் துப்பாக்கிச் சூடு

### 14 பேர் சாவு: பலர் காயம்



பிஜிங், டிசெ.17
சீனாவின் அமைதி குலைந்த மேற்குப்புற மாகாணமான ஷின்ஜியாங்கில் நடந்த வன்முறைக் கலவரங்களில் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில்-14 பேர் உயிரிழந்துள்ளனர்.

முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் அந்த மாகாணத்தில் பிரிவினைவாதம் காரணமாக அவ்வப்போது வன்முறைகள் ஏற்படுவது வழமை. அவ்வாறு நடைபெற்ற வன்முறைச் சம்பவம் ஒன்றில் குற்றம் புரிந்ததாக சந்தேகிக்கப்படும் சிலரைப் பொலிஸார் கைது ...ய்ய முயன்றபோது அவர்கள் வெடிபொருள்கள் மற்றும் கத்திகளைக் கொண்டு தாக்க முற்பட்டதை அடுத்து9 பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

இந்தச் சம்பவங்களில் பொலிஸார் இருவரும் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவித்துள்ள பொலிஸ் திணைக்களம், இவ்வாறான சம்பவங்களுக்கு முஸ்லிம் பிரிவினைவாதிகளே காரணம் என்று குற்றஞ்சாட்டுகின்றனர்.

ஆனால் அந்தமாகாணத்தில் பெரும்பான்மையாக வசிக்கும் உய்குர் இன முஸ்லிம்கள் அந்தக் குற்றச்சாட்டுக்களை மறுப்பதுடன், இந்தச் சம்பவங்களைக் காரணம் காட்டி தம் மீது மேலும் ஒடுக்குமுறைகள் அதிகரிக்கப்படுகின்றன என்று தெரிவித்துள்ளனர். (ற)

## எலிசபெத்தின் முந்திரிப் பருப்பை திருடும் பொலிஸார்

லண்டன், டிசெ.17
பிரிட்டிஷ் ராணி எலிசபெத்தின் அரண்மனையில் இருக்கும் முந்திரிப் பருப்புகளைப் பொலிஸார் இரகசியமாக எடுத்துச் செல்கின்றனர் என்ற தகவல் வெளியாகிப் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிரிட்டிஷ் அரண்மனையில் ராணி எலிசபெத்தின் தொலைபேசி உரையாடல்கள் ஒட்டுக் கேட்கப்பட்டன என்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகத் தற்போது வழக்கு நடைபெற்று வருகின்றது. அந்த வழக்குத் தொடர்பாக சில மின்னஞ்சல்கள் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அவற்றில் ஒரு மின்னஞ்சலில் இருந்தே இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

அந்த மின்னஞ்சலில் "அரண்மனையில் பணியாற்றும் பொலிஸ் அதிகாரிகள் ராணிக்கு வைத்திருக்கும் முந்திரி பருப்பை திருடிச் சாப்பிட்டு விடுகின்றனர். அதனால் ராணி எலிசபெத் எரிச்சலடைந்துள்ளார்.



அவர்களைக் கையும் களவுமாக பிடித்து கட்டுப்படுத்த வேண்டும் என்று உத்தர விடப்பட்டுள்ளது" என்று கூறப்பட்டுள்ளது.

வழக்கின் போது அந்த மின்னஞ்சலை படித்துப் பார்த்த நீதிபதிகள் அடக்கமுடியாது சிரித்து விட்டனர். நீதிமன்றமும் சிறிது நேரம் சிரிப்பொலியால் நிறைந்தது.

அதேவேளை, குறித்த மின்னஞ்சல் தொடர்பாகப் பொலிஸ் அதிகாரிகளோ, அரண்மனை நிர்வாகத்தினரோ கருத்துக் கூற மறுத்துவிட்டனர். (ற)

# கல்முனையில் அகற்றப்பட்டன தற்காலிக கட்டடங்கள்

## ஒற்றுமைச் சதுக்கப் பணிகளை ஆரம்பித்து வைத்தார் மாநகர முதல்வர்

அம்பாறை,டிசெ.17

இரண்டு கோடி ரூபா செலவில் கல்முனை தனியார் பஸ் நிலையத்தில் அமைக்கப்படவுள்ள ஒற்றுமைச் சதுக்க கட்டட நிர்மாணப் பணிகளுக்காக அங்குள்ள தற்காலிக கட்டடங்களை உடைத்து அகற்றும் வேலைகள் நேற்று திங்கட்கிழமை காலை கல்முனை மாநகர முதல்வர் சட்டத்தரணி நிஸாம் காரியப்பரினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.



கல்முனை தனியார் பஸ் நிலையத்தின் கிழக்குப் பகுதியில் தற்காலிகமாக செயற்பட்டு வந்த கடைகள் யாவும் அங்கிருந்து அகற்றப்பட்டன

இந்தக் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுக்கு புதிதாக அமைக்கப்படவுள்ள ஒற்றுமைச் சதுக்க கட்டடத் தொகுதியில் மாற்றுக் கடைகள் வழங்கப்படும் என்று அவர்களுக்கு முதல்வர் உறுதியளித்திருந்தார்.

அதனையடுத்தே அவர்களின் இணக்கப்பாட்டுடன் கடைகள் நேற்று திங்கட்கிழமை அகற்றப்பட்டன.

கல்முனை நகரில் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்ற தனியார் பஸ் நிலையம் 'ஒற்றுமைச் சதுக்கம்' எனும் பெயரில் சகல வசதிகளும் கொண்டதாக நவீனமயப்படுத்தப்படவுள்ளது.

அதனை இரவு நேரத்திலும் இயங்கச் செய்யும் வகையில் வர்த்தக மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களுடன் மேம்படுத்தும் நோக்கில் மாநகர முதல்வர் நிஸாம் காரியப்பரினால் முன்வைக்கப்பட்ட திட்டத்துக்கு கொரிய நாட்டு கொய்க்கா நிறுவனம் உதவ முன்வந்துள்ளது.

இதற்காக கொய்க்கா திட்டத்தின் கீழ் இரண்டு கோடி ரூபா ஒதுக்கீடு செய்வதற்கு கொய்க்காவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பார்க் சூக் இணக்கம் தெரிவித்துள்ளார்.

ஆசிய மன்றத்தின் அனுசரணையுடன் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத், மாகாண சபை உறுப்பினர் ஏ.எம்.ஜெமீல் ஆகியோர் சகிதம், கல்முனை மாநகர முதல்வர் நிஸாம் காரியப்பர் கொய்க்காவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியை கடந்த மாதம் கொழும்பிலுள்ள கொரிய நாட்டு தூதரகத்தில் அமைந்துள்ள கொய்க்கா தலைமை அலுவலகத்தில் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

இந்தச் சந்திப்பிலேயே முதல்வரின் திட்டத்துக்காக இரண்டு கோடி ரூபா ஒதுக்கீடு செய்வதற்கு கொய்க்காவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி இணக்கம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-104)

# ஆசிரியர் வெற்றிடம் நிரப்ப நடவடிக்கை

## இன்று முதல் நேர்முகப்பரீட்சை

மட்டக்களப்பு,டிசெ.17

கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவுகின்ற ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதற்கமைய பட்டதாரி ஆசிரியர்களை சேவையில் இணைத்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் இன்று செவ்வாய்க்கிழமை, நாளை புதன்கிழமை, நாளைமறுதினம் வியாழக்கிழமை மற்றும் 19 ஆம், 23 ஆம் திகதிகளில் நடத்தப்படவுள்ளன என்று கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அம்பாறையில் நாளையும், நாளை மறுதினம் கல்முனையிலும், எதிர்வரும் 19ஆம் திகதி மட்டக்களப்பிலும், 23ஆம் திகதி திருகோணமலையிலும் நேர்முகப் பரீட்சைகள் இடம்பெறவுள்ளன என்று கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

கிழக்கு மாகாண பாடசாலைகளில் நிலவுகின்ற கணிதம், விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் உடற்கல்வி பாடங்களின் ஆசிரியர்வெற்றிடங்களுக்கான நேர்முகப் பரீட்சையே இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# இலங்கைக் கடல் எல்லைக்குள் நுழையும் படகுகள் பறிமுதல்

## அமைச்சர் ராஜித எச்சரிக்கை



கொழும்பு,டிசெ.17

அனைத்துலக கடல் எல்லைச் சட்டங்களை மீறி, இலங்கைக் கடல் எல்லைக்குள் நுழையும் எந்தவொரு மீன்பிடிப் படகும் பறிமுதல் செய்யப்படும்.

இவ்வாறு கடற்றொழில் நீரியல் வளங்கள் அமைச்சர் ராஜித சேனாரத்ன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மீன்பிடிப் படகுகளில் உள்ள மீனவர்கள் அனைத்துலக சட்டங்களுக்கு இணங்க நடந்து கொள்ள வேண்டும்.

191 இலங்கை மீனவர்களையும், 36 படகுகளையும் இந்தியா தடுத்து வைத்துள்ளது.

தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் தலையீட்டால், அவர்களை விடுதலை செய்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இந்தியாவின் விவசாய அமைச்சர் சரத் பவாருடன் மீனவர்களின் பிரச்சினை குறித்து பேச்சுவதற்கு அடுத்தமாதம் புதுடெல்லி வருமாறு இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் அழைப்பு விடுத்துள்ளார்.

"-"

> 191 இலங்கை மீனவர்களையும், 36 படகுகளையும் இந்தியா தடுத்து வைத்துள்ளது.

எனினும், பயணத்துக்கான நாள் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை.-என்றார். (ச)


## காணவில்லை



மல்லாகம் தெற்கு, இக்கிரான கந்தரோடையைச் சேர்ந்த 19 வயதுடைய **பரமானந்தம் நிஷாந்தினி** என்பவரை 13.12.2013 வெள்ளிக்கிழமை காலை கல்வி கற்க தனியார் கல்வி நிறுவனத்துக்கு சென்றவேளை காணாமல் போயுள்ளார். (42642) (45.6.3)

கண்டவர்கள் உடன் அறியத்தரவும்.

தொ.பே: 077 809 2764/077 419 8668

## பசுவைக் காணவில்லை

14.12.2013 அன்று சிவப்புநிற கன்னிப்பசு 5மாதச்சினை, மடிவிட்டபடி, வயிற்றில் வெள்ளை நிறம், காதில் நம்பர் உள்ளது.

இரு நிற வால், சிறிய கொம்பையுடைய அழகான கைபார் பசுவைக் காணவில்லை.

இதைக் கண்டுபிடித்துத் தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் தரப்படும்.

தொடர்பு: பஞ்சலிங்கம், பண்டாரக்குளப் பிள்ளையார் கோயிலடி, நல்லூர்.077 530 2627/ 077 747 2778

(42682)(4.6.3)

## கடை வாடகைக்கு

கஸ்தூரியார் வீதியில் 26அடி அகலமும், 70 அடி நீளமும் முற்றாக மாபிள் பதிக்கப்பட்ட இணைந்த குளியலறையுடன் சகலவசதிகளும் கொண்ட கடைத் தொகுதி வாடகைக்குண்டு. (நிதிநிறுவனங்கள், வங்கிகளுக்கு ஏற்றது)

தொ.பே: 077 732 4648/077 732 4637

## கொள்வனவு

சகல விதமான நெல் வகைகளும் கொள்முதல் செய்யப்படும்.

தொடர்பு: 077 772 2215

## வீடுவளவு விற்பனைக்கு

ஆனந்தன் வடலி வீதி (AV Road), அரியாலை கிழக்கில் ஒரு பரப்புக் காணியில் 2 அறைகள், ஹோல், சமையலறை, கிணறு, மலசலகூடம் மற்றும் சுற்றிவர மதில் கட்டிய சகல வசதியும் கொண்ட வீடுவளவு விற்பனைக்குண்டு. பார்வையிடும் நேரம் 22.12.2013 ஞாயிற்றுக் கிழமை காலை 9.30-2.30 வரை.

(நிறுவனங்களும் விரும்பத்தக்கது)

தொ.பே. 077 154 7488 (42637) (7.6.3)

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பழை, K.K.S. வீதிக்கு அருகில் கிணற்றுடன் 5½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (பிரித்தும் கொடுக்கப்படும்)

தொ.பே. 076 680 3902

## பணியாளர்கள் தேவை

கொழும்பில் தங்கி நின்று பணி புரிவதற்கு பின்வரும் பணிகளுக்குப் பணியாளர்கள் தேவை.

- பேருந்து ஆசனப் பதிவு (Bus Booking)
- சர்வதேச விமான பயணச் சீட்டு பதிவு செய்து வழங்கல் (Air Ticket Booking)

தொடர்பு: 077 386 6250
(P.P.T Travels)
POINT PEDRO TRADERS
No.183 K.K.S. ROAD JAFFNA
T.P: 021 222 8881

## பாடசாலை மாணவர்களுக்கான ICT வகுப்புக்கள் பாடத்திட்டத்துக்கமைய ஆரம்பமாகவுள்ளன


தரம் 6 முதல் தரம் 9 வரையான பாடசாலை மாணவர்களுக்கு பாடத்திட்டத்துக்கமைவாக தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப பாட வகுப்புக்கள் அநுபவமிக்க ஆசிரியர்களினால் ஆரம்பிக்கப் படவுள்ளது.

நியூகேற்வே ரெக்
347, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
021 567 5555

கிளைகள்:
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி, 021 567 8444
50, பருத்தித்துறை வீதி நெல்லியடி, 021 226 2395
கராடிப்போக்குச் சந்தி, கண்டி வீதி, கிளிநொச்சி 021 228 0068

## மங்களா நிறுவனத்தின் மாபெரும் அதிரடி மலிவு விற்பனை

10 % - 50 % விலைக்கழிவு முந்துங்கள் கையிருப்பு உள்ள வரை மட்டுமே




வெளிநாட்டு, மூங்கில், தளபாடங்கள் சோபா செற்றிகள், Baby தொட்டில்கள், வீடு, அலுவலகத்திற்குரிய அனைத்து தளபாடங்களும் மின்னியல் பொருட்கள் 10% - 50% நம்ப முடியாத விலைக்கழிவில்...

536, K.K.S. Road, Manokara Junction, Jaffna. Tel : 021 222 8367, 021 4921099, 077 7286069

போன்ற நிறுவனங்களினதும் விசேட விலைக்கழிவு...

## வவுனியாவில் மனித உரிமைகள் நிகழ்வு

வவுனியா, டிசெ.17
மனித உரிமைகள் தினம் கடந்த 10 ஆம் திகதி வவுனியா கலாசார மண்டபத்தில் வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுத் தலைவர் இ.தேவராஜா தலைமையில் இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் மனித உரிமைகள் தொடர்பாக அருட்தந்தை டெஸ்மொள்ட் ஏஞ்சலோ, வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுத் தலைவர் கி.தேவராஜா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன், ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் பாஸ்கரா, அருட்சகோதரி அருண், மனித உரிமைகள் ஆர்வலரும் எழுத்தாளரும்; முல்லைத்தீவு மாவட்ட மக்கள் ஒன்றியத்தின் காப்பாளரும் ஆகிய சண் மாஸ்டர், தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியச் செயலாளர் நிக்சன் ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினர்.
நிகழ்வின் இறுதியில் 'தவிப்பு' என்ற குறும்படமும் வெளியிட்டு வைக்கப்பட்டது.
இந்த நிகழ்வில் காணாமற் போனோரின் உறவுகள், பெற்றோர், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.
(க-402)

## சிறுதானிய பயிர்ச் செய்கையை விவசாயிகள் அதிகரிக்க வேண்டும்

*வவுனியா பிரதி விவசாயப் பணிப்பாளர் தெரிவிப்பு*

வவுனியா, டிசெ.17
அருகி வரும் சிறு தானியப் பயிர்ச்செய்கையை அதிகரிக்குமாறு வவுனியா மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் திருமதி அ.சகிலாபானு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கடந்த சில ஆண்டுகளாகவே உழுந்து, சாமை, குரக்கன், எள்ளு உட்படப் பல்வேறு சிறுதானியங்களின் செய்கை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வவுனியாவில் மேற்கொள்ளப் படுகின்றது.
இதனால் இவற்றின் விலையும் அதிகரித்துள்ளதுடன் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையும் உள்ளது.
இங்குள்ள பெருமளவான விவசாயிகள் நெற்பயிர்ச் செய்கையைநம்பியுள்ளனர். மழைவீழ்ச்சி சீராக இடம் பெறாததால் கடந்த ஆண்டும், இந்த ஆண்டும் நெற் பயிர்ச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் நட்டத்தை எதிர் கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளனர்.
இந்தச் சிறுதானியங்களை சிறுபோகம், காலபோகம் இரண்டிலும் பயிரிட முடியும். இதனால் பெருமளவு இலாபமும் ஈட்ட முடியும். இவை வவுனியா மண்ணுக்கு உகந்ததாகவுள்ளன.
எனவே போஷாக்குள்ள இந்த உணவுப் பயிர்களைப் பயிரிடுவதன் மூலமாக விவசாயிகளும், நுகர்வோரும் பயனடையமுடியும்-என்றார். (க-402)

# ஓமந்தை மருதங்குளத்தில் யானைகளால் தொல்லை

வவுனியா, டிசெ.17
ஓமந்தை மருதங்குளம் பகுதியில் யானைகளின் தொல்லையால் அந்தப் பகுதி மக்கள் பெரும் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர். கூட்டமாக வரும் யானைகள் வீடுகளை உடைப்பதுடன் இந்தப் பகுதி மக்களின் விவசாய நிலங்களிலுள்ள பயிர்களையும் நாசம் செய்கின்றன.
இதனால் பகல் வேளைகளில் ஆண்கள் வேலைக்குச் செல்லும் போது பெண்கள் தனியாக இருப்பதற்கு அச்சப்படும் நிலை காணப் படுகின்றது. யானைகளிடம் இருந்து தம்மைப் பாதுகாக்கும் பொருட்டு மக்கள் நெருப்பை எரிய விடுவதுடன் வெடிகளையும் கொளுத்தி எறிகின்றனர். ஆனால் யானைகள் இவற்றுக்கு அஞ்சாது அட்டகாசம் புரிகின்றன. தொடர்ச்சியாக வெடி கொளுத்தும் போது யானைகள் காடுகளுக்குள் செல்கின் றன. இவ்வாறு வெடி கொளுத்துவதையோ அல்லது வேட் டைக்குரிய துப்பாக்கிகளைப் பயன்படுத்துவதையோ பாது காப்புத் தரப்பினர் விரும்பாது எதிர்ப்புத் தெரிவிப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர். படையினரின் முகாம்கள் அருகில் உள்ள போதிலும் இராணுவத்தினர் யானைகளைத் துரத்துவதற்கு முன்வராததோடு வீடுகளுக்கு அருகில் நின்று வேடிக்கை பார்ப்பதாக வும் இந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.
மேலும் பாதுகாப்புத் தரப்பினர் மக்கள் குடியிருப்புக்களுக்கு அருகில் இருப்பதால் குடும்பப் பெண்கள் அச்சத்துடன் காணப்படுவதாகவும்தெரியவருகின்றது.
தென் பகுதியில் இருந்து பெருமளவு யானைகள் வன்னிக் காடுகளில் விடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
எனவே உரிய பாதுகாப்பு ஒழுங்கை மேற்கொண்டு யானைகளிடமிருந்து தம்மைப் பாதுகாக்குமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-402)

## வீதியோர மரங்களை தறிப்பதற்கு எதிர்ப்பு

வவுனியா, டிசெ.17
வவுனியாவிலுள்ள பிரதான வீதிகளில் காணப்படும் பெறுமதி வாய்ந்த மரங்கள் தறிக்கப்படுவது தொடர்பாக வர்த்தகர்கள், பயணிகள் உட்படப் பலரும் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.
வவுனியா ஏ-9 வீதி, பசார் வீதி, குருமன்காடு வீதி, மன்னார் வீதி உட்படப் பல இடங்களில் இரவோடு இரவாக ஏராளமான மரங்கள் தறிக்கப்பட்டுள்ளன.
இதேவேளை குருமன்காடு மன்னார் வீதிப் பகுதியில் அண்மையில் மரங்கள் தறிக்கப்பட்ட போது அங்கு குழுமியிருந்த பயணிகளும் வீதியின் அருகில் வர்த்தக நிலையங்களை நடத்திவரும் வர்த்தகர்களும் மரங்களைத் தறித்த குழுவினருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். மரங்களைத் தறிப்பவர்கள் எவரென்பது தெரிய வராததால் இந்த முரண்பாடு ஏற்பட்டதாகவும் தெரிய வருகின்றது.
வீதியோரங்களில் காணப்படும் பெறுமதியான நிழல்தரும் மரங்கள் பயணிகள் தரித்து நிற்பதற்கும், வயோதிபர்கள், நோயாளிகள் உட்படப் பலரும் இளைப்பாறுவதற்கும் உதவும் வகையில் அமைந்திருந்தன.
வீதிக்கு அப்பால் காணப்படும் மரங்கள் கூட தறித்து வீழ்த்தப் படுவதால் எதிர்காலத்தில் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்படுமென்றும் இதனை உடனடியாகத் தடுத்து நிறுத்துமாறும் இங்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
(க-402)




வடபிராந்தியத்துக்கான உதடு, அண்ணபிளவு, முக சீரமைப்பு நிலையம் வவுனியா பொது மருத்துவமனையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இங்கு இடம்பெறும் சிகிச்சை முறைகள் தொடர்பான விளக்கம் மருத்துவர்களால் ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்பட்டது. இந்த நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளதால் முகத்தில் பாதிப்புக்களைக் கொண்டிருப்பவர்கள் உரிய சிகிச்சைகளை இலகுவாகப் பெறமுடியுமெனத் தெரிய வருகின்றது. (க-402)

## கட்டடம் எதுவுமில்லாத மட்டுவில் நாடு பாடசாலை

பூநகரி மட்டுவில் நாடு அ.த.க. பாடசாலைக் கட்டடம் எதுவுமில்லாத நிலையில் இயங்கி வருவதைக் காண முடிகின்றது.
இந்தப் பாடசாலையில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிகக் கொட்டகை மூன்று மாதங் களுக்கு முன்னர் அருகிலுள்ள வயலுக்கு வைத்த நெருப்பினால் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.
தற்போது கட்டடம் எதுவுமில்லாத நிலையில் இந்தப் பாடசாலை இயங்கி வருகின்றது.
பாடசாலைக்கென நிரந்தரக் கட்டடத்தை அமைத்து வழங்குமாறு பெற்றோர் வலயக் கல்விப் பணிமனையிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-18)

பாராட்டி வாழ்த்துகிறோம்




நாதஸ்வர இசைத்துறையில்
கடந்த 35 வருடங்களுக்கு
மேலாகப் பணியாற்றி ரசிகர்களின்
நன்மதிப்பையும், புகழையும் பெற்ற
அளவையூர் நாதஸ்வர வித்துவான்
அ.பாலச்சந்திரன்
(சுதந்திரன்)
அவர்களுக்கு 15.10.2013 அன்று
கொழும்பில் வைத்து
“கலாபூஷணம்” விருது வழங்கிக்
கௌரவிக்கப்பட்டமை குறித்துப்
பெரிதும் மனமகிழ்ந்து
பாராட்டி வாழ்த்துகின்றோம்.
நாதஸ்வர வித்துவான்
இ. இந்திரகுமார்
கே.கே.எஸ். வீதி, மல்லாகம்.

# பாதுகாப்பான ரயில் கடவை ஓமந்தையில் அமைக்குக

*அரச ஊழியர் கோரிக்கை*

வவுனியா, டிசெ.17
ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத் திட்டத்துக்குச் செல்லும் பாதையில் உள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவையில் உரிய பாது காப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு இங்கு வசிப்பவர்கள் கோரிக்கை விடுத்துள் ளனர்.
அரச ஊழியர் வீட்டுத்திட்டத்துக்குச் செல்லும் பொலிஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவையில் காணப்படும் தண்டவாளத்தில் கற்கள் போடப்பட்டுள்ளன.
இந்தக் கற்களுக்கு மேலாக வாகனங்கள் செல்வதில் இடர்கள் தோன்றியுள்ளன. சில வேளைகளில் கற்களின் மேலாக வாகனங்கள் செல்ல முடியாத



நிலையும் ஏற்படுகின்றது. இதனால் ரயில் செல்லும்போது விபத்துக்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.
எனவே விரைவில் கற்களை அப்புறப்படுத்திய பின்னர் பாதையைச் செப்பனிடுமாறு இங்கு வசிக்கும் அரச ஊழியர்கள் உரிய தரப்பினரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-402)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



நாதஸ்வர இசைத்துறையில்
கடந்த 35 வருடங்களுக்கு மேலாக
பணியாற்றி ரசிகர்களின் நன்மதிப்
பையும், புகழையும் பெற்ற
அளைவையூர் நாதஸ்வர வித்துவான்
அ.பாலச்சந்திரன் (சுதந்திரன்)
அவர்களுக்கு 15.10.2013 அன்று
கொழும்பில் வைத்து
“கலாபூசணம்”
விருது வழங்கிக் கௌரவிக்கப்
பட்டமை குறித்துப் பெரிதும்
மனமகிழ்ந்து பாராட்டி
வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
வ.நகுலேஸ்வரன் (அளவெட்டி), வ.இராமச்சந்திரன் (அளவெட்டி)
வ.சந்திரமோகன் (சுவிஸ்), வ.ஜெயநாதன் (அளவெட்டி), ஜெ.சதீஸ்குமார் (பிரான்ஸ்)
அளவெட்டி வடக்கு, அளவெட்டி.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கெடுகுடி சொற்கேளாது என்ற நிலை இங்கு தொடரும் வரை...?!

இலங்கை வாழ் தமிழ் மக்களின் சுயமரியாதையை இந்தியா உறுதி செய்ய வேண்டும். இலங்கைக்கு எமது நாடு வலுவான ஓர் அயல் நாடு–

அந்த நாட்டில் நடைபெற்ற உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்துள்ளது. அங்கு நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு, உண்டாக்குவதற்கு நல்ல வாய்ப்புக் கிடைத்துள்ளது. அதனை உரிய முறையில் தக்க வகையில் பயன்படுத்த வேண்டும்–

இவ்வாறு கருத்து வெளியிட்டிருக்கிறார் எங்கள் நாட்டில் போர் நடைபெற்ற வேளையில், சுமார் மூன்று வருட காலத்துக்கு இந்தியாவின் தூதுவராகப் பணிபுரிந்த நிருபமா ராவ்.

இந்திய மத்திய அரசில் பல உயர் பதவிகளை வகித்தவர் அவர். அமெரிக்கா மற்றும் ரஷ்ய நாடுகளிலும் ராஜதந்திரிப் பதவிகளை வகித்துப் பெயர்பெற்றவர்.

அனைத்துலக விவகாரங்களில் தக்க பரீட்சயம் உடைய நிருபமா ராவ், இலங்கை குறித்து வெளியிட்டுள்ள கருத்து, புதுடில்லி அரசினால் புறந்தள்ளக்கூடியதல்ல.

அந்த வகையில், இந்திய மத்திய அரசுக்கான தேர்தல் நடைபெறுவதற்கு இன்னும் ஐந்து மாதங்கள் இருக்கும் வேளையில், நிருபமா வெளியிட்ட கருத்தை அனைத்திந்தியக் கட்சிகளான, அடுத்த அரசாங்கத்தை அமைப்பதற்கு போட்டா போட்டி யிடும் காங்கிரஸ், பாரதிய ஜனதா கட்சிகள் ஊன்றிக் கவனத்தில் கொள்ளவேண்டியது தவிர்க்க முடியாத ஒன்றாகிறது.

இந்திய அரசின் அனுசரணையுடன் கொண்டு வரப்பட்ட–நடைமுறைப்படுத்தப்பட்ட–அரசமைப்புக் கான பதின்மூன்றாவது திருத்தத்தை அடியோடு பிடுங்கி எறிவதற்கு முனைந்திருக்கும் இலங்கை அரசு, நிருபமாராவ் சொல்வது போன்று, நல்லிணக்கத்தை உண்டாக்குவதற்கு விரும்புமா, அதன் பால் செயற் பட முன்வருமா என்பது பென்னம் பெரிய கேள்வியே.

ஆனால், இலங்கையின் தமிழர் பூமியில் நடத்தப்பட்ட போரில், கொழும்பு அரசு லட்சக்கணக்கான மக்களைக் கொன்றொழிப்பதற்கு, இந்திய அரசும் பெரும் பங்கு கொண்டது–உதவியது–என்பது இப்போது இரகசியமன்று.

அது குறித்துக் கழிவிரக்கம் கொள்ளும் வகையிலாவது, ஈழத் தமிழ் மக்களின் மரியாதையை நிலைநாட்டுவதற்கு அவர்களுக்குச் சேரவேண்டிய தவிர்க்க முடியாத அரசியல் உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு முழு மனதுடன் முன்னின்று உழைக்க வேண்டும். அது ராஜதந்திர மட்டத்தில் மட்டும் அல்லாமல் காத்திரமான செயல் வடிவிலும் அவர்களின் கைக்குக் கிடைக்க வேண்டும். வெறும் பம்மாத்துக்களைச் செய்து அவற்றுக்குத் தமிழ் மக்களின் உரிமைகள் என்று வெளுத்த சாயம் பூசுவதற்கு முனையக்கூடாது.

1995 ஆம் ஆண்டின் ராஜீவ்–ஜே.ஆர். ஒப்பந்தம் போன்ற அரை வேக்காட்டுத் தீர்வு அல்லாமல், முழு அளவிலான தமிழ் மக்களுக்குச் சேரவேண்டிய அரசியல் உரிமைகள் அப்பழுக்கின்றி, முழுமையாகக் கிடைக்க வகை செய்வதே இன்றைய தேவை.


இந்தியா என்று மட்டுமன்றி, எந்த நாடும் இரண்டாவது நாட்டுக்கு, மிகக் குறிப்பாக அயல் நாடு ஒன்றுக்கு உதவுகிறது என்றால் அதில் தனக்குச் சுயலாப மும், மேலாதிக்க நிலையும் பொதிந் திருப்பது இயல்பு. அதுமட்டுமன்றி சம்பந்தப்பட்ட அயல்நாடு சொந்த நலன்களையும் சுயதேவைகளையும் துறந்தேனும், தனது பக்கம் சாய்ந்துவிட வேண்டும் என்று எதிர்பார்ப்பதும் ஒருவகை ஒவ்வாத அலகாகும்; போக்காகும்.

இதனை மனதில் வைத்து, கொழும்பு அரசு இந்தியாவின் மென்மையான போக்கை, தனக்குச் சாதகமாக மாற்றிக்கொள்ளவே இதுவரை செயற்பட்டிருக்கிறது.

இத்தகைய பின்னணியில், இந்தியாவைச் சூழ உள்ள பிராந்தியங்களின் நிலைமைகள் மாற்றம் அடைந்து வரும் நிலையில், தற்போதைய கொழும்பு அரசின் மீது புதுடில்லி அரசினால் செல்வாக்குச் செலுத்த இயலுமா என்பது பெரும் வினாவாக உயர்ந்து வளைந்து நிற்கிறது!

கெடுகுடி சொற்கேளாது என்ற நிலை எமது நாட்டு அரச தலைவர்களிடம் தொடரும் வரை, நிருபமா ராவ் அம்மையாரின் மந்திரம் நீர் மேல் எழுத்துப் போன்றே தேறும்.

ஈழத் தமிழர்களின் சுயகௌரவத்தை இந்தியா உறுதி செய்ய வேண்டும் என்ற அந்த நாட்டின் ராஜதந்திரி நிருபமா ராவ்வின் எண்ணக்கரு சிறப் பான தாக இருப்பினும், அது நடைமுறைக்குக் கொண்டு வரப்படுமா என்பது பெரும் வினாவாக எழுந்து நிற்கிறது...!




# இருளிலும் தொலையாத உண்மைகள்

சிவராசனின் நோக்கம் ராஜீவ் காந்தியைக் கொல்வதுதான் என்று எனக்கு முன்பே தெரியாது. அப்படித் தெரிந்திருந் தால் கர்ப்பிணியான எனது மனைவி நளினியை சிவராசனுக்கு அறிமுகம் செய்து வைத்திருக்க மாட்டேன். குண்டு வெடிக்க இருக்கும் இடத்துக்கு யாராவது கர்ப்பிணி மனைவியை அனுப்பி வைப்பார்களா?

“ராஜீவ்காந்தி கொலை வழக்கில் பேரறிவாளன் வாக்குமூலத்தை அப்படியே பதிவு செய்யவில்லை.

திருத்தம் செய்தோம்" என்று வழக்கு விசாரணை அதிகாரி தியாகராஜன் சொன்ன நிலையில்... வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள முருகன், சாந்தன், பேரறிவாளன், நளினி ஆகியோரது வாக்குமூலங்களும் திருத்தப்பட்டுள்ளன என்ற தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த 7-ஆம் திகதி வேலூர் சிறையில் முருகனைச் சந்தித்திருக்கிறார் சென்னை உயர் நீதிமன்ற மூத்த வழக்கறிஞர் எஸ்.துரைசாமி.







### வாக்குமூலங்கள் திருத்தப்பட்டன

முருகன் சொன்னதாக எஸ்.துரைசாமி சில தகவல்களை முதலில் சொன்னார். "பேரறிவாளன் வாக்குமூலம் திருத்தப்பட்டது போல நளினியின் வாக்குமூலமும் திருத்தப்பட்டது. 'ராஜீவ் காந்தியை ஸ்ரீபெரும்புதூர் பொதுக்கூட்டத்தில் கொல்ல இருப்பது எனக்குத் தெரியும்' என்று நளினி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக பொலிஸார் பதிவு செய்துள்ளது முற்றிலும் தவறானது. 'குண்டு வெடிப்பு நடந்தபோது நான் அங்கேதான் இருந்தேன்' என்றும் நளினி வாக்குமூலத்தில் சொல்லவில்லை. உண்மையில் என்ன நடந்தது என்றால், 'நான் தனியே போகிறேன்; அக்கா நளினி வர வேண்டாம் என்று தனு கூறிவிட்டுச் சென்றுள்ளார். நளினியின் கையைப் பிடித்து சுபா விடம் ஒப்படைத்தார். அந்த இடத்தை விட்டு நளினி வெளியேறிய அரை மணி நேரத்துக்குப் பின்னர்தான் குண்டு வெடித்தது. இதைத்தான் வாக்குமூலத்தில் நளினி சொன்னார்.



### குண்டு வெடிக்கும் என்று தெரிந்தால் கர்ப்பிணி மனைவியை அனுப்புவேனா?

பொட்டு அம்மான் கட்டளைப்படி சிவராசனுக்கு சிறுசிறு உதவிகளை நான் செய்து கொடுத்தேன். ஆனால், சிவராசனின் நோக்கம் ராஜீவ் காந்தியைக் கொல்வதுதான் என்று எனக்கு முன்பே தெரியாது.

அப்படித் தெரிந்திருந்தால் கர்ப்பிணியான எனது மனைவி நளினியை சிவராசனுக்கு அறிமுகம் செய்து வைத்திருக்க மாட்டேன். குண்டு வெடிக்க இருக்கும் இடத்துக்கு யாராவது கர்ப்பிணி மனைவியை அனுப்பி வைப்பார்களா? வி.பி.சிங் கூட்டத்துக்கு அவர்கள் சென்றபோது எதுவும் நடக்கவில்லை. அதுபோலத்தான் ராஜீவ் காந்தி கூட்டத்துக்கும் செல்வதாக நினைத்தேன். ராஜீவ் காந்தியைக் கொல்ல இருப்பது நளினிக்கு தெரியாது. இதையெல்லாம் ஒப்புதல் வாக்குமூலத்தில் நளினி சொன்னார்.

ஆனால், விசாரணை அதிகாரிகள், 'ராஜீவ் காந்தியை படுகொலை செய்வதன் மூலம் தனு சரித்திரம் படைக்கப் போகிறாள்' என்று சுபா தன்னிடம் சொன்னதாக நளினி ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்று எழுதிவிட்டனர். இப்படிக் குற்றம் சாட்டப்பட்டவர்கள் அளித்த ஒப்புதல் வாக்குமூலங்களை, விசாரணை அதிகாரிகள்வழக்குக்கு வலுச் சேர்க்கும் வகையில் ஆங்காங்கு அவர்கள் இஷ்டப்படி எழுதிக் கொண்டனர். இதெல்லாம் இப்போது தான் ஒன்றன் பின் ஒன்றாக வெளி வருகிறது" என்று முருகன் தன்னிடம் சொன்னதாக வழக்கறிஞர் எஸ்.துரைசாமி சொல்கிறார்.

### மர்ம முடிச்சுகள் இன்னும் அவிழ்க்கப்படவில்லை

"ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சி.பி.ஐ. கண்டுபிடிக்க முடியாத மர்ம முடிச்சுகள் பல இருக்கின்றன என்று ஆரம்ப காலத்தில் இருந்து நான் சொல்லி வருகிறேன். அதுபற்றி சி.பி.ஐ-க்கும் காங்கிரஸ் அரசுக்கும் எந்த அக்கறையும் இல்லை. சில அப்பாவிகளைத் தூக்கில் போட்டுவிட்டு வழக்கை முடித்துவிடத்தான் அவர்கள் துடிக்கிறார்கள்.

> ராஜீவ் காந்தியைப் படுகொலை செய்வதன் மூலம் தனு சரித்திரம் படைக்கப் போகிறாள் என்று சுபா தன்னிடம் சொன்னதாக நளினி ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்று எழுதிவிட்டனர்.

சி.பி.ஐ. கண்டுபிடிக்கத் தவறிய மிக முக்கியமான விடயம், ராஜீவ் காந்தி வந்த விமானம் தாமதம் ஆகிவிட்டது என்ற விவரத்தை சிவராசனுக்குச் சொன்னது யார்? விசாகப்பட்டினத்தில் இருந்து மாலை 5.30-க்கு கிளம்ப வேண்டிய விமானத்தில் ராஜீவ் வருவதாகத் திட்டமிடப்பட்டது.

ஆனால், ஒரு மணி நேரம் தாமதமாக 6.30-க்குத்தான் அந்த விமானம் அங்கிருந்து கிளம்பியது. சிவராசன் ஒரு துண்டுச் சீட்டில் 'சென்னை புறப்பாடு 5.30 மணி' என்று முதலில் எழுதி, அதை அடித்துவிட்டு 6.30 என்று எழுதி இருந்தார். இதனை சி.பி.ஐ. கைப்பற்றி ஆதாரமாகக் காட்டியுள்ளது.

விசாகப்பட்டினத்தில் ராஜீவ்காந்தி விமானம் தாமதமாகப் புறப்படுகிறது என்ற தகவல் ஸ்ரீபெரும்புதூரில் உள்ள வி.ஐ.பி-க்கள், பொலிஸாருக்குக்கூடத் தெரியவில்லை. இப்போது உள்ளது போல 1991-ஆம் ஆண்டில் கைத்தொலைபேசிகள் , இணையவசதிகள் எதுவும் கிடையாது. இருப்பினும் சிவராசனுக்கு ராஜீவ் காந்தியின் விமானம் தாமதமாகப் புறப்படுகிறது என்ற தகவல் முன்கூட்டியே எப்படிக் கிடைத்தது?... இந்தத் தகவலை கொடுத்தது யார்? என்று சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரிக்கவே இல்லை. கண்டுபிடிக்க முயற்சிக்கவும் இல்லை.

'பெப்ரவரியில் சிவராசனிடம் 9 வோல்ட் பற்றறி வாங்கிக் கொடுத்தேன்' என்று மட்டும்தான் பேரறிவாளன் வாக்குமூலம் கொடுத்துள்ளார். ஆனால், விசாரணை அதிகாரி தியாகராஜன், 'அந்த பற்றரியைப் பயன்படுத்தித்தான் மே 21-ஆம் திகதி ராஜீவ்காந்தியை கொல்லப் பயன்படுத்திய குண்டை வெடிக்கச் செய்தனர்' என்று பேரறிவாளன் கூறியதாகவே ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ளே புகுத்திவிட் டனர்.

இப்படி சி.பி.ஐ. தன்னுடைய கற்பனைக்கு ஏற்றமாதிரி வாக்குமூலங் களைத் திரித்து எழுதி உள்ளது. அதை மையப்படுத்தி, 'ராஜீவ் காந்தி கொலை - மர்மங்களும் மறைக்கப்பட்ட உண்மைகளும் என்று ஆங்கிலத்திலும் தமிழிலும் புத்தகம் எழுதியுள்ளேன்' என்றார் அவர். அந்தப் புத்தகத்தில் பல மர்மங்கள் வெளிச்சத்துக்கு வரும்!

(நன்றி: இணையம்)

# பொய்மைகளுக்கு விலைபோகாமல் எதிர்காலம் நோக்கிப் பயணிப்போம்

உள்ளூராட்சிச்சபைகள் உறுதியாக, ஊழல்கள் இன்றி மக்களுக்குச் சேவை செய்யும் விதமாக இயங்குவது இன்றைய காலத்தின் தேவை.

நிலமட்டத்தில் மக்களுடன் தொடர்பு கொண்டவர்கள் நீங்கள். எனவே மக்களை ஐக்கியப்படுத்தவும், மக்கள் நலச்செயற்றிட்டங்களுக்கு அவர்களை உறுதுணையாக இருக்கச் செய்யவும் பிரதேசசபைகள் மகத்தான பணிகளையாற்றலாம். உள்ளூராட்சி மன்றங்களும், கூட்டுறவு மையங்களும் இனிவரும் காலங்களில் வடமாகாண தமிழ் மக்களுக்குப் பெரும் பணிகளை ஆற்ற வேண்டும் என்று எதிர்பார்க்கின்றேன்; கனவு காண்கின்றேன்.

காரணம் என்னவென்றால் வடமாகாண சபையின் அதிகாரம் இப்பொழுது எங்களுக்குக் கிடைத்துள்ளதென்றாலும் அரசில் உள்ளவர்கள் எமக்குப் போதிய அதிகாரங்களை வழங்காது எம்மை இறுக்கமாகத் துவண்டு வீழ்ந்து கிடக்க வைக்கவே ஆசைப்படுகின்றார்கள் போல் தெரிகிறது. தாம் அமைத்த ஏ-9 போன்ற தெருக் களுக்கும், அரச கட்டடங்களுக்கும் தமிழ்மக்கள் மதிப்பளிக்க வில்லையேஎன்றகோபம் போலும். படையினர் முன்னிறுத்திய வேட்பாளர்களை மக்கள் முற்றாக நிராகரித்து விட்டார்கள் என்ற ஆத்திரமாகவும் இருக்கக் கூடும்.

படைகளினதும் மற்றும் அரச தரப்பினரின் கோபங்களும், ஆத்திரங்களும் தமிழ் மக்களின் மனதை மாற்றிவிடா என்பதே எனது எதிர்பார்ப்பு.

படைகள் இங்கு நிலைத்து நிற்பதால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் நாங்கள். அவர்கள் இங்கு இருப்பதால் முற்றிலும் நன்மையைப் பெற்று வருவதும் படையினரே .

### பெண்களுக்குப் பெரும் பாதிப்பு

அவர்களால் எங்கள் பாதுகாப்புக்குப் பங்கம் ஏற்பட்டுள்ளது. முக்கியமாகப் பெண்களுக்கு. வன்னியில் அரச காணிகளைப்படையினர் கையேற்று நெற்செய்கை, மரக்கறிச் செய்கை, பழச்செய்கை போன்றவற்றில் ஈடுபட்டிருப்பது மாத்திரமன்றி தனியார் காணிகளையுந் தமக்கு மாற்றித்தருமாறு வற்புறுத்தியும் வருகின் றார்கள்.


மீன்பிடித்துறையைப் பார்த்தோமானால் காலாதிகாலமாக மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்த எமது மீனவர்களை போரின் போது தடுத்து நிறுத்தினர் படையினர்.

இன்று போர்தான் முடிந்து விட்டதே கடலுக்குத் தொழிலுக்குச் செல்லலாம் என்று கடற்கரை சென்றால் இன்றும் அப்படித்தான்! தடுத்து நிறுத்தப்படுகின்றார்கள். தனித்தியங்கத் தடை விதிக்கின்றார்கள்.

ஆனால் இந்த நடவடிக்கைகள் எல்லாம் தொலைவில் இருந்து வரும் நூற்றுக்கணக்கான பிற இனத்தைச் சேர்ந்த மீனவர்களின் நலனை முன்னிட்டுத்தான். ஏனென்றால் எமது வளங்கள் எல்லாம் சூறையாடப்பட்டு தெற்குக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. முன் னரெல்லாம் தெற்கில் பணம் சம்பாதித்து வடக்குக்குத் தமிழர்கள் அனுப்பிய காலம் போய் வடக்கில் வாரி எடுத்துத் தெற்குக்கு அனுப்பும் காலம் இப்பொழுது உதய மாகியுள்ளது. இவை யாவும் என் வாழ்நாளிலேயே நடந்தேறக் காண் கின்றேன் என்பது எனது துர் அதிர்ஷ் டமே!

இம்முறை எங்கள் வரவு - செலவுத் திட்டம் சம்பந்தமான வடமாகாண சபைக் கூட்டத்தில் படையினரின் உள்ளீட்டால் எம் மக்கள் படும்பாடு பலராலும் சித்திரித்துக் காட்டப்பட்டது. படையினரின் பிரசன்னம் எமது வாழ்வாதாரங்களைக் கொள்ளையடிப்பதாக மட்டுமல்லாமல் எமது நிலங்களையும் கையகப்படுத்து கின்றதாக அமைகிறது. கடலைச் சூறையாடுகின்றன. பெண்களின் கற்பை விலை பேசுகின்றன என்ற கருத்துக்கள் வெளியிடப்பட்டன.

**பருத்தித்துறை பிரதேச சபையின் உள்ளூராட்சி வார நிகழ்வில் வடமாகாண முதலமைச்சர் ஆற்றிய உரையில் இருந்து......**



### பொதுநலத்தைக் குறிபார்க்கும் சுயநலம்

இன்று எம்முன் இருக்கும் பெரும் கடப்பாடு படையினரை வெளி அனுப்புவதே. இப்போது இந்தக் கூட்டத்தில் கூட படையினரின் பிரசன்னம் இருக்கின் றது என்பது என் கணிப்பு. எந்தத் தருணத்திலும் படைகள் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட மாட்டாது என்று அரசு தரப்பில் கூறப்பட்டிருக்கின்றது. அப்படியானால் அதன் அர்த்தம் என்ன?

ஏதாவது காரணங்காட்டித் தொடர்ந்து வடக்கைச் சூறையாட வேண்டும் என்பதே அவர்களின் நோக்கமாகத் தெரிகின்றது. இன்னமும் மக்கள் புலிகளின் மீது நம்பிக்கை கொண்டிருக்கின்றார்கள். எந்நேரமும் விழிப்பாக நாம் இருக்க வேண்டும். இல்லையேல் புலிகள் மீண்டும் புத்துயிர் பெற்று வந்து விடுவார்கள்

> **இம்முறை எங்கள் வரவு – செலவுத் திட்ட சம்பந்தமான வடமாகாண சபைக் கூட்டத்தில் படையினரின் உள்ளீட்டால் எம் மக்கள் படும்பாடு குறித்து பலராலும் சித்திரித்துக் காட்டப்பட்டது. படையினரின் பிரசன்னம் எமது வாழ்வாதாரங்களைக் கொள்ளையடிப் பது மட்டுமல்லாமல் எமது நிலங்களைக் கையகப்படுத்துகின்றன, கடலைச் சூறையாடுகின்றன, பெண்களின் கற்பை விலை பேசுகின்றன என்ற கருத்துக்கள் வெளியிடப்பட்டன.**

என்று இப்பொழுது சொல்லத் தலைப்பட்டுள்ளார்கள். அதற்கு அத்தாட்சி காட்ட முன்னைய புலித் தலைவர்களில் ஒருவரைக் கொண்டு படை அலகொன்றைத் தற்பொழுது அரசு வழிநடத்திக் கொண்டிருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. மக்களிடையே ஜனநாயகத்தையும், அதனூடு விடுதலை எண்ணங்களையும் பரப்பிக் கொண்டிருக்கும் சம்பந்தன் போன்றவர்களையும், என்னைப் போன்றவர்களையும் அழிக்க அவர்கள் கையமர்த்தப்பட்டுள்ளார்கள் என்று செய்திகள் கூறு கின்றன. இன்று எந்தளவுக்குச் சுயநலம் உக்கிர நிலை அடைந்துள்ளது என் பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு. இவர்கள் எல்லோரதும் சுயநலம் தமிழ்ப் பேசும் மக்களின் பொதுநலத் தைக் குறிபார்த்து வைக்கப்பட்டுள்ளது.

எவ்வளவு காலத்துக்குத்தான் பொய்மையின் அடிப்படையில் படைகளை இங்கு நிலைபெற வைக்க எண்ணு கின்றார்களோ தெரியாது. ஆனால் படைகள் தொடர்ந்து வடக்கில் நிலை கொண்டிருந்தால், வடக்கு கிழக்கு மாகாணங்கள், தமிழ்பேசும் மக்களின் தாயகம்; எமது தமிழ்த் தேசிய இனம் வாழும் பிரதேசங்கள் இவை, இங்கிருப்பவர்களுக்குச் சுதந்திரமும், சுய நிர்ணய உரிமையும் வேண்டும் என்றெல்லாம் நாம் மேடையேறிப் பேசுவதில் அர்த்தம் இல்லாமல் போய்விடும்.

### விவசாயிகளின் வாழ்விலும் கை வைக்கின்றது

உலகம் வாழ் மக்களுக்கு, எமது பிரதேசங்களில் படைகளின் பிரசன்னத்தால் நாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை எடுத்துக்காட்டி படையினரை எம் மத்தியில் இருந்து விலக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

திருநெல்வேலிச் சந்தையில் மிகக் குறைந்த விலையில் மிகவும் கொழுத்த மரக்கறிகளைக் கொண்டு வந்து படையினர் விற்பதாகக் கேள்வி. மக்களும் 'நன்றாக இருக்கின்றன', 'மலிவாக இருக்கின்றன' என்று அவற்றை வாங்குகின்றார்கள். இவர்களுடன் எமது விவசாயிகள் போட்டி போட முடியுமா? படைகளுக்குச் சம்பளம் கிடைக்கின்றது. தமது பொருள்களை விற்றுத்தான் வாழ்க்கை நடத்த வேண்டும் என்றில்லை. உரம் வேண்டியிருந்தால் அதனையும் அவர்கள் பணத்தில் வாங்கத் தேவையில்லை. படையினரே அதை வாங்கிக் கொடுக்கின்றனர். வாடகைக் கார் பிடித்து பொருள்களைச் சந்தை க்குக் கொண்டு வரத் தேவையில்லை. படையினரே வாகன வசதி அளிக் கின்றனர். இந்த நிலையில் மரக்கறி வகைகளை மிகக் குறைந்த விலை யில் விற்பதில் அவர்களுக்கு என்ன சிரமம்?

ஆனால் அதுவல்ல முக்கிய விடயம். குறைந்த விலைக்கு இராணுவம் மரக்கறிகள் தருகின்றது என்பதற்காக இராணுவம் இங்கு நிலை பெற்றிருக்கட்டும் என்று எண்ணும் எம் மக்களைப் பார்க்கும் போது தான் பரிதாபமாக இருக்கின்றது. எதையுமே இனாமாக அல்லது குறைந்த விலையில் எதிர்பார்த்து நாம் எமது கௌரவத்தை இழந்துவிடாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

எமக்கு நலன்களை அவர்கள் வாரித் தருவது தாம் மேலும் இங்கிருந்து சூறையாடவே என்பதை மக்கள் மறக்கக் கூடாது. படைகள் இங்கு நிலைத்து நிற்பதால் ஏற்படும் அவலங்களைப் பற்றியும், வருங்காலப் பாதிப்புப் பற்றியும் மக்களிடையே போதிய விழிப்புணர்வு ஏற்பட வேண்டும். இதுவரையும்இவை வெளிப்படையாகப் பேசப்படாமல் இருந்துள்ளது.

ஆனால் இவற்றை நாங்கள் வெளிநாட்டில் இருந்து வந்த அரசப் பிரதிநிதிகள், அமைச்சர்கள் போன்றோருக்கு எடுத்துக் கூறிய பின் இவை குறித்து வெளிநாடுகளால் அறியப்பட்டு வருகின்றன.

சிங்களப் பத்திரிகைகளே இங்கு நடப்பது என்னவென்று கேட்கும் அளவுக்கு நிலைமை படைகளைப் பொறுத்தவரை முற்றிப் போயுள்ளது. அதனால்தான் பழைய புலித்தளபதி ஒருவரின் தலைமையில் மீண்டும் புலிகள் என்ற நாடகம் நடந்தேற இருப்பதாக அறிகின்றோம். போர் முடிந்து ஐந்து வருடங்களுக்குப் பிறகு உங்களுக்கு இங்கென்ன வேலை என்று வெளிநாட்டு அரசுகள் கேள்விகள் கேட்கப் போகின்றன என்பதை உணர்ந்தே மேற்படி சதியில் இறங்கியிருக்கின்றார்கள் என்று வெளிப்படையாகத் தெரிகின்றது.

ஆனால் அதற்காக எமது புனிதப் பணியை நாங்கள் தொடராது இருக்க முடியாது. படைகள் எப்படியும் தமிழ் பேசும் பிரதேசங்களில் இருந்து வெளியேற வேண்டும்.

### இனிப் படைகளுக்கு இங்கு இடமில்லை

நாங்கள் சிங்கள மக்களுக்கு எதிரானவர்கள் இல்லை என்பதைச் சிங்களப் படையினர் உணர வேண்டும். அவர்களை நாங்கள் தனிப்பட்ட விதத்தில் தாக்கிப் பேசவில்லை.

தனிப்பட்ட சிங்களக் குடிமகன் வேறு. படையினர் வேறு. படைகள் கொழும்பில் இருக்கும் அரசியல் வாதிகளின் நிகழ்ச்சி நிரலுக்குக் கட்டுப்பட்டவர்கள். சுடு என்றால் சுட வந்தவர்களே. அவர்கள் தனிப்பட்ட முறையில் நல்லவர்களாக இருப்பினும் ஓர் ஒழுங்கின் பாற்பட்ட அமைப்பின் அங்கத்தவர்கள் என்ற முறையில் வேறு அதிகார நபர்களின் நிகழ்ச்சி நிரலுக்குத் துணை போகவேண்டியவர்கள் ஆகின்றார்கள். ஆனால் அவர்களை இங்கு தம் அரசியல் காரணங்களுக்காக நிலை நிறுத்தியிருக்கும் அரசியல்வாதிகளையும், அரசினையும் கண்டிக் கின்றோம். படையினர். எம்மைப் பயமுறுத்தி அச்சுறுத்தி, திகில்படுத்தி இதுவரை காலமும் இருந்து வந்து விட்டார்கள். அவர்கள் இனியும் அவ்வாறு நிலைத்து நிற்க விட முடியாது.

இவர்களின் தொடர் நிலைபாட்டால் எமக்கு ஏற்பட்டி ருக்கும், தொடர்ந்து ஏற்படப் போகும் இடர்கள், அவலங்கள், வருங்காலத் தாக்கங்கள் யாவும் எமது மக்களால் உணரப்பட வேண்டும்.

எம்முடன் சிலரை இல்லாதாக்கினால் என்ன என்று தான் பலாத்காரத்தில் ஊறிப்போன சிலர் நினைப்பார்கள். ஆனால் வெளிநாடுகளில் இதுபற்றிப் போதிய புரிந்துணர்வு இருந்து வருகின்றது என்பதை இவர்கள் மறக்கக் கூடாது. இந்தப் புரிந்துணர்வின் காரணமாகத்தான் வெளிநாட்டு அரசுகள் எமது போர்க்கால அனர்த் தங்கள் பற்றி சர்வதேச விசாரணை வேண்டும் என்கின்றன. சிங்களத்தில் அழகாகக் கூறுவார்கள் 'களகள தே பள பளவே' என்று. அதாவது 'செய்த குற்றங்களுக்குப் பலன் அனு பவிக்க வேண்டி வரும்' என்பதே அதன் அர்த்தம்.

எனவே எங்களைக் கொலை செய்வதற்கும், புலிப்பட்டம் கட்டுவதற்கும் எத்தனிக்காமல் படையினரை வடமாகாணத்தில் இருந்து விலக்க அரசு முன்வரவேண்டும்.


வேண்டுமெனில் மற்றைய ஏழு மாகாணங்களிலும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் இருக்கும் படையினரை அழைத்துச் சென்று நிலை நிறுத்த நடவடிக்கைகள் எடுக்கட்டும். வடக்கு கிழக்கு மாகாணங்களின் சட்டத் தையும், ஒழுங்கையும், பாதுகாப்பையும் எமது பொலிஸ் அலுவலர்களே பார்த்துக்கொள்ளட்டும் என்று கூறி வைக்கின்றேன்.

இனி வருங்காலம் மிகவும் முக்கியமான காலமாக இருக்கும். மக்கள் பதற்றப்படாமல் பொய்மைகளுக்கு விலைபோகாமல் பொறுமையுடன் காலத்தைத் தள்ள வேண்டும்.

வடமாகாண மக்கள் கடவுள் நம்பிக்கை கொண்டவர்கள். கிறிஸ்தவர்கள் என்றால் என்ன, இஸ்லாமியர் என்றால் என்ன, இந்துக்கள் என்றால் என்ன யாவருமே இறைவன் ஒருவன் உள்ளான் என்று மனதார நம்புகின்றவர்கள். அந்த இறைவன் மீது நம்பிக்கை வைப்போம். எமது இன்னல்கள் இனி மறைவன என்று நம்புவோம். குற்றஞ் செய்தவர்கள் தண்டிக்கப் படுவார்கள் என்று நம்புவோம். தமிழ் பேசும் மக்களை ஒன்று சேர்த்து எமது எதிர்காலத்தை நோக் கிப் பண்புடன், பரிவுடன், திடமுடன் முன்னேறு வோம்

> **எங்களைக் கொலை செய் வதற்கும், புலிப்பட்டம் கட்டுவதற்கும் எத்தனிக்காமல் படையினரை வடமாகாணத்தில் இருந்து விலக்க அரசு முன்வர வேண்டும். வேண்டுமெனில் மற்றைய ஏழு மாகாணங்களிலும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் இருக்கும் படையினரை அழைத்துச் சென்று நிலை நிறுத்த நடவடிக்கைகள் எடுக்கட்டும்.**

உங்கள் பிரதேசசபையை வெறும் பிரசேசபையாக மட்டும் நினைக்காதீர்கள். மக்கள் சேவையில் ஈடுபட்டுள்ள ஒரு மகத்தான சேவை மையமாக எடுத்துக் கொண்டு மக்கள் சேவையை விரிவடையச் செய்ய முன்வாருங்கள். (8)



# காரைநகர் ஈழ...

## மார்கழித் திருவா...

## தேர்த்திருவிழா சிறப்...

### நல்லை ஆதீன குரு முதல்வரின் அருளாசிச் செய்தி



உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம்வல்ல பரம்பொருளான சிவபெருமான் காரைநகர் மண்ணிலே ஈழத்துச்சிதம்பரநாதனாக எழுந்தருளியுள்ள இச் சிவாலயத்திலே இன்று மார்கழி மகோற்சவ தேர்த்திருவிழா நடைபெறுகின்றது. திருவெம்பாவை உற்சவமாக இடம் பெறுகின்ற இன்றைய தேர்த்திருவிழா வழிபடும் அடியார் பெருமக்களுக்கு அருள் பொழிகின்ற அற்புத விழாவாகும். பஞ்சரத பவனியாக நிகழும் இன்றைய ரதோற்சவம் சிறப்புற நிகழ்ந்து சிவனது அடியார்கள் அனைவரும் அவனருளாலே அவன் தாள் வணங்கி அருள் பெற்றுய்ய அருளாசிகள் நல்கி வாழ்த்துவதில் பேருவகையடைகின்றேன். இன்றைய ரதோற்சவ நன்னாளில் சிவசக்தியாக எழுந்தருளி அடியார்க்கருளும் பெருமானாக ஈழத்துச் சிதம்பரத்தான் பொன்னம்பலத்தாடும் கனகசபையாக தில்லை நடராஜனின் அருட்பிரவாகம் பல்கிப் பொங்கிப் பெருகி சிவனின் அடியவர்களுக்குக் கிட்ட ஆசி நல்கிப் பிரார்த்தித்து வாழ்த்தி மகிழ்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

நல்லை ஆதீன குரு முதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்தபரமாசார்ய சுவாமிகள், இரண்டாவது குரு மஹாசந்நிதானம்.

### நடராஜப் பெருமானின் அருள் அனைவருக்கும் கிட்டட்டும்



மார்கழி மாதம் தேவர்களுக்கு புலரிக்காலமாகும். இக் காலத்தில் மக்கள் வைகறையில் துயில் நீங்கி நீராடி மலர் கொய்து சிவபெருமான் திருவடிகள் மீது தூவி வழிபாடு செய்வர். சிவ வழி பாட்டிற்கு திருவெம்பாவை பத்து நாள்களும் சிறந்ததாகும். அதிலும் திருவாதிரை நாள் மிகச் சிறந்ததாகும். மார்கழியில் வரும் திருவாதிரை நாள் நடேசப்பெருமானுக்கு சிறப்பான விழா ஆதலில் அத்திருநாளில் நடேசப் பெருமானுக்கு விசேட அபிசேகம் செய்வர். அந்த ஆதிரை நாளை ஒட்டி முன்னதாக உள்ள ஒன்பது நாள்களும் விழா எடுத்து வழிபடுதல் திருவெம்பாவை திருவிழாவாகும். இந்தத் திருவாதிரை விழா தில்லைத் தலத்திலே நிகழ்வது போன்று ஈழத்துச் சிதம்பரத்திலும் மிகச் சிறப்பாக இடம்பெற்று வருகின்றது. இந்தியா சென்று சிதம்பரத்திலே நடராஜப் பெருமானைத் தரிசிக்க முடியாத பக்தர்கள் அனைவரும் ஈழத்துச் சிதம்பரத்திலே நடராஜப் பெருமானின் ஆனந்தக் கூத்தினைத் தரிசிக்கும் வாய்ப்பினைப் பெறுகின்றனர். இந்த உற்சவங்களைக் கண்டு தரிசிக்கின்ற அனைவரும் சகல சௌபாக்கியங்களுடன் வாழ எம்பெருமானின் திருவருளை இறைஞ்சி ஆசி கூறி அமைகின்றேன்.

சிவஸ்ரீ.வி.ஈஸ்வரக்குருக்கள், பிரதம சிவாச்சாரியார், ஈழத்துச்சிதம்பர தேவஸ்தானம்.

### தில்லைக்கூத்தனைத் துதித்துய்வீர்





ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படும் காரைநகர் சிவன்கோயிலில் கடந்த எட்டு நாள்களாக சிறப்பாக நடைபெற்றுவரும் திருவாதிரை உற்சவத்தின் பக்திப் பெருவிழாவாக பஞ்சரத பவனி இன்று மிகக் கோலா கலமாக நடைபெறுகின்றது.

தில்லைத் தலத்திலே நிகழ்வது போன்று திண்ணபுரத்திலும் நடராஜப் பெருமானது ஆதிரை விழா முறை தவறாது சிறப்பாகச் செய்யப்பட்டு வருகின்றது. இதனால் ஈழநாட்டில் வாழ்கின்ற சைவ மக்கள் எல்லோரும் சிவ விழாவை தரிசிக்க வருகிறார்கள். வந்து எம்மை விட்டு நீங்காத துன்பங்களை எல்லாம் நீக்குகின்ற கூத்தபிரான் தேரில் எழுந்தருளி வருகின்ற அழகைக் கண்டு அளவற்ற பேரின்ப வெள்ளத்தில் மூழ்கி கூத்தபிரான் திருவடிகளைத் துதிப்பார்கள். எமது முன்னோர்களினால் அமைக்கப்பட்ட இந்த ஆலயத்தின் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்று, தொடர்ந்து நித்திய நைமித்திய கிரியைகள் அனைத்தும் ஒழுங்கு முறையுடன் மிகச் சிறப்பாக இடம்பெற்று வருகின்றது. அடியவர்கள் அனைவரும் நாளை நடைபெறுகின்ற தீர்த்தோற்சவத்திலும் தொடர்ந்து நடைபெறுகின்ற உற்சவங்களிலும் கலந்து கொண்டு தில்லை நடராஜப் பெருமானினதும் ஆண்டிக்கேணி ஐயனாரினதும் திருவருளைப் பெற்றுய்ய ஆசி கூறி அழைக்கின்றோம்.

ஆ.அம்பலவிமுருகன் — மு.சுந்தரலிங்கம்.
ஆதீனகர்த்தாக்கள்.

### 'காரை'யின் உயிர்த்தேர்

வான் தரை குளிர்ந்து நிற்க
மழையென அமுதம் சிந்த
கானமும் குழல் தவிலும்
கல்நெஞ்சைக் கனிய வைக்க
மாணிக்க வாச கத்தால்
மனம் மொழி மெய்யும் பொங்க
மார்கழித் திருவெம் பாவை
மலர்ந்தது... நமை உய்விக்க!

'காரை' யின் உயிராய், சைவக்
கருணையின் உருவாய், இந்த
ஞாலமே வணங்கும்... ஈழ
நாட்டருள் ஊற்றுள் ஒன்றாய்,
ஞானத்தின் பொருளாய், எங்கள்
நம்பிக்கை முதலாய், வாழும்
'ஈழத்துச் சிதம்பரத்தில்'
இரதங்கள் ஐந்தெழுமின் றொன்றாய்

ஈசனும் ஐய னாரும்
பரிவார மூர்த்தி மாரும்
ஏறும்... தேர் வடங்கள் தொட்டு
இழுக்க; நம் வினைகள் நீறும்.
ஆனந்தக் கண்ணீர், வெள்ளம்
அதில்... புரண்டெழுந்து... போற்றிக்
கூடுவோம்... தில்லைக் கூத்தன்
குறை தீர்ப்பான்... திரண்டு வாரும்!

- த.ஜெயசீலன்.

### ஈழத்துச் சிதம்பரத்தில் கோயில்...



திருமூலர் திருவாக்காற் போற்றப்பட்ட வரலாற்றைக் கொண்ட பஞ்சலிங்கம் இலங்கை பூர்வீக இயக்கர், நாகர் வழிபட்டு உய்வுபெறப் பதிந்த பரம சிவன் அருவுருவத் திருமேனியாகும். பல கடல் கோள்கள் பண்டைய கண்டத்தைத் துண்டாடிய காரணத்தால் உருவாகிய தீவுக்கூட்டங்கள் பூமியிற் பலவுள, இலங்கையும் ஒரு தீவு, அதனருகில் அமைந்த நாகதீவும் ஒன்று. நாகதீவுக்கு மிக அண்மித்ததாக ஏழுதீவுகள் அமைந்திருந்தது. இன்று பாலங்களால் இணைக்கப்பட்டு நகரங்களாகப் பரிணமித்துவிட்டன. இவற்றுள் காரைதீவும் சிவம் போற்றிப் பலம்பெற்ற புண்ணிய தீவாகும்.

சிவனன்றித் தெய்வம் காணாத சித்தர்களாகக் காரைதீவு திண்ணபுரமாம் ஈழத்துச் சிதம்பரத்தில் நான்கு முனிவர்கள் நான்கு திக்குகளில் தமது தவத்தலத்தை அமைத்துக்கொண்டார்கள் என வரலாற்றுத் தகவல்கள் தொடர்ந்து நிலவி வருகின்றது.

திண்ணபுரத்தான் ஈழத்துச் சிதம்பரத்தில் அருளாட்சி கொண்ட காலத்தின் முன்னரேயே இலிங்கோற்பவரைச் சிந்தித்த அகத்தியர் எனும் முனிவர் சித்தத்தின் ஒளிபரவிய சித்தராக ஆட்சிசெய்த சித்திபெற்ற சிதம்பரமாகக் கண்டார்.

துர்வாச முனிவர் எனச் சிறப்பிக்கப்பட்ட அருளாளர் காரை நகரின் வடகிழக்கு மூலையில் அமைந்துள்ள தூம்பில் பிட்டித் திருமண்ணில் இடங்கொண்டு சிவனையே சிந்தித்து சித்திகள் சிதம்பரத்திற் பெற்று முத்திகண்டார்.

சிவன்கோயில் மேற்கு வீதியில் தினகரன் பிட்டி (திண்ணைக் களியான்) வைரவர் கோயிலிற் சரணடைந்து, சிவனுடன் திருமொழி பகர்ந்து, தினகரன் முனிவரானார். அதனால் புகழ்பெற்ற தினகரன் பிட்டி தோன்றியது.

தமிழகமும் இலங்கையும் தொன்றுதொட்டு உறவாடத் தடையற்ற உறவுடன் நிலவிய குலங்களைக் கொண்டது. அந்நியர்கள் ஆட்சியிலும் அது தொடர்ந்தது. அத்தகைய காலத்தில் ஆண்டிமுனிவர் தமிழகத்தில் இருந்து ஈழத்துச் சிதம்பரம் தோன்றும் திருப்பேரொளி சித்தத்திற் சிவசோதியாக; திண்ணபுரத்தின் தென்கிழக்கு மூலையில் இறைவன் ஐயனார் மண்ணுள் புதைந்திருந்த இடத்தில் திருவொளி பாய்ச்சிக்காட்ட, அவ்விடத்தில் 18 ஆம் நூற்றாண்டு ஆங்கிலர் காலக்கணிப்பின் காலம் ஐயனார் திருவுருவைத் தாபித்து, சிவன் வழிபாட்டிற்கு மணல்குவித்து சிவம்கண்டு, மனம் குவித்து விழி நிலைக்கவழிபட்டார். அவர் திருவுளத்தின் பெருங்கருணை அரனருள் ஒளிப்பிழம்பு 1848 ஆம் ஆண்டு தமிழகம் சிதம்பரம் கோயிலில் சிவலிங்கத்தின் மேல் தழுவப் பேரானந்தப் பேருவகையுற்ற ஈழத்துச் சிதம்பரம் உருவாகக் காரணராயினர் ஆதீனகர்த்தா சிவத்திரு. அம்பலவிமுருகர் (அம்பலவாணர் முருகர்)

1860 ஆம் ஆண்டு காரைநகர் அடியார்கூட்டம், சோமஸ்கந்தரை நெஞ்சினுட்கண்டு, கோயில் வாசலிற் கூடிநின்று, சிரமேற் கூப்பிய கரங்கள் வான்நோக்கக் கண்களை மூடி வாயை அரற்றினர். ஆதீன கர்த்தகள்:(சிவத்திரு அம்பலவிமுருகரும், அவரது மகன் சண்முகமும்) நெஞ்சங்கள் விம்மி, மூடிய கண்களுள் சோமஸ்கந்தர் புலப்பட்டார்.

ஆசையுந்த ஆதீனகர்த்தாக்கள் தமிழகம் சென்று சிற்பக் கலை வல்லுனரை நாடி இதய தாகத்தை விளக்கி நின்றனர். சுபயோக சுபநாளிற் சிற்பாசாரியார் பஞ்சலோகத்திற் பூக்கள் சொரிந்து, தூப, தீப ஆராத்தி செய்து, நைவேத்தியங்கள், கனிவகை படைத்து, நெய் சொரிந்து, பூநூல் தூக்கி, நாசியைத்தொட்டு, மந்திரம் செய்து, நிட்டையில் இருந்து, அக்கினி குண்டத்துள் பஞ்சலோகம் உருக்கிடத் துணிந்தனர். இருமுறை முயற்சியில் பஞ்சலோகச் சிற்ப அமைவு சிறப்புறவில்லை. எல்லோரது உளமும் கலக்கத்துக்கு உள்ளானது. அதர்வணவேத வித்தகர் சிற்பாசாரியார் ...

ஆதீனகர்த்தாக்களில் ஒருவரான சிவத்தி... அவர்கள் சித்தத்துள் ஒரு சிந்தனை பளிச்சிட்ட... கழற்றி உலோகக் கலவையிற் சேர்த்தார்.

அற்புதம்! ஆசாரியார் முகம் மலர்ந்தது எ... ஓம். சிவசிவசிவ ஓம்! சோமஸ்கந்தா

*சிவ ஓம்!*
*கண்களி கூர்ந்திடக் கண்டன...*
*கந்தனைக் கண்டனர் கூப்...*
*விண்தொடும் குருவையில் வாய...*
*கந்தனே சிவசிவ கந்தனே...*
*பண்ணிசை பாடினர் பரவினின்...*
*பித்தர்கள் ஆயினர் அடிய...*
*தன்னிரு விழிகளும் மலர்ந்திட...*
*கர்த்தர் இறையுடன் ஒன்றி...*

கடுக்கனைக் கழற்றி உலோகக் கலவையிற் கல... திரு. அம்பலவிமுருகர் அவர்கள் சோமஸ்கந்தனை... மாணிக்கவாசகர் அருள்பேறு அமைவாக இறை...

1883 ஆம் ஆண்டு திண்ணபுரம் ஈழத்துச் சி... பஞ்சலோகங்கள் குவிக்கப்பட்டுத் திருக்கூத்த... திருமேனி காணப் பூசை வழிபாடுகள் நிகழ்ந்த...

*ஐந்து பேரறிவும் கண்களே...*
*அளப்பெருங் கரணங்கள் ந...*
*சிந்தையே ஆகக் குணமொரு...*
*திருந்து சாத் விகமே ஆ...*
*இந்து வாழ் சடையான் ஆடும்...*
*எல்லையில் தனிப்பெருங் ...*
*வந்த பேரின்ப வெள்ளத்துள் ...*
*மாறிலா மகிழ்ச்சியில் மல...*

இந்த அற்புதத் திருமேனியை அடுத்த இ... நெல்மணிக் குவியலுள் புதைத்து வைத்து, 1908 ... சுபதினத்தில் சிதம்பரம் கோயில் திருப்பணிகண்... வேற்று மந்திரம் மொழிந்து திருப்பீடம் ஏற்றிக் கு...

கிருபானந்தவாரியார், கி.வா.-ஜெகநாதன் ... செஞ்சொற் சிங்காரவேலன், இரா.செல்வக்க... முதலியார் சிதம்பரம் கோயில் தீக்ஷிதர்கள், த... திருவாடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகா... ஆதீனங்களும், சமயப் பேரறிஞர்களும் திருக்... கண்டு மெய்சிலிர்த்து உளம் குளிர்ந்து, கண்... ஆனந்தித்து உச்சியிற் கூப்பிய கையினராய்ப் ...

1900 ஆம் ஆண்டையொட்டிப் பெருகிய ... போக்குவரத்து வசதி குறைவான காலமாகையால் ... நினைத்தனர். திண்ணபுரம் ஆதீனகர்த்தர் இந் நி... முன்னமைந்த பூவரச மர நிழலில் மாகேஸ்வரர்... தனர். இதன் காரணமாகக் கோயிலின் ஈசான மூ... களின் காணியிலேயே, மாணிக்கவாசகர் நெஞ்சில்... ஆம் ஆண்டு முதலாவது மாணிக்கவாசகர் மடா... ஈழத்துச் சிதம்பரத்தின் தனிச்சிறப்பு. மாணி... தமிழகத்திலும் அப்பொழுது எழவில்லை.

2013 ஆம் ஆண்டு மாணிக்கவாசகர் சுவாமி... தனையும் போற்றிப் பாடி அமுதேற்கும் மாகேசு... வழிபாட்டு சிந்தனைச் சித்தத்தால் மாணிக்கவ... தருளி அடியார்களுக்கு ஆனந்தம் பெருக்குகிற...

சிவகணேசன் ரெக்ஸ்
41, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 2063

Super Shoes
154, Navalar Road,
Jaffna.
Tel: 021 222 6809

கிருஷ்ணா நகை மாளிகை
அசல் 22 கரட் தங்க நகைகள்

தரமான புதிய டிசைன்...
கொள்வனவு செய்ய ...
தனம்ஸ் ரெக்...

சிங்கப்பூர் ஜுவல்லறி
93, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

லலிதா ரெக்ஸ்
இல. 5,6, நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 5260
நியூ லலிதா ரெக்ஸ் & சூ பலஸ்
இல. 42, பஜார் வீதி, வவுனியா.
தொ.பே: 024 222 1234

திருமுருகன் கொம் நெற்
இல. 208 A, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 7835.

சர...

வெளிநாடுகளிற்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்


American
மொத்தமாகவும் சில்லறையாகவும்
587, கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம்.
T.P: 021 221 7277

RU...
Versatile ...
No.104 A, Sta...
Jaffna. T.P...

S.T. PARAMESWARAN & CO. (PVT) LTD.
STP CARGO
Customs House Agent, Clearing & Forwarding Agency
TRANSPORT SERVICES
Colombo - Jaffna - Colombo
Head Office: 200 2/1, Central Road, Colombo-12, Tel: 011 2347210, Fax: 011 2395472,
Hot Line: 0777 306473, E-mail: stpcargo@hotmail.com

B.M.
ரெக்ஸ்ரைல்ஸ்
251, 1/10, மெயின் சிற்றி மாக்கற்,
கொழும்பு - 11

நவீன அழகிய 22 கரட் தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்
சாரங்கா நகைமா...
சாரங்கா
Sharanga Money Exchange (Pvt) Ltd.
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாண...



# ழத்துச் சிதம்பர
# வாதிரை உற்சவம்
# ப்புமலர் 17.12.2013

சிவமயம்
ஓம் நமசிவாய

## யில் காரணமான தடங்கள்

ள் சிற்பாசாரியார் கண்களும் பனித்தன.
வரான சிவத்திரு.அம்பலவிமுருகர்
ன பளிச்சிட்டது.தனது கடுக்கனைக்
சேர்த்தார்.
மலர்ந்தது எல்லோரும் கண்டனர்.
ந்தா
*சிவ ஓம்!*
*திடக் கண்டனரே சோமஸ்*
*கண்டனர் கூப்பினரே*
*நவையில் வாயரற்றி சோமஸ்*
*சிவசிவ கந்தனென்றே*
*டினர் பரவினின்றார் ஆடிப்*
*ஆயினர் அடியவரே*
*ளும் மலர்ந்திடவே ஆதீன*
*றையுடன் ஒன்றினரே*
க் கலவையிற் கலந்த ஆதீனகர்த்தா சிவத்
சோமஸ்கந்தனைத் தரிசித்த அக்கணமே
மைவாக இறைவனுடன் கலந்தார்.
புரம் ஈழத்துச் சிவன்கோயில் வாசலிற்
டுத் திருக்கூத்தனின் பஞ்ச கிருத்தியத்
டுகள் நிகழ்ந்தன.
*வும் கண்களே கொள்ள*
*க் கரணங்கள் நான்கும்*
*கக் குணமொரு மூன்றும்*
*சாத் விகமே ஆக*
*டையான் ஆடும் ஆனந்த*
*தனிப்பெருங் கூத்தின்*
*வெள்ளத்துள் திளைத்து*
*கிழ்ச்சியில் மலர்ந்தார்.*
அடுத்த இருபத்தைந்து ஆண்டுகளாக
வைத்து, 1908 ஆம் ஆண்டு சுபயோக
திருப்பணிகண்டு திருக்கூத்தனை வர
பீடம் ஏற்றிக் குடமுழுக்குக் கண்டனர்.
.-ஜெகநாதன் பாஸ்கரதொண்டமான்,
இரா.செல்வக்கணபதி, வச்சிரவேலு
தீக்ஷிதர்கள், தமிழகத்திலிருந்து வந்த
ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் மற்றும்
ஞர்களும் திருக்கூத்தன் திருக்காட்சி
குளிர்ந்து, கண்களில் அருவிநீர் சோர
கையினராய்ப் போற்றித் துதித்தனர்.
டிப் பெருகிய சிவனடியார் கூட்டம்
லமாகையால் அமுது குறித்துச் சிவனை
கர்த்தர் இந் நிலைக்கு இரங்கி கோயில்
ல் மாகேஸ்வரர்களுக்கு அமுது அளித்
லின் ஈசான மூலையில், ஆதீனகர்த்தாக்
வாசகர் நெஞ்சில் இடம் கொண்டு 1926
க்கவாசகர் மடாலயம் எழுந்தருளியதே
சிறப்பு. மாணிக்கவாசகர் மடாலயம்
வில்லை.
கவாசகர் சுவாமிகளையும் சிதம்பரக்கூத்
தற்கும் மாகேசுவரர்களின் உளத்தூடிய
தால் மாணிக்கவாசக சுவாமிகள் எழுந்
தம் பெருக்குகிறார்.

*''தென்னாடுடைய சிவனே போற்றி*
*எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி''*
*எழும்போதும் ஓம் நமசிவாய என்பேன்*
*எழுந்தே மகிழ்ந்து தொழும்போதும் ஓம் நமசிவாய என்பேன்*
*தொழுதே உருகி அழும் போதும் ஓம் நமசிவாய என்பேன்*
*அடியேன் உடலம் விடும்போதும் ஓம் நமசிவாய என்பேன்*
*திண்ணபுரம் ஈழத்துச் சிதம்பரம் தில்லைக்கூத்தனே.*

உன் அருட்பெருங்கருணையும், அழியாத ஞானமும், உனது அளவற்ற திருப் பெருங்கூத்தின் அழகும் கண்டு பொருளும் உணர்ந்து காரைநகரை வழிப் படுத்திய புலவர்கள் அவதரிக்க அருள்புரிந்த இறைவனே!

*மணற்காடு கண்ட கார்த்திகேயப் புலவர்*
*நடுத்தெரு கண்ட நாகமுத்துப் புலவர்*
*சம்பந்தர் கண்டி கண்ட (பஞ்சாட்சரக்குருக்கள்)*
*அல்வின் வீதி கண்ட அல்வின் ஏபிரகாம்*
*சம்பந்தர் கண்டி கண்ட சுப்பிரமணிய தேசிகர்*
*சிவன் கோயிலடி கண்ட கணபதீஸ்வரக் குருக்கள்*
*களபூமி கண்ட நீதிவான் அட்வகேற் நடராசா*
*விழானை கண்ட அம்பலவிமுருகன்*
*குமிழங்குழி கண்ட அருணாசல வாத்தியார்*
*நடுத்தெரு கண்ட வித்துவான் F.X.C நடராசா*
*கணக்காளர் கண்டி கண்ட பண்டிதர் அருளம்பலவானார்*
*புதுறோட் கண்ட வித்துவான் மு.சபாரத்தினம்*
*மாப்பாணவூரி கண்ட வித்துவான் க.முருகேசன்*
*கல்லோடை கண்ட திசைநாயகம்*
*உடையார் வளவு கண்ட நாகலிங்கம்*
*யாழ்ப்பாணம் பிறந்து மாப்பாணவூரி வாழ்ந்த சயம்பு வாத்தியார்*

காரைநகர் மண் சிறக்க அறிவு பெருக தமிழ் வளர்க்க திருக்கூத்தப் பெருமானே உன்னடி பரவிச் சிரந்தாழ்த்த இப்பெரியவர்களை, எமது மண்ணில் தோற்றுவித்துப் பெருமை தந்தாய். உன் அருட்பெருங்கருணை திருப்பெருங் கூத்து. பெரியவர்கள் செய்த பணி எமது மண் செய்த மாதவம்.

ஐந்தொழிலும் புரிந்து கூத்தாடி காரைதீவு மண்ணனைத்தும் அலைந்து மாட்சிமையை வளர்த்து, வளம்பெருக்கி வியாவிலில் ஐயனார் எனத் திருவுளப்படுத்தி, மண்ணுட் புதையுண்டிருந்த ஐயனார் எழுந்தருள ஆண்டி முனிவருக்கு துணையாக்கி, ஐயனாருடன் ஆண்டிமுனிவர் உறவாடி வழிபட்டுத் தவமியற் உனைத்தழுவ ஆட்கொண்ட பெருமானே!

திண்ணபுரம் ஈழத்துச் சிதம்பரத்தில் ஆட்சிகண்டாய் மணற்காட்டை ஆள மாரியம்மன் திருக்கோயில் அமைய வழியமைத்தாய்! தன்னையிலே பிள்ளையார் திருக்கோயில், பாலாவோடைத் தாய் அருள்மிகு மாரியம்மன் ஆலயம், களபூமியில் அருள்மிகு திக்கரை முருகமூரத்தி கோயில் அற்புதத்தை உற்சவத்தில் கண்டுருக அருள்தந்தாய்! கருங்காலி அருள்மிகு முருகமூர்த்தி கோயில் எழுந் தருள மகிழ்வு தந்தாய்! துறைமுகம் அருள்மிகு பிள்ளையார் கோயில் வழிபட்டு வெற்றி பெறத் துணை தந்தாய்! அருள்மிகு மருதடி வீரகத்தி விநாயகர் ஆலயம், வாரிவளவு ஸ்ரீ கற்பகவிநாயகர் ஆலயம், அருள்மிகு சிவகாமி அம்மன் கோயில், அருள்மிகு ஞானியார் முருகன் ஆலயம், பயிரிக்கூடல் ஸ்ரீ சிவசுப்பிரமணியர் கோயில், அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயில் எங்கும் மணி ஓசை. காலையிலே சிவசிந்தை! எப்பொழுதும் குலதெய்வவழிபாடு.

மேனியிலே திருநீறு! மதிகுளிரச் சந்தனம்! வெற்றிபெறக் குங்குமம்! பக்தியுடன் பூவணிந்து, பணிந்து தொழிலியற்றும் பக்குவம் யார் தந்தார்? கூத்தனே நீயிருக்க உனது குலம் பரந்திருக்க காரைநகர் காண வைத்த கல்விமான்கள், வணிகர்கள், தொழில் வல்லுனர்கள், விவசாயிகள் உன்னருளால் அல்லவா முத்திரை பதித்துள்ளார்கள்!

''ஈழத்துச் சிதம்பரத்துத் திருக்கூத்தனே உனது தூக்கிய திருவடிக்கீழ் எமது சிரம் பதிக்கிறோம்''.

*ஓம் நமசிவாய! ஓம் நமசிவாய!*
*போற்றி ஓம் நமச்சிவாய*

க.கு.க.சிவபாலன் (K.K.K)



## அறப்பணிகள் புரிந்து வரும் ஆலயம்



இலங்கையின் வரலாற்றுப் பெருமைமிக்க திருத்தலங்களுள் ஒன்றான ஈழத்துச் சிதம்பரத்தில் இன்று இரதோற்சவம் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது. இதுவரை காலமும் ,ஈழத்தமிழ் மக்கள் அனுபவித்துவந்த இன்னல்களில் இருந்து இடைக்கால ஓய்வு நிலையில் இலங்கையில் புகழ்பெற்ற திருத்தலங்களுக் கெல்லாம் அடியார்கள் பெருமளவில் சென்று வரும் இன்றைய சூழ்நிலையில் , ஈழத்துச் சிதம்பரத்திலும் இன்று பெருமளவு அடியார்கள் ஒன்று கூடுகின்றனர்.சோழப் பெருமன்னரின் ஆட்சிக்காலத்தில் ஆலயங்கள், அறப்பணி நிலையங்களாகவும் பொருளாதார மையங்களாகவும், கலைகளின் உறைவிடமாகவும் விளங்கின. நலிவுற்ற எமது பிரதேச மக்களின் நல்வாழ்விற்கேற்ற நற்பணிகளை நமது நாட்டில் உள்ள ஆலயங்களின் ஊடாக மேற்கொள்ள வேண்டும். கோயில்களுக்குப் பிரமாண்டமான கட்டடங்களை எழுப்புவதோடு நின்று விடாது, அவற்றின் ஊடாக மக்களின் மறுமலர்ச்சிக்குத் தேவையான திட்டங்களை வகுத்துச் செயற்படுவதற்கு அனைத்து மக்களும் முன்வர வேண்டும். 2 ஆவது உலக இந்து மாநாட்டின் ஞாபகார்த்தமாக ஆலய சூழலில் திறந்து வைக்கப்பட்டுள்ள அறப்பணி நிலையத்தின் ஊடாக பல்வேறு கலைப்பணிகளையும் அறப்பணிகளையும் மேற்கொண்டு எமது பிரதேச மக்களின் சமூக, பொருளாதார, கலாசார மேம்பாட்டிற்கு உதவுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இராமேஸ்வரத்தில் இருந்து சமயக் குரவர்களான திருஞான சம்பந்தர் , சுந்தரமூர்த்தி நாயனார் போன்றோர் ஞானக்கண்களால் ஈழத்திரு நாட்டில் உள்ள திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் என்பவற்றை தரிசித்து தேவாரப் பாடல்கள் பாடியது போல ஈழத்தில் உள்ள அடியார்களும் இந்தியாவிலே உள்ள சிதம்பரத்தை காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் இருந்து அகக் கண்களால் தரிசிக்கின்ற வாய்ப்பினை இந்தத் திருவாதிரை உற்சவமும் தில்லைக்கூத்தனின் திருநடனத்தினூடாகப் பெற முடிகின்றது . எனவே இந்த பஞ்சரதப் பவனியையும் திருநடனக் காட்சியையும் கண்டுகளிக் கின்ற பக்தர்கள் அனைவரும் பிறவிப்பிணி நீங்கி எல்லையில்லாப் பேரின்பப் பெருவாழ்வு பெற்றுய்ய எல்லாம்வல்ல ஈழத் துச் சிதம்பர சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானினதும் பூரணை பூட்கலை சமேத ஆண்டி கேணி ஐயனாரி னதும் திருவருளை வேண்டி நிற்கின்றேன்.

முன்னாள் இந்து கலாசார அமைச்சர் அமரர் தியாகராசா மகேஸ்வரன் அவர்கள் 2004 ஆம் ஆண்டு திருவாதிரை உற்சவ தேர்ச் சிறப்புமலருக்கு வழங்கிய செய்தி மீள் பிரசுரமாகின்றது.

புதிய டிசைன்களில் ஆடைகளைக்
வனவு செய்ய நாடவேண்டிய இடம்
ஸ் ரெக்ஸ்ரைல்
, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். T.P. 021 222 8544

ஏகாம்பரம்
புடைவை மாளிகை
72(9), பெரியகடை,
யாழ்ப்பாணம்.
021 222 2151

நல்லைக் குமரன்
ஹாட்வெயர்
யாழ்-கண்டி வீதி,
கிளிநொச்சி.

க.கு.கந்தையாபிள்ளை
பல்பொருள் வாணிபம்
318, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சரவணா
ரெக்ஸ்
யாழ்ப்பாணம். T.P: 021 222 1723

ஈழத்து சிதம்பரத்தில் தில்லைக் கூத்தனின்
திரு நடனம் காண வாரீர் வாரீர்
லக்சுமி பான்ஸி
234, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம். 077 9582566

www.karainews.com
காரைநகரில் இருந்து கிடைக்கப் பெறும் செய்திகள் உடனுக்குடன் தினம் தினம் புகைப்படங் களுடன் www.karainews.com என்ற இணை யத்தள முகவரியில் பார்த்து அறிந்து கொள்ளலாம். தினமும் ஆயிரத்துக்கு மேற்பட்ட உலகளா விய இணையத்தள வாசகர் களைக் கொண்டு கடந்த மூன்றாண்டுக ளாக விளங்குகின்றது.
www.karainews.com

மகாராணி
பட்டுச்சோலை
50, Grand Bazaar, Jaffna.,
50, பெரியகடை, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 3104.

RUPA
atile Trades
A, Stanley Road,
fna. T.P: 8330

T. தெய்வேந்திரம்
ஸ்ரோஸ்
62, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

இளவரசி
சேலைச் சோலை
பட்டுப்புடைவைகளின் சாம்ராஜ்யம்
57, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொ : 021 222 2503
தொ.நகல்: 021 222 8441

இராஜேஸ்வரி
ரெக்ஸ்ரைல்ஸ்
(இராஜபுரம்)
105, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 6953.

சாரங்கன் நகையகம்
SARANGAN NAGAIYAKAM
நகைமாடம்
T.P: 222 6972,
Fax.No: 222 8869
வங்கி உத்தரவு பெற்ற நாணயமாற்றுநர்
நாணயமாற்று
சேவை
(Pvt) LTD. (Permit No: Ecd/ In/ Aut/ Mc/ 164)
யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 6972

சிவன் மோட்டோஸ்
ஸ்ரோர்ஸ்
70/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
சிவகுமரன் என்ரப்பிறைஸ்
75, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Sellamuthus Textiles
Main Street, Nelliady, Karaveddy.
Tel: 021 226 3238
(C/14507)(2.6.3)

தருவது
வித்தியா

இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** பிரச்சினைகளுக்கு யதார்த்தமான முடிவுகள் எடுப்பீர்கள். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். வியாபாரத்தில் வேலையாள்கள் உதவுவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள்.

**இடபம்:** உங்களை அறியாமலேயே தாழ்வு மனப்பான்மை தலை தூக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் உங்கள் பெயர் கெடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். தானுண்டு தன் வேலையுண்டு என்றிருக்கப்பாருங்கள்.

**மிதுனம்:** வீண் சந்தேகமும் மறைமுக விமர்சனங்களும் வந்து செல்லும். எதிர்பார்த்த உதவிகள் தாமதமாகக் கிடைக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் மோதல்களைத் தவிருங்கள்.

**கடகம்** : ஆன்மிகப் பெரியோரின் ஆசி கிடைக்கும். நீண்ட நாள்களாக நீங்கள் பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வருவார். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள்.

**சிங்கம்:** எதிர்பார்ப்புகள் நிறைவேறும். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைகள் தருவார்கள்.

**கன்னி:** சில வேலைகளை விட்டுக் கொடுத்து முடிப்பீர்கள். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். நீண்ட நாள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பீர்கள்.

**துலாம்:** முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே செய்து முடிப்பது நல்லது. சிலர் உங்கள் மீது வீண் பழி சுமத்த முயற்சி செய்வார்கள். உத்தியோகத்தில் கூடுதலாக வேலை பார்க்க வேண்டி வரும்.

**விருச்சிகம்:** உங்கள் பலம், பலவீனத்தை உணருவீர்கள். உத்தியோகத்தில் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்பு வரும்.

**தனுசு:** வழக்கில் வெற்றி பெறுவீர்கள். உங்களால் மற்றவர்கள் ஆதாயமடைவார்கள். வியாபாரத்தில் புதிய யுக்திகளைக் கையாள்வீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் பாராட்டும்படி நடந்து கொள்வீர்கள்.

**மகரம்:** சிக்கனமாகச் செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். வேற்றுமதத்தவர் உதவுவர். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். உத்தியோகத்தில் தலைமையின் நம்பிக்கையைப் பெறுவீர்கள்.

**கும்பம்:** எதிர்ப்புகளையும் தாண்டி முன்னேறுவீர்கள். பால்ய நண்பர்கள் தேடி வருவார்கள். வியாபாரத்தில் பங்குதாரரை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

**மீனம்:** சவாலில் வெற்றி பெறுவீர்கள். சொத்துச் சிக்கலில் சுமுகத் தீர்வு காண்பீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள்.


# நாம் உதவி செய்வது நமக்கே; உலகுக்கல்ல



## விவேகானந்தரின் சிந்தனைகளிலிருந்து

நம் கடமைகளை நாம் சரிவரச் செய்வது ஆன்மிக முன்னேற்றத்துக்கு எப்படி உதவுகிறது என்பதை மேலும் காண்பதற்கு முன், 'கர்மா' என்பதற்கு இந்தியாவில் வழங்கும் மற்றொரு கருத்தையும் சுருக்கமாக நான் உங்கள் முன்வைக்க விரும்புகிறேன். ஒவ்வொரு சமயத்திலும் தத்துவம், புராணம், சடங்கு என்று மூன்று பகுதிகள் உள்ளன. தத்துவம் என்பது ஏறக்குறைய சமயங்களின் உயிர்நாடியாக அமைந்துள்ளது. புராணம் என்பது இந்தத் தத்துவம் கூறுகின்ற மிக நுட்பமான, எல்லோரும் விளங்கிக் கொள்ள முடியாத கருத்துக் களை, எல்லோரும் எளிதில் புரிந்து கொள்ளும்படி, அந்தச் சமயத்தோடு தொடர்புள்ள மகான்களின் வாழ்வில் நடந்த அதிசயமான நிகழ்ச்சிகள், கதைகள், கற்பனைகள் மூலமும் மற்றும் ஆச்சரியகரமான நிகழ்ச்சிகள் மூலமும் கூறுவதாகும். சடங்குகள் என்பன நுட்பமான தத்துவக் கருத்துகளுக்கு மேலும் உறுதியான வடிவத்தைக் கொடுப்பதாகும். சடங்குகள் கர்மப் பகுதியைச் சேர்ந்தவை. எல்லோருமே தத்துவத்தை உணர்ந்து பின்பற்ற முடியாது. சடங்கு என்பது உண்மையில் தத்துவத்தை எல்லோரும் பின்பற்றும்படி செய்கின்ற ஓர் அமைப்பேயாகும். இந்தச் சடங்குதான் கர்மா என்பது. இந்தச் சடங்கு ஒவ்வொரு சமயத்துக்கும் மிகவும் தேவையானதாகும். ஏனென்றால் ஆன்மிகத்தில் மிக உயர்ந்த நிலையை அடையும் வரை, நம்மில் யாரும் சமயத்தின் மிக உயர்ந்த தத்துவத்தைப் புரிந்துகொள்வது முடியாத காரியம். எதையும் தன்னால் புரிந்துகொள்ள முடியும் என்று நினைப்பது சுலபம். ஆனால் நடைமுறையில் அதைச் செய்ய வேண்டிய வரும்போது, இதுவென்று திட்டமாகக் கண்ணால் பார்க்கவோ, மனத்தால் நினைக்கவோ முடியாத ஒன்றைப் புரிந்து கொள்வது அவ்வளவு சுலபமானது அல்ல என்பதைக் காண்பார்கள். அதனால் கண்ணுக்கும் மனத்துக்கும் புலப்படும் அடையாளங்கள் (Symbols) சமயத்தைப் புரிந்து கொள்வதற்கு மிகச் சிறந்த உதவியாக அமைந்துள்ளன. எனவே அவைகளைத் தேவையில்லை என்று நாம் தள்ளி விட முடியாது. மிகப் பழங்காலத்திலிருந்தே எல்லாச் சமயங்களுமே அடையாளங்களைப் பயன்படுத்தி வருகின்றன. ஒரு வகையில் சின்னங்கள் அடையாளங்கள் இல்லாமல் நம்மால் சிந்திக்கவே முடியாது. சொற்கள் என்பது சிந்தனையின் அடையாளங்களே அன்றிவேறல்ல.

# உலகை வியக்கவைக்கும் எக்ஸ்-ரே கண்ணழகி!



உடலிலுள்ள கோளாறுகளை அறிய நவீன மருத் துவ உலகில் எக்ஸ்-ரே, ஸ்கான் உள்ளிட்ட எவ்வளவோ புதுமையான மருத்துவ பகுப்பாய்வு முறைகள் தோன்றி விட்டன. ஆனால், 1987 ஆம் ஆண்டு ரஷ்யா வில் உள்ள சரன்ஸ்க் என்ற இடத்தில் பிறந்த நிகோலெயவ்னா நடாஷா டெம்கினா என்ற பெண் தனது வெறும் கண்களாலேயே மனித உடலின் உள்ளுறுப்புகளை ஊடுருவி பார்க்கும் பிரமிக்கத்தக்க ஆற்றல் பெற்றவளாய் திகழ்ந்தாள்.

தனது பத்தாவது வயதில் தாயின் உடல் உள்ளுறுப்புகளை ஊடுசக்தி மூலம் வெறும் கண்ணால் பார்க்கத் தொடங்கிய இவரது புகழ் காலப்போக்கில் உலகம் முழுவதும் படர்ந்து பரவியது. அதையடுத்து இவரிடம் உள்ள அற்புத சக்தியை அறிந்த உள்ளூர் மக்கள் இவரது பார்வை பட்டாலே நோய் குணமாகி விடும் என நம்பத் தொடங்கி டெம் கினாவின் வீடுதேடிப் படையெடுக்கத் தொடங்கினர். மருத்துவரின் வயிற்றின் எந்தப் பகுதியில் அல்சர் கட்டி உள்ளது என்றும், மற்றொரு பெண்ணின் உடலில் உள்ளது புற்றுக் கட்டி அல்ல என்றும் தீர்க்கமாக கூறி இவர் மருத்துவ நிபுணர்களையே திகைக்க வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## நாளை

மார்கழி-03
புதன்கிழமை 18.12.2013
திதி: பிரதமை பி.ப.04.51 வரை
நட்சத்திரம்: திருவாதிரை
பி.இ.03.53 வரை
சுபநேரம்:
04.53- 06.23 வரை
இராகுகாலம்:12.33 -01.53 வரை

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 1 | | 3 | | 8 | |
| 6 | 4 | 5 | | 2 | 7 | | 1 | |
| | | | 4 | 9 | | 5 | | |
| | | | 3 | 6 | | 7 | 9 | |
| 4 | | | | 8 | | | | 2 |
| | 6 | 9 | | 1 | 4 | | | |
| | | 4 | | 3 | 1 | | | |
| | 3 | | 5 | 4 | | 2 | 7 | 9 |
| | 8 | | 6 | | 9 | | | |


சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 1 | 5 | 7 | 6 | 9 | 8 | 4 | 3 |
| 9 | 8 | 7 | 3 | 1 | 4 | 2 | 5 | 6 |
| 4 | 3 | 6 | 5 | 2 | 8 | 9 | 7 | 1 |
| 3 | 7 | 8 | 6 | 5 | 2 | 1 | 9 | 4 |
| 1 | 6 | 9 | 8 | 4 | 7 | 5 | 3 | 2 |
| 5 | 4 | 2 | 1 | 9 | 3 | 6 | 8 | 7 |
| 6 | 2 | 3 | 9 | 7 | 5 | 4 | 1 | 8 |
| 7 | 9 | 4 | 2 | 8 | 1 | 3 | 6 | 5 |
| 8 | 5 | 1 | 4 | 3 | 6 | 7 | 2 | 9 |

*நேற்றைய சுடோக்கின் விடை*

ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப [illegible]ண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அ[illegible]ள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# 'வியாழனின் பனிநிலவில் உயிர்கள் வாழலாம்'



வியாழன் கிரகத்தின் பனி நிறைந்த நிலவான யூரோப்பாவில் உயிர்கள் வாழ்வதற்கு ஏதுவான சூழ்நிலை இருப்பதற்கான மேலும் ஆதாரங்களை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

புவியின் சுற்றுவட்டப் பாதையில் இருக்கும் கண்ணாடி மூலம் பிரதிபலிக்கும் தொலைநோக்கி ஒன்றின் பிம்பங்களில் காணப்பட்ட யூரோப்பாவின் படங்களில் அதன் மேற்பரப்பில் காணப்படுகின்ற தண்ணீர்த் தெறிப்புகள் அங்கு நுண்ணிய உயிரிகள் வாழ்வதற்கான சூழல் இருப்பதற்கான ஒரு சமிக்ஞையாகும். சான்பிரான்ஸிக்கோவின், 'அமெரிக்க புவிப் பௌதிகவியல் வருடாந்த மாநாட்டில் இந்தக் கண்டுபிடிப்பு குறித்த தகவல் அறிக்கையிடப்பட்டது.

எனவே யூரோப்பாவுக்கு பயணித்து ஆராய்வதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்று விஞ்ஞானி கள் கூறுகிறார்கள்.

# நல்லிணக்கம் ஏற்படுவதற்கு நீதியை நிலைநாட்டுங்கள்

## மண்டேலாவின் வாழ்க்கையிலிருந்து பல பாடங்களை நாங்கள் கற்க வேண்டும் என்கிறார் சம்பந்தன் எம்.பி.

கொழும்பு,டிசெ.17

தென்னாபிரிக்காவின் மறைந்த, முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் வாழ்க்கையிலிருந்து நாம் பல பாடங்களை கற்றுக்கொள்ள வேண்டியிருக்கின்றது.

உண்மை, நீதி மற்றும் சமத்துவம் நிலைநாட்டப்பட வேண்டும். இவையே புரிந்துணர்வு மற்றும் நல்லிணக்கம் ஏற்படுத்துவதற்கு அடிப்படையான அத்திபாரமாகும்.


இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற தென்னாபிரிக்காவின் மறைந்த, முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் மறைவு குறித்து இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நெல்சன் மண்டேலா நினைத்திருந்தால் வாழ்நாள் முழுவதும் ஜனாதிபதியாக இருந்திருக்க முடியும். ஆனால், அவர் அவ்வாறு நினைக்கவில்லை. அவருடைய வாழ்க்கை, செயற்பாடுகள் எமக்கு ஒரு பாடமாக அமைய வேண்டும். அது இலங்கையை மாற்றியமைப்பதற்கும் உதவும்.

மறைந்த நெல்சன் மண்டேலாவைப் பொறுத்தவரையில் அவர் ஒரு பயங்கரவாதியாகவே கருதப்பட்டார். அவரது



வாழ்க்கையில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டு வந்தன.

ஆனால், இன ஒதுக்கீட்டு கொள்கையானது மனிதாபிமான மற்ற ஜனநாயகக்கத்துக்கு மாறான மனித சமுதாயத்தால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாததாகும் என்ற கொள்ளை யில் அவர் உறுதியாக இருந் தார். வெள்ளை இனத்தவர் அவரைக் கைது செய்வதற்கு முயற்சித்த போது, தனது வாழ்க்கை

“ ”

> உண்மை, நீதி மற்றும் சமத்துவம் நிலைநாட்டப்பட வேண் டும். இவையே புரிந் துணர்வு மற்றும் நல்லிணக்கம் ஏற்படுவதற்கு அடிப்படையான அத்திபாரமாகும்.

யைக் கூட அமைதியாக நடத்தமுடியாத நிலையில் அவர் ஓடி ஒளிந்து வாழ்ந்தார். நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் அவருக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது. 1990 ஆம் ஆண்டு 27 வருடங்களுக்கு பின்னர் அவர் சிறையிலிருந்து வெளியே வந்தார். சிறையில் கூட அவர் வசதியாக இருக்கவில்லை. அவர் அடைக்கப்பட்டிருந்த அறை வசதியாகப் படுத்திருக்க முடியாத அறையாக இருந்தது. அவ்விதமான ஒரு சூழலில் தான் அவர் அடைக்கப்பட்டிருந்தார்.

'ஜனநாயக சுதந்திரமான சமூகத்தை மதிக்கின்றேன். சம உரித்துடைமையுடன் நல்லிணக்கமாக வாழ விரும்புகின்றேன். அந்தக் கொள்கைக்காக உயிர்த்தியாகம் செய்வதற்கும் தயார்' என்று நீதிமன்றத்தில் அவர் தெரிவித்தார்.

வழக்கு நிறைவடைந்த பின்னர் அவர் குற்றவாளியாக்கப்பட்டு அவருக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது. அவர் விளக்கமறியலுக்குப் போனபோது துடிப்புமிக்க, உணர்ச்சிமிக்க ஒருவராகவே சிறைக்குச் சென்றார்.

அவர் சிறைவாசம் முடித்து வெளியில் வந்தபோது வேறு விதமான மனிதராகக் காணப்பட்டார். அவர் முற்றாக மாறியிருந்தார். இந்த மாற்றத்துக்குக் காரணம் என்ன என்று பலர் கேட்டபோது, சிறையில் இருந்தபோது ஆழ்ந்த சிந்தனைப் பயிற்சியில் ஈடுபட்டமையால் முதிர்ச்சியடைந்திருக்கின்றேன் என்று கூறினார்.

அவர் சிறையிலிருந்து வெளியேறியபோது, வெள்ளையர்களின் ஆட்சியில் மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன. இன ஒதுக்கீட்டுக் கொள்கையை மாற்றியமைப்பது, உண்மையான ஜனநாயகத்தைக் கொண்டு வருவது ஓர் இலகுவான விடயமாக இருக்கவில்லை. அரசமைப்பில் தேவையான விடயங்களைக் கொண்டுவருவது இலகுவான விடயமாக இருக்க வில்லை.

வெள்ளை மற்றும் கறுப்பு இன மக்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது இலகுவான விடயமாக இருக்கவில்லை. இந்தச் சூழலில் நேர்மையாகச் செயற்பட வேண்டியது கட்டாயமாக இருந்தது. அதனை மண்டேலா செய்தார். ஒரு விசுவாசமான நடத்தைக்கான பங்களிப்பைச் செய்தார்.

உண்மையான நல்லிணக்கம், புரிந்துணர்வு மக்கள் மத்தியில் ஏற்படவேண்டுமாக இருந்தால் உண்மை அறியப்படவேண்டும்; அவற்றைக் காணாமல் புரிந்துணர்வை ஏற்படுத்தமுடியாது. நடந்து முடிந்தவை, நடந்துகொண்டிருப்பவை மற்றும் நடக்க வேண்டியவை ஆகியவற்றில் இருந்து உண்மையைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறான நிலை ஏற்பட்டால் மட்டுமே எல்லோரும் உள்வாங்கக்கூடிய ஒற்றுமையை ஏற்படுத்தமுடியும். அதன் ஊடாகவே நிரந்தரமாகவும் விசுவாசமாகவும் இருக்க முடியும். உண்மையை மறைப்பதற்கு நெல்சன் மண்டேலா சம்மதிக்கவில்லை.

எனவே மறைந்த நெல்சன் மண்டேலாவின் வாழ்க்கையிலிருந்து நாம் பல விடயங்களைக் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கின்றது.

உண்மை, நீதி மற்றும் சமத்துவம் நிலைநாட்டப்பட வேண்டும். இவையே புரிந் துணர்வு மற்றும் நல்லிணக்கம் ஏற்படுவதற்கு அடிப்படையான அத்திபாரமாகும்- என்றார். (ச)

## நாடு திரும்பினார் ஜனாதிபதி மஹிந்த



கொழும்பு,டிசெ.17

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, கென்யாவுக்கான தனது பயணத்தை முடித்துக்கொண்டு நேற்று திங்கட்கிழமை அதிகாலை 3 மணிக்கு நாடு திரும்பினார் என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தென்னாபிரிக்காவின் மறைந்த, முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவுக்கு இறுதி அஞ்சலி செலுத்தியதன் பின்னர் அங்கிருந்து கென்யாவுக்கு ப்பயணம் செய்திருந்தார்.

ஜனாதிபதியின் கென்யாவுக்கான பயணத்தின்போது இரு நாடுகளுக்கும் இடையில் பாதுகாப்பு,வர்த்தகம் உள்ளிட்ட 9 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# மண்டேலாவின் வரலாறுதான் அறிவூட்ட வேண்டும் அரசுக்கு

## அஞ்சலி நிகழ்வில் மனோ கணேசன்

கொழும்பு,டிசெ.17

தென்னாபிரிக்காவின் மறைந்த, முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் வரலாறு இலங்கைக்கு அறிவூட்ட வேண்டும். வெற்றி பெற்று பதவிக்கு வந்தபின்னர் மாற்று இனத்தவரை நோக்கி நீண்ட மண்டேலாவின் நேசக்கரத்தை பற்றி தெரிந்து கொள்ள வேண்டும். தனது பதவிக் காலத்தை நீடிக்க தமது நாட்டின் அரசமைப்பை மண்டேலா திருத்த வில்லை என்பதை இலங்கை அரசு தெரிந்து கொள்ள வேண் டும்.

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற தென்னாபிரிக்காவின் மறைந்த, முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் மறைவு குறித்து இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-



மண்டேலா குறித்து கலந்துரையாடுவதற்கு உலக பரப்பில் இலங்கையைப் போல் பொருத்தமான நாடு இன்று வேறு எதுவும் இல்லை. அதுபோல் மண்டேலா குறித்துப் பேசுவதற்கு இன்றைய தருணத்தைவிட இந்த நாட் டுக்குப் பொருத்தமான வேறு ஒரு தருணமும் இல்லை.

இலங்கையிலும் தமிழர்களின் சாத்வீக போராட்டத்துக்கு, இலங்கை அரசுகள் அரச பயங்கரவாதத்தின் மூலமாக பதில் கொடுத்தன.

இந்த நாட்டில் புலிகளுக்கு எதிராகப் பெற்ற வெற்றி, தமிழ் சமூகத்துக்கு எதிராக பெற்றுக் கொண்ட வெற்றியாக மாற்றப்பட்டுள்ளது. அது சிங்கள பௌத்தர்களின் வெற்றியாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதனால்தான் இராணுவ வெற்றியை பெற்றுக் கொண்ட அரசிடமிருந்து தமிழர் களை நோக்கி எந்தவொரு நேசக்கரமும் நீட்டப்பட்டவில்லை.

மண்டேலாவின் முழுமையான வரலாறையும் அறிந்து கொள்ளாமல்தான் இங்கிருந்து சிலர் ஜோஹன்னஸ்பர்க் சென்று மண்டேலாவின் மரணச் சடங்கிலும் கலந்து கொள்கின்றனர். மண்டேலாவின் வரலாறு இந்த நாட்டுக்கு அறிவூட்ட வேண்டும். மண்டேலா ஒரு கறுப்பு இனத்தவர். எனவே அவரது வரலாற்றை எவரும் மேற்கத்தைய வெள்ளையர்களின் சதி என்று சொல்லி விடமுடியாது. மண்டேலாவின் உண்மை வரலாறு குறித்து இவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். .-என்றார். (ச)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

சர்வதேச அங்கீகாரம் பெற்ற
Edexcel - UK இனால் வழங்கப்படும்
**HND in Software Development**
கற்கைநெறியினைப் பூர்த்தி செய்து இன்று (17.12.2013)
Center of Banking Studies - Central Bank of Ceylon இல்
நடைபெறும் பட்டமளிப்பு விழாவிற்கு கலந்து கொள்ளும்
எமது மாணவர்களை மனமார வாழ்த்துவதோடு அவர்கள் மேன்மேலும்
நவீன தகவல்தொழில் நுட்ப உலகில் முன்னேறிச்செல்ல
வாழ்த்துகின்றோம்

நடைபெறும் பட்டமளிப்பு விழாவிற்கு கலந்து கொள்ளும் மாணவர் விபரம்

| | |
|---|---|
| Mr.Jeyakumar Siththirangan | Mr. Susruthan Seran |
| Mr.Chandrakulasegaran Anojan | Mr.Sathiyabalan Saujanyan |
| Mr.Rasavarothayan Ragulan | Mr.Thayaseelan Shageetharan |
| Miss.Mayoori Thedchanamoorthy | Mr.Thevarajah Thevashanthan |
| Mr.Pathinather Oscarkenneth | Mr.Balakrishan Anitharajah |
| Mr.Sathiyanathan Sivaruban | Mr.Sampulingam Janarthan |

பாராட்டி வாழ்த்துவோர்

ESOFT
Shaping Lives, Creating Futures.

(சி.10320)

முகாமையாளர், விரிவுரையாளர்கள்

ESOFT METRO CAMPUS - JAFFNA

No.137, K.K.S Road, Jaffna | Tel : 021 22 4142 | Hotline : 077 309 9308

# தமிழரை அடக்க முயன்றால் அதற்கு எதிராகப் போராட்டம்

## கூட்டறிக்கையில் எச்சரிக்கை

மட்டக்களப்பு,டிசெ.17

தமிழ் மக்களை அடக்கி ஆள நினைத்தால் அதற்கு எதிராகப் போராடுவதற்கு நாங்கள் தயாராக உள்ளோம். கல்முனை தமிழர்களுக்குச் சொந்தமான பூர்வீகக் கிராமம். அவர்கள் அரசியல் அனாதைகள் அல்ல என்பதனை முஸ்லிம் அரசியல்வாதிகள் புரிந்துகொள்ள வேண்டும்.

கல்முனை மாநகர சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்க்கட்சித் தலைவர் அ.அமிர்தலிங்கம், உறுப்பினர்களான அ.விஜய ரெட்ணம், வி.கமலதாசன், சி.ஜெயக்குமார் ஆகியோர் கூட்டாக விடுத்த ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கான முழு அதிகாரம் வழங்குவது தொடர்பாக அண்மையில் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்ற கலந்துரையாடலில் முஸ்லிம் பிரதிநிதிகள் வெளியிட்ட கருத்துக்களையும் அவர்களது செயற்பாடுகளையும் கல்முனையின் பூர்வீகக்குடிகளாக வாழ்ந்து வரும் தமிழர்களை அடக்கி, ஒடுக்கி ஆள நினைக்கும் செயற்பாடாகவே பார்க்க வேண்டி உள்ளது.

எமது சகோதர இனமாகப் பழகும் முஸ்லிம் இனத்தின் அரசியல்வாதிகளின் செயற்பாடுகளும், அறிக்கைகளும் தமிழ் இனத்தை அடக்கியாள நினைக்கும் அவர்களது சிந்தனையும் தமிழ் மக்கள் மனங்களை வேதனை அடையச் செய்துள்ளன.

> "-"
>
> அம்பாறை மாவட்டத்தில் உள்ள பல பூர்வீக தமிழ் கிராமங்கள் அழிக்கப்பட்டு இன்று முஸ்லிம் கிராமங்களாகமாற்றப்பட்டுள்ளன.

முஸ்லிம் இனத்துடன் நாம் தொடர்ந்து சேர்ந்து வாழ முடியுமா என்னும் அச்ச நிலையையும் ஏற்படுத்தியுள்ளன. இதற்குப் பல வரலாறுகளை புரட்டிப் பார்க்கும் தேவையும் தற்போது ஏற்பட்டுள்ளது.

1963ஆம் ஆண்டுக்கு முன்னர் மட்டக்களப்புடன் அம்பாறை மாவட்டம் இணைந்திருந்தபோது, தமிழ் மக்களால் முஸ்லிம் மக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்பட்டதில்லை. முஸ்லிம் மக்கள் தமிழ்கட்சிகளில் தான் அரசியல் செய்தார்கள்.

தமிழர்களும் முஸ்லிம் மக்களுக்கே வாக்களித்து பல முஸ்லிம் அரசியல் தலைவர்களை உருவாக்கினர். ஆனால் அவர்கள் அவர்களது சமூகம் சார்ந்த செயற்பாடுகளிலே கூடுதல் கரிசனை செலுத்தினர்.

அதன்பின்னர் அம்பாறை மாவட்டம் தனி மாவட்டமாக உருவாக்கப்பட்டதன் பின்னர், அம்பாறையில் உள்ள பல பூர்வீக தமிழ் கிராமங்கள் அழிக்கப்பட்டு இன்று முஸ்லிம் கிராமங்களாக மாற்றப்பட்டுள்ளன.

பல ஆலயங்கள் உடைக்கப்பட்டு பள்ளிவாசல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இங்கிருந்த பூர்வீக தமிழ் மக்கள் முஸ்லிம் அரசியல்வாதிகளின் அடாவடித்தனத்தாலும், கபடச் செயற்பாடுகளாலும் வெளியேற்றப்பட்டனர் -என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச -31)

## விருது வழங்கும் நிகழ்வு 19 இல்

அம்பாறை,டிசெ.17

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அம்பாறை மாவட்ட அலுவலகம் நடத்தும் மாவட்ட இளைஞர் விருது வழங்கும் விழா எதிர்வரும் 19 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அம்பாறைமாவட்ட செயலக ஏ.ஜ. விக்ரம கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அம்பாறை மாவட்ட உதவிப் பணிப்பாளர் சிசிரகுமார தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், அம்பாறைமாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், நாடாளுமன்றஉறுப்பினர்கள், மாகாண அமைச்சர் கள், மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் அரச திணைக்களங்களின் தலைவர்கள் உட்பட பலர் கலந்து கொள்வர். கிராமப் புறங்களில் இலைமறை காயாக மறைந்து கிடக்கும் இளைஞர், யுவதிகளின் கலை, கலாசார திறமைகளை வெளிக்கொணரும் நோக்கில் வருடாந்தம் இந்த விருதுவழங்கும் விழா நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## யானை தாக்கி இளைஞர் சாவு



கொக்கட்டிச்சோலை, 40ஆம் வட்டை தாந்தாமலை எனும் பிரதேசத்தில் யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று திங்கட்கிழமை நண்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் மாவடி முன்மாரி பிரதேசத்தை சேர்ந்த 16 வயதுடைய கேதாரபிள்ளை யோகேஸ்வரன் என்ற இளைஞரே என்பவரே உயிரிழந் துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த ஒரு வார காலப் பகுதியில் இந்தப் பகுதியில் யானை தாக்குதலுக்கு உள்ளாகி மூவர் உயிரிழந்துள்ளனர். எனவே யானையின் அட்டகாசத்தை கட்டுப்படுத்த உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரியுள்ளனர். (ங)

## சிகிச்சை நிலையம் அமைக்க நிதி சேகரிப்பு

மட்டக்களப்பு,டிசெ.17

கண்டி வைத்தியசாலை வளாகத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள 10 மாடிகளைக் கொண்ட புற்றுநோய் சிகிச்சை நிலையத்துக்கு மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் பல நகரங்களில் சனிக்கிழமை நிதி சேகரிக்கப்பட்டது.

கண்டி திருத்துவக் கல்லூரியின் சாரணிய மாணவர்களே இந்த நிதி சேகரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.



சாரணர் இயக்கத்தின் 100 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டே இந்த நிதி சேகரிப்பு நடவடிக்கையில் சாரணர்கள் ஈடுபட்டனர்.

கண்டியிலிருந்து ஆரம்பமான 12 நாள் பயணத்தில் 8 ஆவது நாளான நேற்றுமுன்தினம் அவர்கள் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களை வந்தடைந்தனர்.

திருத்துவக் கல்லூரியின் சாரணிய மாணவர்களுடன் பிரதேச சாரணிய மாணவர்களும் இணைந்து நிதி சேகரிப்பில் ஈடுபட்டனர். (ச)




யூனியன் வங்கி
ඔබේ දියුණුවේ බැංකුව

உங்களுக்கு மேலும் சிறந்த சேவை வழங்குவதற்காக

**யூனியன் வங்கி சுன்னாகம் கிளை**

இன்று இடமாற்றம் செய்யப்படும்.

118, சேர் பொன். இராமநாதன் (கே.கே.எஸ்) வீதி,
சுன்னாகம்.

021 2240930

(f.10240) (6.3.45)

ரேட்டிங் BB+(lka), RAM BBB/P3
யூனியன் பாங்க் ஒப் கலம்பு பி.எல்.சி. இலங்கை மத்திய வங்கியினால் உரிமம் அளிக்கப்பட்டு மேற்பார்வை செய்யப்படும் வர்த்தக வங்கியாகும்.

தலைமை அலுவலகம்: 64, காலி வீதி, கொழும்பு 03. தொலை: 011 2 374 100
www.unionb.com

## திருவாசக முற்றோதல்

நவாலி கதிர்காம முருகன் ஆலய திருவாசக முற்றோதல் நிகழ்வும் விசேட பூசை வழிபாடும் நாளை புதன்கிழமை இடம்பெறும் என்று ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ மா.பத்மநாதன் அறிவித்துள்ளார். அன்றையதினம் கதிர்காமக்கந்தன் வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறும். (ந-50)

## கண்ணீர் அஞ்சலி



எமது ஆலய பிரதம குரு
சிவ ஸ்ரீ சுந்தர ஸ்ரீ ரங்கநாதக் குருக்கள்
அவர்களின் அன்புத் தந்தை
**சிவஸ்ரீ சு.சுப்பிரமணிய சுந்தரராஜக் குருக்கள்**
(முன்னாள் பிரதம குரு உளக்கை பளச்சி பத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலயம், வட்டுமேற்கு)

15.12.2013 இறைபதம் எய்திய செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைவதோடு அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பத்திரகாளி சமேத வீரபத்திர பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
**பரிபாலன சபை, வட்டு மேற்கு,**
**உளக்கை பளச்சி பத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலயம்.**
**வட்டுமேற்கு, வட்டுக்கோட்டை.** (சி10321)(12.6.3)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



கடந்த 19.11.2013 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தின் தலைவர்
**அமரர் சுப்பையா கனகரத்தினம்**
அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் (18.12.2013) புதன்கிழமை காலை 5.00 மணியளவில் ஊறணி மடத்தில் நடைபெறும்.
(19.12.2013) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மா சாந்திக் கிரியையிலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"தெணியம்பை"
யாழ் வீதி,
வல்வெட்டித்துறை.

**குடும்பத்தினர்** (40042)(7.6.3)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

லிங்கநாயகம்-மங்கையர்க்கரசி தம்பதியரின் செல்வப் புதல்வன்
**அமரர் சாரங்கன் [சாரு]**



பிறப்பு 22.06.1989
இறப்பு 28.12.2012

ஆண்டுகள் பல சென்றாலும் ஆறாது... எம் துயரம் மாறாத நினைவுகளால் மனம் வெந்து வாடுகின்றோம் அழகிய உன் சிரித்த முகம் என்றும் எம் நெஞ்சங்களில் குடியிருக்க – அன்புச் செல்வமே ஆண்டவன் அணைப்பில் சாந்தி பெற வேண்டுகின்றோம்.

எமது அன்புச் செல்வத்தின் ஓராண்டு சிராத்த தினக் கிரியைகள் இன்று (17.12.2013) செவ்வாய்க்கிழமை மு.ப 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

3ஆம் வட்டாரம்,
நெல்வரை, நெடுந்தீவு.

**குடும்பத்தினர்** (42033)(7.6.3)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

எங்கள் அன்புத் தெய்வம்
திருமதி
**இந்திராணி சிவகுருநாதன்**
(பூப்பிள்ளை)



தோற்றம் 20★07★1940
மறைவு 27★12★2012

வாழ்வு முழுதும் வசந்தமாய்
அன்புத் தாயாக
அன்பு மனைவியாக
அன்பின் உருவாக
ஆலமரமாக இருந்து எம்மைக் காத்த எம் தாயே
உம்மைப் பிரிந்து ஓராண்டு ஆனதம்மா
எம் மீது பாசமாய் இருந்து
எம் கைபிடித்து வழிகாட்டிய தாயே!
எம்மை விட்டுத் தனிவழி சென்றது ஏன்?
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் என்றும்
உங்கள் நினைவில் நாம்
உங்கள் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(சி/10319)(3.6.4) **குடும்பத்தினர்.**

## புற்றுநோயால் பாதிக்கப்பட்டவருக்கு 3 லட்சம் ரூபா உதவி

யாழ்ப்பாணம், டிசெ.17

பசுமைத் தொண்டன் செல்லையா கோபாலகிருஸ்ணனும் அவரது பிள்ளைகளுமாக இணைந்து புற்றுநோய்ப் பாதிப்புக்குள்ளான வயோதிபப் பெண்ணொருவருக்கு 3 லட்சம் ரூபா நிதியை சிகிச்சைக்காக வழங்கியுள்ளனர்.

வவுனியாவில் வசிக்கும் வயோதிபப் பெண்ணொருவர் புற்றுநோயால் பாதிப்புற்றிருந்தார். அவரது மேலதிக சிகிச்சைக்காகவே செ.கோபாலகிருஸ்ணனும் அவரது பிள்ளைகளுமாக இணைந்து 3 லட்சம் ரூபா நிதியை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

இவர் யாழ்.குடாநாட்டின் பசுமையை ஏற்படுத்தும் நோக்கில் தனது சொந்தச் செலவில் மரங்களை வெளிமாவட்டங்களில் இருந்து தருவிப்பதுடன் இதுவரை 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மரங்களையும் பொது மக்களுக்கு விநியோகித்துள்ளார். சங்கானை நகர அபிவிருத்திச் சபையின் உறுப்பினரான இவர் வலி.மேற்கில் அரச நிறுவனங்களின் உட்கட்டுமான அபிவிருத்திக்கு காணிகளைப் பெற்றுக் கொடுத்து அபிவிருத்தி செய்து வருபவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ந-50)

## திருவெம்பாவை பூசை

வட்டுக்கோட்டை, டிசெ.17

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகியம்மன் கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் திருவெம்பாவை உற்சவம் நடைபெற்று வருகின்றது.

நாளைமறுதினம் புதன்கிழமை அதிகாலை 4.30 மணிக்கு நடேசர் அபிஷேகம் இடம்பெற்று, ஆலய பித்தர் கேணியில் தீர்த் தோற்சவம் இடம்பெறும். (ந)

## பொதுக் கூட்டம்

யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர்களின் ஒன்றிய விசேட பொதுக் கூட்டம் நாளை புதன்கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் காலை 8.30 மணிக்கு ஒன்றியத் தலைவர் கி.இரத்தினராசா தலைமையில் நடைபெறவுள்ளது.


நிகழ்வில் பிரதம விருந்தினராக மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேம்சங்கர், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் ஆகியோர் கலந்துகொள்வர். (ந)

## சொற்பொழிவு

உடுவில் பிரதேச செயலக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் திருவெம்பாவை சிறப்பு சொற்பொழிவு தாவடி முருகமூர்த்தி ஆலயத்தில் நாளை புதன்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது. "அழுதால் உன்னைப் பெறலாமே" என்ற தலைப்பில் சைவப் புலவர் கா.கமலநாதன் சொற்பொழிவாற்றுவார்.

அதேநேரம் மல்லாகம் கோட்டைக்காடு சாளம்பை முருகமூர்த்தி ஆலயத்தில் நாளை புதன்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு விசேட சொற்பொழிவு நடைபெறவுள்ளது. "திருவாசகம் என்னும் தேன்" என்ற தலைப்பில் இந்து தர்மாசிரியர் நித்தியபூதசீதரன் சொற்பொழிவாற்றுவார். (ந)

## 10 ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்



**அமரர் பொன்னுத்துரை ஐயாத்துரை**
(முன்னாள் சிறாப்பர்-இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்)

தோற்றம் 17.12.1945
மறைவு 17.12.2003

ஆண்டுகள் பத்து ஆகிவிட்டாலும்
அன்புருவம் நினைவில்
பதிந்தேயுள்ளது மறைந்து நீர்
போனாலும் மனத்திலே
பசுமையாய்க் குடியிருக்கின்றீர் ஐயா!
உம்மை நினைத்தே நாமிங்கு
வாழ்கின்றோம் உத்தமரே
பெற்றிடுக சாந்தி

இன்று (17.12.2013) செவ்வாய்க்கிழமை அன்னாரின் நினைவையொட்டி அவரது ஞாபகார்த்த மண்டபமாகிய அட்ஷயசுரபி மண்டபத்தில் மதியபோசன நிகழ்வு நடைபெறும்.

315, ஆனந்தன் வடலி வீதி,
அரியாலை. (42647)(3.6.4)

மனைவி (யோகம்மா), பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர்
**சீனிவாசகம்பிள்ளை நல்லையா**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)



தோற்றம் 06.04.1927
மறைவு 17.11.2013

அன்பிலே தெய்வமாய் அறிவிலே ஆசானாய்
பண்புடன் எமை வளர்த்து பார் புகழ வாழ வைத்து
இன்புடன் நாம் வாழ எல்லாம் எமக்களித்து
இறைவனடி சென்றனையோ என்றும் மறவோம்

கடந்த 17.11.2013 ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (17.12.2013) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் மு.ப.11.00 மணியளவில் நடைபெறும்.

அந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். அவரின் பிரிவுத் துயரில் பங்கு கொண்டோருக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டோருக்கும் நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் எமது அன்பு கலந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**[இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்]**

இந்துக்கல்லூரி அருகில்,
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய். (42646)(12.6.3)

**குடும்பத்தினர்.**

## 31ஆம் நாள் நினைவலைகள்

திருமதி
**நேசம்மா தேவசகாயம்**

"எளியோரின் நலனில் அக்கறை கொள்பவர் பேறு பெற்றவர்"
(திரு-பா:41-1)



அன்னை மடியில் 11.06.1930
ஆண்டவன் அடியில் 18.11.2013

நேசம், அடக்கம், எளிமை அணிகலன்கள் உனக்கு
பாசம் பரிவு பக்தி பண்பாடாய் அமைந்த வாழ்வு
உதவியென வருவோர்க்கு நீளும் நேசக்கரம்
செபமாலை உன் கழுத்தில் அது மணிமாலை
சுடுசொல்லே உதிர்க்காத நாவு இவைதான் எம் நேசம்மா
நீயா எம்மைப் பெற்றாய் இல்லையே
தாயாக உன்னைத் தவமிருந்து நாம் பெற்றோம்
தலைநிமிர்ந்து எம்மை வாழ வைத்தாயே
தொலைவாய்ச் சென்றாலும் நினைவுகளால்
அருகே இருக்கின்றோம் ஆராத்துயரோடு.

நேசம்மா தேவசகாயம் தேவனடி சேர்ந்த துக்கச் செய்தியினை செவிமடுத்த கணமதனில் எமக்கு ஆறுதல் சொல்லத் தேடிவந்த அனைத்து நெஞ்சங்களுக்கும் மற்றும் தொலைவிலிருந்தும் தொலைபேசி மூலம் தேறுதல் கூறித்தேற்றிய அனைவருக்கும் மற்றும் ஆலயத்தில் ஆன்ம இளைப்பாற்றித் திருப்பலி ஒப்புக் கொடுத்த பங்குத் தந்தை மற்றும் ஆறுதல் கூறிய அனைத்து உள்ளங்களுக்கும் எம் நன்றிகள்.


நாளை (18.12.2013) புதன்கிழமை காலை 6.30 மணிக்கு மல்வம் ஆலயத்தில் நடைபெறும் இரங்கல் திருப்பலியிலும் அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

(C/10322)(7.6.3)

பெத்தானியா,
ஞானப்பிரகாசர் வீதி,
மல்வத்தை, உடுவில்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரன்,
உற்றார், உறவினர்.

# முழுநிலா கலைவிழா நிகழ்வில் கரை புரண்ட மக்கள் வெள்ளம்

தென்மராட்சி, டிசெ.17

சாவகச்சேரி நகரம் நேற்று திங்கட்கிழமை மக்கள் வெள்ளத்தினால் நிறைந்திருந்தது.

தென்மராட்சி கல்வி வலயத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மார்கழித் திங்கள் முழுநிலா நாள் கலை விழாவை முன்னிட்டு தமிழரின் பாரம்பரிய கலை நிகழ்வில் மக்கள் வெள்ளம் வீதியை நிறைத்துக் காணப்பட்டது.

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தென்மராட்சி (கல்வி) வலயத்தினால் நடத்தப்பட்ட கலை விழாவில் வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளின் பாரம்பரிய கலாசாரத்தை வெளிக் கொணரும் அலங்கார ஊர்திகள் பிரதேசசெயலகம் முன்பாக இருந்து ஊர்வலமாக பவனி வந்தன.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற விழாவில் முதன்மை விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான கே.சயந்தன், ப.அரியரத்தினம், மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், சாவகச்சேரி நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை, வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், மாகாண கல்விப் பணிப்பாளர் வை.செல்வராசா ஆகியோரும் , வடமாகாண கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகள், வடமாகாண கல்வி வலயங்களின் பணிப்பாளர்கள் உட்படப் பெருமளவு மக்கள் கலந்து கொண்டனர்.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி வாசலில் சாவகச்சேரி கைத் தொழில் வணிகர் மன்றத்தினரால் விருந்தினர்களுக்கு பொன்னாடை போர்த்தி மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

வலய மாணவர்களின் மயிலாட்டம், கோலாட்டம், கரகாட்டம், தமிழர் பாரம்பரியங்களைக் குறிக்கும் பரிவட்டங்களுடனான மங்கல இசை, பொய்க்கால் குதிரை ஆட்டம் ஆகியவற்றுடன் விழா மேடைக்கு விருந்தினர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். ஏ-9 வீதி, புகையிரத நிலைய வீதி, விஜயா ஒழுங்கை, சிவன் கோயில் வீதி ஊடாக ஊர்வலமாகச் சென்ற போது வர்த்தகர்கள், பொது மக்கள் பூரண நிறைகுடம் வைத்து விருந்தினர்களை வரவேற்று மலர்மாலை அணிவித்தனர்.

சாவகச்சேரி நகர சபையினர் பூரண கும்பம் வைத்து உப. தலைவர் கு.சதாசிவமூர்த்தி தலைமையில் விருந்தினர்களை வரவேற்று மலர்மாலை அணிவித்தனர்.

சிவன் கோயில் வீதியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற மண்டப வாசலில் மங்கல இசை வாத்தியங்கள் சகிதம் விழா மேடைக்கு விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டனர்.

முதலில் தமிழ்த் தாய்க்கு முதன்மை விருந்தினர் க.வி.விக்னேஸ்வரன் மலர்மாலை அணிவித்தார். பின்னர் விருந்தினர்களால் மங்கல விளக்கு ஏற்றப்பட்டது.

நிகழ்வைக் காண வந்தவர்களால் மண்டபம் நிறைந்து காணப்பட்டதால் உள்ளே அமர முடியாமல் நூற்றுக் கணக்கானோர் வெளியில் நின்று நிகழ்வுகளைக் கண்டுகளித்தனர்.

இதில் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. மனதைக் கவரும் வகையில் ஒவ்வொரு நிகழ்வும் அமைந் திருந்தது.

அறிஞர் கௌரவிப்பு நிகழ்வில் மறவன்புலவு க.சச்சிதானந்தன் கௌரவிக்கப்பட்டார். (ந-9)

## மரண அறிவித்தல்



### சின்னர் இராசா

(குலாம் இராசா, காணிப் புறோக்கர்)

இல 76/51, இராமநாதன் வீதி, கலட்டி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னர் இராசா நேற்று (16.12.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் தங்கம்மாவின் அன்புக் கணவரும், ஜெயவதி, ஜெயமலர், ஜெயராணி காலஞ்சென்ற ஜெயராஜா மற்றும் ஜெயகுமாரி, ஜெயகௌரி ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12.2013) செவ்வாய்க் கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

76/51, இராமநாதன் வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம். (42643)(3.6.4)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சிவஸ்ரீ சுப்பிரமணியம் ஐயா சுந்தரராஜக்குருக்கள்

[பிரதம குரு, தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரியம்மன்]



தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரியம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சு.சுந்தரராஜக்குருக்கள் அவர்கள் (15.12.2013) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் ஐயா-அன்னபூரணம் அம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற விஸ்வலிங்கம் மற்றும் இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், விஜயலக்சுமியின் அன்புக் கணவரும் ஸ்ரீரஞ்சினி (கனடா), சிவஸ்ரீ ரங்கநாதக்குருக்கள், ஸ்ரீசங்கர் (கனடா), ஆகியோரின் பாசமிகு தந்தையும் முகுந்தன் (கனடா), நீரஜா, சர்மிளா (கனடா), ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான வேதரத்தினம், தங்கரத்தினம் (தங்கம்) மற்றும் முத்துக்குமாரசாமி ஐயா (அப்பர் ஐயா), நாகரத்தினம் (அம்மம்மா அன்ரி), இராசரத்தினம் (இராசாத்தி-கனடா), காலஞ்சென்ற திருஞானசம்பந்தர் (துரை) மற்றும் லோகநாயகி (சந்திரா-பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.12.2013) புதன்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொல்புரம் வழக்கம்பரை
முத்துமாரியம்மன் கோயிலடி. (42648)(7.6.3)

தகவல் :
குடும்பத்தினர்.


இது முன்மாதிரிதான்


# திசைகாட்டி கலை இலக்கிய மன்றம்


- திசைகாட்டி இலாப நோக்கம் கருதிய வணிக நிறுவனம் தான்
- இருப்பினும் நாம் சார்ந்த சமூக கலை இலக்கிய எழுச்சிக்காக
- வருடந்தோறும் ரூபா இரண்டு இலட்சம் நிதிக்கொடையோடு மேற்படி மன்றில் பங்காளராக எவ்விதத்திலும் உரிமை கொண்டாடாது 15.12.2013 அன்று சுதந்திர சுயாதீன தனித்துவமான அலகாக மேற்படி திசைகாட்டி கலை இலக்கிய மன்றத்தை ஆரம்பித்துள்ளோம் என்பதை பணிவடக்கத்துடனும் மகிழ்வுடனும் தமிழ் கூறும் நல் உலகிற்கு அறியத்தருகின்றோம்.


நிகழ்வுகளின் தொகுப்பு


திசைகாட்டியின் தலைவர் பட்டயக்கணக்காளர்
திரு. S.செல்வராஜா


திசைகாட்டியின் கலை இலக்கிய மன்றத்தலைவர்
கலாநிதி. த. கலாமணி


திசைகாட்டியின் கலை இலக்கிய
மன்றபொருளாளர் கவிஞர் சோ. பத்மநாதன்



திசைகாட்டி கலை இலக்கிய மன்ற
உபதலைவர் திரு.க.சட்டநாதன்


திசைகாட்டி கலை இலக்கிய மன்ற
செயலாளர்
திரு. கி. செல்மர்எமில்


திசைகாட்டியின் பிரதம நிறைவேற்றுநர்
Ms.S.சோகுபா


திசைகாட்டியின்
Vice Chairman
Ms.A.பிரவீனா


திசைகாட்டியின் கலை இலக்கிய மன்ற
நிர்வாகக் குழு உறுப்பினர்
திரு. .S. சிறிகுமரன்


திசைகாட்டி கலை இலக்கிய மன்ற
நிர்வாகக்குழு உறுப்பினர்
திரு. K.R.டேவிட்

விழிப்புலனற்றோர் வாழ்வக இயக்குனரும் எழுத்தாளருமான திரு. A.ரவீந்திரன் அவர்களுக்கு திசைகாட்டி ஸ்தாபகரும் சட்டத்தரணியுமான திரு V.S. நிறைஞ்சன் அவர்கள் மடிக்கணினி ஒன்றை அன்பளிப்பாக வழங்குகின்றார்.



**திசைகாட்டி கலை இலக்கிய மன்ற நிர்வாகிகள்**

திசைகாட்டி கலை இலக்கிய மன்றத்தின் தலைவராக கலாநிதி த. கலாமணியும் உபதலைவராக திரு. க. சட்டநாதனும் செயலாளராக திரு. கி. செல்மர்எமிலும் உப செயலாளராக திரு. அ.பவுனந்தியும், பொருளாளராக கவிஞர் சோ. பத்மநாதனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் நிர்வாக உறுப்பினர்களாக திருவாளர்கள் ம.பா. மகாலிங்கசிவம், S.சிறிகுமரன், K.R. டேவிட், S.K.சிவகரன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர் மன்ற இணைப்பாளராக திரு. மு. வாமதேவன் செயற்படுவார்.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். 021 2219016, 021 5689090 www. thisaivisa.com

## முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கான பொருள்கள் சேவைகள் வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பம் கோரல் - 2014

முல்லைத்தீவு மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்குமான 2014 ஆம் ஆண்டுக்குரிய கீழ்வரும் பொருள்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்தப் பொருள்கள் சேவைகளை வழங்குவதற்கு ஆர்வமுடையவர்கள் எதிர்வரும் 20.12.2013 – 31.12.2013 வரை ரூபா 1000 செலுத்தி விண்ணப்பப்படிவத்தினை மாவட்டச் செயலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.
மேலும் தங்களால் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை பற்றுச்சீட்டுடன் இணைத்து மாவட்டச் செயலகத்தில் 05.01.2014 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**நா. வேதநாயகம்**
**அரசாங்க அதிபர் / மாவட்ட செயலாளர்**
**முல்லைத்தீவு.**

முல்லைத்தீவு மாவட்டச் செயலகம்
பொருள்கள் சேவைகள் வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான
விண்ணப்பம்-2014

| இல | விவரம் | வழங்கல் (Supply) | உதிரிப் பாகம் வழங்கல் (Parts Supply) | திருத்தமும் சேவைகளும் (Repairs &Service) |
|---|---|---|---|---|
| 01 | எழுது பொருள்கள் காகிதாதிகள் | | | |
| 02 | மரத் தளபாடங்கள் | | | |
| 03 | உருக்குத் தளபாடங்கள் | | | |
| 04 | றோணியோ இயந்திரங்கள் | | | |
| 05 | போட்டோ கொப்பி இயந்திரங்கள் | | | |
| 06 | கணினிகள் மற்றும் மடிக் கணினிகள் | | | |
| 07 | தொலைநகல்கள் | | | |
| 08 | தட்டச்சு இயந்திரங்கள் | | | |
| 09 | கணினி வலைப்பின்னல் உபகரணங்கள் | | | |
| 10 | கணினி அச்சியந்திரங்கள் | | | |
| 11 | ரோனர்கள் றிபன்கள் (போட்டோ கொப்பி இயந்திரம் கணினி அச்சியந்திரம் ) | | | |
| 12 | ஜன்னல் கதவுகளுக்கான திரைச்சீலைகள் | | | |
| 13 | சீருடைகள் | | | |
| 14 | மின்சார சாதனங்கள் உபகரணங்கள் | | | |
| 15 | மின் இணைப்பு வயர்கள் | | | |
| 16 | கட்டட எயார்கொண்டிசனர்கள் | | | |
| 17 | வாகன எயார் கொண்டிசனர்கள் | | | |
| 18 | விளையாட்டு உபகரணங்கள்/ பொருள்கள் | | | |
| 19 | உடற் பயிற்சி உபகரணங்கள் /பொருள்கள் | | | |
| 20 | அச்சிடுதல் /ஸ்கிறீன் அச்சிடுதல் /Office அச்சிடுதல் / Digitalஅச்சிடுதல் | | | |
| 21 | அலுமினிய பிற்றிங் வேலைகள் பொருள்கள் | | | |
| 22 | ஜெனறேற்றர்கள் | | | |
| 23 | நீர் இறைக்கும் மோட்டார் குழாய்கள் | | | |
| 24 | பெயின்ற் பூச்சுக்கள் வாணிஸ் மற்றும் பெயின்ற் பிறஷ் | | | |
| 25 | பைப்புக்கள் பைப் இணைப்புக்கள் அவற்றுடன் தொடர்புடைய பொருள்கள் | | | |
| 26 | மோட்டார் வாகனங்கள் | | | |
| 27 | ரயர் ரியூப்புக்கள் | | | |
| 28 | வாகன பற்றரிகள் | | | |
| 29 | உலர் மின்கல பற்றரிகள் | | | |
| 30 | பற்றரி அசிட் | | | |
| 31 | இயந்திர கருவிகளும் உதிரிப்பாகங்களும் | | | |
| 32 | ஹாட்வெயார் பொருள்கள் | | | |
| 33 | பிளாஸ்ரிக் உற்பத்திகள் | | | |
| 34 | இறப்பர் முத்திரைகள் | | | |
| 35 | உள்ளக தொலைபேசி வலைப்பின்னல் உபகரணங்கள் /சேவைகள் | | | |
| 36 | தொலைபேசிகளும் அதன் வயர்களும் | | | |
| 37 | பெயர்ப் பலகைகளும் முப்பரிமாண(3D) எழுத்துக்களும் | | | |
| 38 | பொலிசிங் குளோத் | | | |
| 39 | கட்டட வேலைகள் பொருள்கள் | | | |
| 40 | தோல் வகை உற்பத்திப் பொருள்கள் | | | |
| 41 | பால்மா வகைகளும் பிளாஸ்ரிக் குவளைகளும் (Nescafe Premix Nesta & Disposal Cups.etc) | | | |
| 42 | குடிநீர் போத்தல்கள் | | | |
| 43 | சோடா (மென் பானங்கள்) | | | |
| 44 | தும்புத்தடி விளக்குமாறு, கால் துடைப்பங்கள், மொப்பர்கள், வைப்பர்கள்) | | | |
| 45 | காப்பிக், விம், பினோல், சவர்க்காரம், மார்பிள், அசிட், குளோறின், எயார் பிறஷ்னர் etc | | | |
| 46 | சாதாரண மற்றும் நைலோன் கயிறுகள் | | | |
| 47 | சுண்ணாம்பு கல்/ கருங்கல் /சல்லிகள் /உற்பத்தி செய்யப்பட்ட கட்டடப் பொருள்கள் (வழங்கக்கூடியவற்றின் கீழ் அடையாளமிடவும்) | | | |
| 48 | மணல் மண் வகைகள் (குறிப்பிடவும்) …………………………………………… | | | |
| 49 | ஒலிபெருக்கி சாதனங்கள், ஒலி வாங்கி சாதனங்கள் மற்றும் அவற்றுடன் தொடர்பானவை | | | |

(C/10326)(10.6)




# பிரதான கால்வாயில் தடைப்பட்ட நீரோட்டம்

யாழ்.நகரில் சேரும் கழிவு நீரை கடலுக்குக்கொண்டு செல்லும் பிரதான கால் வாயான பொதுநூலகத்துக்கு அண்மையில் செல்லும் கால்வாயின் கடல் கழிமுகப் பகுதி யில் தடைகள் ஏற்பட்டு நீரோட்டம் தடைப்பட்டுள்ளது. முன்னைய மாநகர சபை வளாகத்துக்கு பின் புறமாகவுள்ள வீதியில் சேதம டைந்திருந்த பாலப் புனரமைப்பின் போது கால்வாய்க்குள் சிந்திய கற்கள், மண் என்பவற்றால் தடைப்பட்டு கால்வாயின் கழிவு நீர் ஆங்காங்கே தேங்கியுள்ளது. டெங்கு நோயைக் கட்டுப்படுத்த பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் இவ்வாறு கழிவு நீர் ஓட்டமின்றி தேங்கி நின்று நுளம்புப் பெருக்கத்துக்கு ஏதுவாக அமைவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.
அதேவேளை,யாழ்.நகரில்அனைத்து பிரதான கழிவு நீர் கால்வாய்களும் நீண்ட காலமாக தூர் எடுக்கப்படவில்லை. இதனால் கழிவுநீர் பல இடங்களில் தடைப்பட்டு தேங்கி நின்று துர்நாற்றம் வீசுவ தாகவும் இக் குறைபாடுகளை நீக்க சுகாதாரப் பகுதியினர் கவனமெடுக்க வேண்டுமெனவும் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.
(வ-135)

# எழுதவும் வாசிக்கவும் தெரியாத இடைநிலை வகுப்பு மாணவர்கள்

***கிளிநொச்சி கிராமப்புறங்களில் அவலநிலை***

கிளிநொச்சி, டிசெ.16
கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கிராமப்புறப் பாடசாலைகள் பலவற்றிலும் கல்வி கற்கும் இடைநிலைப் பிரிவு வகுப்பு மாணவர்கள் பலர் இன்னமும் எழுத வாசிக்கத் தெரியாத நிலையில் இருப்பதாகப் பலரா லும் கவலை தெரிவிக்கப்படுகின்றது.
இத்தகைய மாணவர்கள் கூட்டல், கழித்தல், பெருக்கல் போன்ற அடிப்படை விடயங் களைக் கூடத் தெரிந்து கொள்ளாத நிலை யில் இருப்பதாகவும் தெரிவிக் கப்படுகின்றது. இவர்களுக்கு விசேடமான முறை யில் அடிப் படை அறிவைப் போதிக்க வேண்டும் எனப் பலராலும் தெரிவிக்கப்படுகின்றது. இதற்கான விசேட எழுத்தறி வூட்டல் செயற்றிட்டங்களை பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் முன்னெடுக்க வேண்டும் எனப் பெற்றோர் உட்படப் பலராலும் வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது.
கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்ட போர் அனர்த்தங்கள் அதனால் ஏற்பட்ட இடப்பெயர் வுகள், முகாம் வாழ்க்கை அவலங்கள் போன்றவற்றால் பின்தங்கிய கிராமப்புறங்களைச் சேர்ந்த வறிய குடும்பங்களைச் சேர்ந்த பல மாணவர்களுக்கு கல்வியின் அடிப் படை விடயங்களைக் கூட உரிய காலப்பகுதிகளில் கற்க முடியாத நிலை ஏற்பட்டது. இதற்கு கிளிநொச்சியில் நீண்டகால மாக நிலவி வந்த ஆசிரியர் பற்றாக்குறையும் முக்கிய கார ணமாகக் காணப்படுகின்றது.
தற்போது பாடசாலைகளில் அந்தந்த வகுப்புகளுக்குரிய பாடத் திட்டத்தின் அடிப்படையி லேயே இவர்களும் ஏனைய மாணவர்களுடன் சேர்ந்து கற்பதால் இவர்களால் எழுத் தறிவு போன்ற அடிப்படை விட யங்களைப் பெற்றுக் கொள்ள முடிய வில்லை எனவும் தெரிய வருகின்றது. கிளிநொச்சியில் பின்தங்கிய பல கிராமப்புறப் பாடசாலைகளில் தற்போதும் முக்கிய பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது. இந்த நிலை யில் எழுத்தறிவு குன்றிய அடிப்படை அறிவற்ற மாணவர்களைத் தனியான முறை யில் எப்படிக் கவனிப்பது என் கின்ற நிலையும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-426)

# ஹாட்லி பழைய மாணவரின் வன்னிக்கிளை பொதுக்கூட்டம்

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாண வர்கள் சங்க வன்னிக் கிளை யின் ஆண்டுப் பொதுக்கூட் டமும் விருந்துபசாரவைப வமும் எதிர்வரும் 22 ஆம் திகதி வவுனியா இந்திரன் ஹோட்டலில் மாலை 6.30 மணிக்கு இடம் பெறவுள்ளதாக ஹாட் லிக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க வன்னிக் கிளையின் செயலாளர் தா.சல் சலோசன் தெரிவித்துள் ளார்.
இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற இலங்கை வங்கி முகாமையாளர் கே. சிவபாலன் கலந்து கொள்ள வுள்ளார். சிறப்பு விருந்தினராக மருத் துவர் எஸ்.ராமதாஸ் கலந்து கொள்வார். இந்தவருடம்தரம்5புலமைப்பரிசில் பரீட்சை யில் சித்தியடைந்த மாணவர் கள் கௌரவிக்கப்பட வுள்ளனர். மேலும் சிறார்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (க-402)

## Community Development Organization (CDO) – Mullaitivu
### Vacancy Announcement

Applications are invited for the position of **GENDER OFFICER** at Community Development Organization (CDO) Mullaitivu. The Community Development Organization (CDO) is a registered voluntary, non-profitable, nonreligious, and non-governmental organization working in Mullaitivu district

**Our Mission**
Enrich life of the vulnerable communities through empowerment.

**Our Vision**
To be most innovative, trusted and best quality development service provider in the region.

**Our Core Values**
_Learning_: Continues Learning form the Environment.
_Quality_: Quality that amaze the beneficiaries.
_Locality_: Thinking globally and acting locally.
_Echo Friendly_: Echo friendly approaches towards sustainable development.

**Job description of gender officer**
The expected candidate should have the competency to conduct comprehensive research on the situation of women and on gender relations in Mullaitivu district.

- Collection of data on vulnerability of women and gender relations in Mullaitivu
- Evaluation and interpretation of the available data
- Conducting literature overview on women issues in Mullaitivu District
- Eventually composing project proposals for women empowerment
- Provide support, training and technical assistance to the partners on gender and related topics.
- Ensure gender integration in the day-to-day project activities
- Provide support to all projects specific to gender mainstreaming initiatives.

**Candidate Profile:**
- Bachelor degree in social science, ideally Gender Studies or Political Science, Development Studies or related field
- Experience in conducting self-contained research and project proposal writing
- Excellent speaking and writing skills in English and Good computer skills
- Highly motivated and dynamic personality with a good degree of autonomy, capable to perform in team work

**How to apply:**
The application comprises a one page cover letter explaining why you are interested in this post and how you meet the qualifications outlined above and attaching your CV to it. Interested Candidates should submit their applications via e-mail, indicating on the SUBJECT line the title of the position applied for, to cdomullaitivu@gmail.com on or before 31th of December, 2013.
Only short-listed candidates whose applications respond to the above criteria will be contacted for a written test and interview.
Note: Qualified female candidates are highly encouraged to apply
For more information about community development organization (CDO)visit our website www.cdolanka.org

## வெளிச்சம் இன்றி செலுத்திய 30 சைக்கிள்கள் பறிமுதல்

இரவு வேளையில் வெளிச்சம் இன்றி சைக்கிளைச் செலுத்திச் சென்ற 30 இற்கு மேற்பட்டவர்களை பொலிஸார் இடைமறித்து அவற்றைப் பறிமுதல் செய்தனர். இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கனகராயன் குளம் ஏ-9 வீதியில் இடம்பெற்றது.
வீதிப் போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மேற்கொண்ட இந்த திடீர் நடவடிக்கையில் சிக்கிய 30 சைக்கிள்களும் பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டு 'டைனமோ' பொருத்தப்பட்ட பின்னர் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டன.
அண்மைக்காலமாக ஏ-9 வீதியில் அதிகளவு விபத்துக்கள் இடம்பெறுவதாகவும், விபத்துக்களைத் தவிர்க்கும் நோக்குடன் விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடத்தப்பட்டதுடன் சைக் கிள்களுக்கு பின்னால் சிவப்பு ஸ்ரிக்கர்கள் வழங்கப்பட்டதோடு இரவு வேளைகளில் வெளிச்சமின்றி பயணிக்க கூடாது எனவும் பல தடவைகள் பொது மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாவும் கனகராயன் குள பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அபயக்கோன் பண்டார தெரிவித்துள்ளார்.

(கு-422)


# ACCA
ASSOCIATION OF CHARTERED CERTIFIED ACCOUNTANTS

(i) ACCA என்றால் என்ன?
ACCA என்பது சான்றுப்படுத்தப்பட்ட பட்டயக் கணக்காளர்களின் சங்கமாகும், 110 வருட கால அனுபவத்தினையுடைய சர்வதேச ரீதியில் முற்றான அங்கீகாரம் பெற்றுத்திகழும், ஓர் நிதியியல் கல்வித்தகைமையாக இது கருதப்படுகின்றது.

(ii) ACCA கற்கை வழிகாட்டல் அலகு என்றால் என்ன?
ACCA ஐக்கிய இராச்சியம் ACCA இலங்கை என்பவை தலைமை அலுவலகங்களாகும் வட மாகாணத்தில் ACCA கற்கைகள் தொடர்பான விடயங் களை வழிகாட் டல்களை வழங்குவதற்காக நிறுவப்பட்ட சேவை நிலையமாக காணப் படுகின்றது. ACCA பிராந்திய நிலையம் நிறுவப்படும் வரை கற்கை வழிகாட்டல்களை நிறுவனம் வழங்கவுள்ளது.

மேலதிக விவரங்களுக்கான தொடர்புகளுக்கு
முகாமைத்துவ சபை
ACCA
கற்கை வழிகாட்டல் அலகு
182, இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.



**BUTTERFLY INTERNATIONAL SCHOOL**
Main Street Chankanai

**BLOOMING BUDS DAY CARE CENTRE**
Keerimali road Pandateruppu

## 2014 இற்கான புதிய அனுமதிகள்
**ஆங்கில மொழி மூல பாலர் பாடசாலை**

யாழ்ப்பாண மாவட்டத்தில் தரம் வாய்ந்த முன்னணி ஆங்கில மொழி மூலமான பாலர் பாடசாலைகளான **Butterfly International School, Blooming Buds Day Care Centre** ஆகியவற்றுக்கான புதிய அனுமதிகளை 25.12.2013 புதன்கிழமை தொடக்கம் (காலை 9.00 -1.00 மணிவரை) பெற்றுக்கொள்ளலாம்.

PLAY GROUP-3+ | MONTESSORI-4+ | PRE SCHOOL-5+

* சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட Dr.maria montessori இன் method ல் உள்ளக, வெளியக விளையாட்டுக்கள் அனுபவமும் அர்ப் பணிப்பும் கூடிய ஆசிரியர்களினாலான கற்கைநெறிகள்
* சிறார்களின் திறமைகளை வெளிக்கொணரும் மாதாந்த நிகழ்வுகளில் சகலரும் பங்குபெறுவர்.
* விளையாட்டுப் போட்டி, English Concert, முத்தமிழ் விழா சித்திரக் கைவேலை கண்காட்சி, Graduation Ceremony

அநேக பெற்றோர்களது வேண்டுகோளுக்கிணங்க பாலர் பகல் பராமரிப்பு சேவையும் இடம்பெற்று வருகின்றது

தொடர்பு 077 890 7229, 077 2436737, 077 4308996
**Director Butterfly International School**



## மணிவிழாக் காணும் நாயகனுக்கு எமது இனிய நல்வாழ்த்துக்கள்



உதயன் குழுமம்
நிர்வாக இயக்குநரும்,
நாடாளுமன்ற
உறுப்பினருமான
உயர் திரு.
ஈ.சரவணபவன்
அவர்களை இந்நாளில்
வாழ்த்துவதில்
மகிழ்வடைகின்றோம்.

Happy Birthday

திருமதி
சாந்தினி மயில்வாகனம்
(முன்னாள் பணியாளர் -உதயன் பணிமனை)
செல்வி
மயில்வாகனம் மிதிலா
(முன்னாள் பணியாளர்- லக்சுமி ஏஜன்சிஸ்)

[illegible] மோட்டை வீதி,
கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
(சி/10332)(3.6.4)



## மணிவிழா நாயகனுக்கு ஷாம்சனின் வாழ்த்துக்கள்

Happy Birthday

இன்றைய
மாணவர்களுக்கு
ஒரு மனிதன்
எவ்வாறு வாழ வேண்டும்
என்பதற்கு
ஓர் எடுத்துக்
காட்டாக விளங்கும்
கௌரவ
ஈ.சரவணபவன்



அவர்களை இப்பொன்னாளிலே
வாழ்த்துவதையிட்டு
ஷாம்சன் குழுமத்தினர்
மகிழ்ச்சி அடைகின்றனர்
அவரது பணி மேன்மேலும் சிறக்க
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

Happy Birthday

மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

ஷாம்சன்
குழுமத்தினர்.

(சி/10327)(7.6.3)

# ஒற்றுமையுடன் செயற்பட கூட்டமைப்புக்கு தேரர் அழைப்பு

இலங்கையில் நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்கவேண்டும் என்றும், தமிழ், முஸ்லிம், சிங்கள மூவின மக்களும் ஒரே குடையின்கீழ் ஒற்றுமையாக வாழக்கூடிய கொள்கையொன்று உருவாக்கப்பட வேண்டும் என்றும் கோட்டே நாகவிகாராதிபதி சோபித தேரர் தெரிவித்தார்.

இந்தக் கொள்கையை ஏற்படுத்த சிங்கள மக்கள் சார்பில் சம்பந்தன் எம்.பி. தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுப்பதாகவும் அவர் கூறினார்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் கொழும்பு மாவட்ட செயற்குழுவின் ஏற்பாட்டில் கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் நேற்றுநடைபெற்ற தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் நினைவுப்பேருரையில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது.

"முழு உலகமும் விரும்பும் மனிதநேயமிக்க தலைவர் நெல்சன் மண்டேலா. மகாத்மா காந்தி போன்ற நாட்டின் விடுதலைக்காக அயராது போராடிய சுதந்திர வீரன் மண்டேலா. கறுப்பின மக்களைக் காப்பாற்றுவதற்காக சுமார் 27 வருடங்கள் சிறைவாசம் இருந்தவர் நெல்சன் மண்டேலா.

தென்னாபிரிக்காவின் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியடைந்து கறுப்பின மக்களுக்கு மட்டுமன்றி, நாட்டிலுள்ள அனைத்து இன மக்களும் சுதந்திரமாக வாழக்கூடிய அரசமைப்பைக் கொண்டுவந்தார். பதவி வெறிபிடித்த உலகத் தலைவர்களுக்கு மண்டேலாவின் அரசியல் வரலாறு படிப்பினையாக அமைந்திருக் கின்றது. தென்னாபிரிக்காவில் நெல்சன் மண்டேலா கொண்டு வந்த புதிய அரசமைப்பு எமது இலங் கைக்கும் வேண்டும்" - என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### திட்டமிட்டே

செல்வார்கள். அவர்கள் வந்து செல்லக்கூடிய வகையில் தனி வாசல் இருக்கிறது. அதற்கும் வீட்டுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

தங்கள் அரசியல் பிரச்சினைகளுக்காகக் கொலை செய்துவிட்டு இப்போது பழியை எனது மகள் மீதும் போட்டுத் திசைதிருப்பப் பார்க்கிறார்கள்" என்றார் தனலட்சுமி.

விடுதலைப் புலிகள் மீது பழியை விழுத்தும் விதத்தில் நீண்டகாலமாகத் திட்டமிட்டு இந்தக் கொலையை அவர்கள் செய்துள்ளார்கள் என்றும் அவர் குற்றஞ்சாட்டுகிறார்.

ஈ.பி.டி.பியின் நீண்டகால உறுப்பினரும் நெடுந்தீவுப் பிரதேச சபைத் தலைவருமான றெக்ஷயன் நவம்பர் மாதம் 26 ஆம் திகதி புங்குடுதீவில் உள்ள அவரது இல்லத்தில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தக் கொலை தொடர்பான சந்தேகத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வடமாகாண சபை எதிர்க் கட்சித் தலைவர் கமலேந்திரன் அவரது உதவியாளர் மற்றும் றெக்ஷயனின் மனைவி அனித்தா ஆகியோர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர்.

கொலை தொடர்பான வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் இன்று மீண்டும் விசாரணைக்கு வருகிறது.

அனித்தா மற்றும் கமல் ஆகியோருக்கு இடையே காணப்பட்ட சட்ட ரீதியற்ற உறவே கொலைக்கான காரணம் என்று பொலிஸார் ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தனர். ஆனால் அப்படி எந்தவிதத் தொடர்பும் அந்த இருவருக்கும் இடையில் கிடையாது என்று அனித்தாவின் தாயாரும் அவரது பிள்ளைகளும் திட்டவட்டமாக மறுக்கின்றனர்.

"அப்பாவைக் கட்சியை விட்டு விலகுமாறு கமல் தொடர்ச்சியாக நெருக்கடி கொடுத்து வந்தார். எங்களுக்கு முன்பாகவே பல தடவைகள் அப்பா கமலுடன் இது தொடர்பில் தொலைபேசியில் முரண்பட்டுள்ளார். கட்சியை விட்டு விலகமாட்டேன் என்று சொல்லியிருக்கிறார். இத்தனை வருடங்களாக கட்சியில் இருக்கும் என்னை நேற்று வந்த இவர் எப்படி விலகச் சொல்ல முடியும் என்று எங்களிடம் ஆத்திரப் பட்டிருக்கிறார். ஆனாலும் கட்சியை விட்டு அவரை நீக்கியதாகச் சொல்லி நெடுந்தீவுக்குப் போக வேண்டாம் என்று அவர்கள் சொன்னதைக் கேட்டு நவம்பர் முதலாம் திகதி முதல் அவர் அங்கு போகவில்லை. ஆனாலும் யாரோ தன்னைக் கொன்று விடுவார்கள் என்று அவர் அச்சமடைந்திருந்தார்" என்கிறார் றெக்ஷயனின் மகள்.

றெக்ஷயன் தற்கொலை செய்து கொண்டார் என்ற தகவலைத் தனது மகளோ குடும்பத்தினரோ ஒருபோதும் புரப்பு வில்லை என்று சத்தியம் செய்கிறார் தனலட்சுமி. ஈ.பி.டி.பியினரும் ஊரவர்கள் சிலருமே றெக்ஷயனின் கொலை தொடர்பில் இத்தகைய பல கதைகளைப் பேசினர் என்றும் கூறினார்.

தனது மகள் அனித்தா உண்மையை வெளியே சொல்லாத வகையில் ஈ.பி.டி.பியினரால் மிரட்டப்பட்டிருக்கக்கூடும் என்றும் அவர் சந்தேகம் வெளியிட்டார். "சாவு வீட்டிலன்று கமல் என்னை அழைத்து குடும்பப் பிரச்சினையால் ஏற்பட்ட சாவு என்று பொலிஸாரிடம் கூறுங்கள் என்று சொன்னார்" என்கிறார் தனலட்சுமி.

"சாவுச் சடங்குகள் நடந்த நாள்கள் முழுவதும் அவர்கள் (ஈ.பி.டி.பியினர்) இங்கே இருந்தார்கள். தனது பிள்ளைகளின் உயிருக்கு அஞ்சி எனது மகள் அவர்கள் சொன்னவற்றுக்கு மறுப்புச் சொல்லாமல் இருந்திருக்கக்கூடும். அதுவே அவள் விட்ட பெரும் பிழை. பொலிஸாருக்கு முன் உண்மையைச் சொல்லப் பயப்பட்டிருந்தாலும் நீதிபதிக்கு முன்னால் அவள் உண்மையைச் சொல்லியிருக்க வேண்டும்" என்றும் அவர் கூறினார்.

றெக்ஷயனின் பிள்ளைகளை வளர்க்க அமைச்சரும் ஈ.பி.டி.பி. கட்சியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா வழங்க முன்வந்த உதவிகளைத் தூக்கி எறிந்து நிராகரித்து விட்டார் தனலட்சுமி. பொலிஸார் நீதியாகப் புலன் விசாரணை நடத்தி கொலைக்கான உண்மையான காரணத்தைக் கண்டறிய வேண்டும் என்றும் தனது மகளுக்கும் கமலுக்கும் இடையிலான உறவால் நிகழ்ந்த கொலை இதுவென வழக்கைத் திசை திருப்பக்கூடாதெனவும் கோரினார். (உ-5)

### ஜெனிவாவில்

உள்ளடக்குவதற்கு அரச உத்தேசித்துள்ளது.

இந்தச் செயற்றிட்ட அறிக்கையை அடிப்படையாக வைத்தே, மனித உரிமைகள் சபையில் ஜப்பான், சீனா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகளின் உதவியுடன் நல்லிணக்கத்தை நோக்கி பயணிப்பதற்கு தமக்கு மேலும் கால அவ காசம் தேவை என்ற கோரிக்கையையும் இலங்கை தூதுக்குழு விடுக்கவுள்ளது. இதற்கு சில ஆபிரிக்க நாடுகளும் பச்சைக்கொடி காட்டியுள்ளன என்று தெரியவருகின்றது. எனினும், இது தொடர்பில் அரச தரப்புஇன்னும் உத்தியோகபூர்வ அறிவிப்பை விடுக்க வில்லை.

இதற்குப் புறம்பாக ஜெனிவா இராஜதந்திரச் சமரை எதிர்கொள்வதற்கு பாதுகாப்பு அமைச்சும் திட்டங்களை வகுத்து வருகின்றது. போர் குற்றச்சாட்டுகள் தொடர்பில் எழுப்பப்படும் கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்கு பாதுகாப்புத் தரப்பு எட்டு ஆவணப்படங்களைத் தயாரித்துள்ளது.

"இந்த ஆவணப்படங்கள் தற்போது தயாரிக்கப்படவில்லை. முன்கூட்டியே தயாரிக்கப்பட்டு விட்டன. இதனை இராணுவத்தின் இணையத்தளத்தில் பார்வையிடலாம்" என்று இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய நேற்று தெரிவித்தார்.

இலங்கை இராணுவத்துக்கு எதிராக போர்க் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட் டுள்ள நிலையில், இறுதி போர்க் காலத்தில் இராணுவத்தினர்முன்னெடுத்த மனிதாபிமான நடவடிக்கை என்ற தொனியிலேயே இந்த ஆவணப் படங்கள் தயாரிக்கப் பட்டுள்ளன.

இதுதொடர்பில் கொழும்பிலுள்ள வெளிநாட்டு தூதரகங்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டு வருகின்றன. அத்துடன், ஜெனிவா தொடர் குறித்து வெளிவிவகார அமைச்சும் பலகோணங்களில் இராஜதந்திர நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளது. இதன் ஓர் அங்கமாக இலங்கை இராஜதந்திரிகள் சிலர் வெளிநாடுகளுக்குச் சென்று அங்கத்துவ நாடுகளிடம் பேச்சு நடத்தவுள்ளனர் என்று தெரியவருகிறது.

அதேவேளை, இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுகின்றனவா என்பது தொடர்பில் ஆராய்வதற்காக இலங்கை வந்திருந்த மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, மார்ச் மாத அமர்வின்போது இது தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளார்.

இந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டே இலங்கை மீதான அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் தீர்மானிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப் படுகின்றது.

"மனித உரிமைகள் சபையில் இம்முறையும் இலங் கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்படலாம். பொருளாதாரத் தடை விதிக்கும் அதிகாரம் பாதுகாப்பு சபைக்கே இருக்கின்றது. எனினும், அதில் அங்கம் வகிக்கும் வீட்டோ அதிகாரமுடைய சீனா, ரஷ்யா ஆகிய நாடுகள் இலங்கையு டன் இருப்பதால் பொருளாதா ரத் தடை என்பது சாத்தியமாகாது" என்று கூறினார் அரசியல் நிபுணரான கலாநிதி வசந்த பண்டார.

இதற்கிடையில் மனித உரிமைகள் அமைப்புகளும், அரசசார்பற்ற அமைப்புகளும் இலங்கைக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்ற பரப்புரையை ஆரம்பித்துள்ளமை அரசுக்கு பெரும் தலையிடியாக மாறியுள்ளது. (த-சி)

### பர்தாவை

அத்தோடு, "எந்தவொரு பிரச்சினையாயினும் பௌத்த மதகுருமார்களை குறிப்பிட்டு பேசுவது வீண் பிரச்சினைகளை ஏற்படுத்தும்" என்றும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

அடுத்த வருடத்திலிருந்து நடைமுறைக்கு வரவுள்ள இலத்திரனியல் அடையாள அட்டைக்கு முஸ்லிம் சமூகத்தினர் தங்களின் மத கலாசார ஆடையை அணிந்து புகைப் படம் எடுக்கக்கூடாது என அறிவிக்கப்பட்டிருந்தமை தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது.

"இலத்திரனியல் அடையாள அட்டைக்கு முஸ்லிம்கள் பர்தா அணிந்தோ, தொப்பி அணிந்தோ புகைப்படம் எடுத்துக் கொள்வதை எம்மால் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. ஆனால், தேரர்கள் காவியுடை அணிந்துகொண்டு புகைப்படம் எடுத்துக் கொள்ள முடியும். காரணம், காவியுடையை அணிந்தால் அது ஒருபோதும் முகத்தையோ, தலையையோ மறைக்காது. ஆனால், பர்தா, தொப்பி அப்படியா? இல்லை.

அத்தோடு இந்நாட்டை பொறுத்தவரைக்கும் பர்தா எனப்படுவது போதைப்பொருட்களை கடத்தவும், கொள்ளையிடுவதற் கும் பயன்படுத்தப்படும் ஒரு ஆடையாகவே கருதப்படுகிறது. இப்படிப்பட்ட இவ்வாடையை அடையாள அட்டை புகைப்படத்தில் மாத்திரமின்றி இந்த நாட்டிலிருந்தே இல்லாதொழிக்க வேண்டும்.

அதுமட்டுமல்ல, இதுபோன்ற பிரச்சினைகளுக்கு அநாவசியமாக பௌத்த மதகுருமார்களை குறிப்பிடுவதை சம்பந்தப்பட்டவர்கள் நிறுத்திக் கொள்ள வேண்டும். பௌத்த தேரர்கள் இந்நாட்டில் அமைதியாகவே வாழ்ந்து கொண்டு வருகிறார்கள். இவர்களை இந்த பிரச்சினைக்குள் தொடர்புபடுத்தினால் வீண் பிரச்சினைகளை சந்திக்க நேரிடும் என நாம் சம்பந்தப்பட்டவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கிறோம்" - என்றார்.

அத்தோடு, தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளரான முஸாமிலும் பர்தா, தொப்பி அணிந்துக் கொண்டு புகைப்படம் எடுப்பதற்கு எதிர்ப்பினையே தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"முஸ்லிம்கள் அடையாள அட்டைக்குக்கு பர்தா அணிந்தோ, தொப்பி அணிந்தோ புகைப் படம் எடுக்கக் கூடாது எனக் கூறுவது ஒருபோதும் பிழையாணதல்ல.

உண்மையில் பர்தா, தொப்பி அணிந்தால் அது முகத்தை மறைக்கும் படியே காணப்படும். இது தேசிய பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக அமையக் கூடும். காரணம், படத்திலுள்ளது யார் என யாராலும் அடையாளம் காண முடியாது. ஆகவே, அடுத்த வருடம் நடைமுறைக்கு வரவுள்ள தேசிய அடையாள அட்டைக்கு முஸ்லிம்கள் பர்தாவோ, தொப்பியோ அணிந்து புகைப்படம் எடுக்கக் கூடாது. இதை நாமும் ஏற்றுக் கொள்ளமாட்டோம்" என்றார். (த-சி)

### தாய்லாந்து

மையைப் பாதுகாப்பதற்கும், பிரச்சினைகளுக்கு சுமுகதீர்வை எட்டுவதற்கும் ஏதுவாக அனைத்துக் கட்சிகளுக்கிடையிலும் புரிந்துணர்வும், பரஸ்பர ஒத்துழைப்பும் நிலைநாட்டப்படும். இதன் பொருட்டு இக்கட்சிகளுக்கிடையிலான பேச்சுகளுக்கு இலங்கை ஊக்குவிப்பு வழங்கும்.

தாய்லாந்தில் பிரதமர் யிங்லக் சினவட்ரா அரசைக் கவிழ்ப்பதற்கு கடந்த சில நாள்களாக மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். ஆர்ப்பாட்டங்களால் தலைநகரான பாங்கொக்கிலுள்ள அரச அமைச்சகங்கள் மூடப்பட்டுள்ளன.

யிங்லக்குக்கும், நாடு கடத்தப்பட்ட முன்னாள் பிரதமரும் அவரது சகோதரருமான தக்சின் சினவட்ராவுக்கும் எதிராக 2010 ஆம் ஆண்டு இடம்பெற்ற பெரும் பேரணிகளையடுத்து தொடர்ந்து வீதிப் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன எனத் தகவல் கள் தெரிவிக்கின்றன.

யிங்லக்கின் அரசுக்கு எதிரான போராட்டம் முனைப்படைந்ததால் கடந்த வாரம் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. அரசமைப்பில் திருத்தம் கொண்டுவருவதற்கும், புரிந்துணர்வைக் கட்டியெழுப்புவதற்கும், அரசியல் மறுசீரமைப்பை மேற்கொள்வதற்கும், சர்வஜன வாக்கெடுப்புக்கு வழிசமைப்பதற்கும் தனது அரசு நடவடிக்கை எடுக்குமெனப் பிரதமர் பின்னர் வாக்குறுதியளித்துள்ளார்.

அமெரிக்கா, நியூஸிலாந்து, ஜேர்மனி, கனடா, சீனா ஆகிய நாடுகளும் தாய்லாந்து நிலைவரம் குறித்து அவதானித்து வருகின்றன.

### விவசாய

செயலாளர் அபயக்கோன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதில் கருத்துரை வழங்கிய ஜயசுந்தர, எமது நாடு தற்போது அரிசியில் தன்னிறைவை அடைந்துள்ளது. அடுத்த ஆண்டிலிருந்து அரிசியை நாம் வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவுள்ளோம். தற்போது அரசு, இறக்குமதி செய்யப்படும் உருளைக் கிழங்குக்கான வரியை அதிகரித்துள்ளது. இதனூடாக அதன் இறக்குமதியைக் குறைத்து உற்பத்தியை அதிகரிப்பதே நோக்கமாகும்.

அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் விவசாயத்தை நோக்காகக் கொண்டே தயாரிக்கப்பட்டுள்ளது. விவசாயத்தில் தன்னிறைவுப் பொருளாதாரத்தை அடைவதற்குரிய வேலைத் திட்டங்கள் அடுத்த ஆண்டில் முன்னெடுக்கப் படும் என்று கூறினார். (த-5)

### சர்வதேச

என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். பயாகல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு பேசிய அவர், மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அண்மையில் இங்கு பயணம் செய்திருந்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, சுதந்திர சதுக்கத்திலுள்ள முன்னாள் பிரதமர் டி.எஸ்.சேன நாயக்கவின் உருவச்சிலைக்கு முன்னால் பௌத்த கொடி இருந்தது எனக் குற்றஞ்சாட்டி னார்.

ஆனால், மனித உரிமை விவகா ரத்தில் உலகுக்குப் பாடம் புகட்ட முயற்சிக்கும் நோர்வேயில் புரட்டஸ்தாந்து சமயத்தைத் தழுவிய ஒருவர் வேறு சமயத்தைத் தழுவ முடியாது என்பது சட்டரீதியாக உள்ளது. அமெரிக்காவில் கிறிஸ்தவ பாதிரியார் ஒருவர் வந்து போதனை நடத்தியதன் பின்னர்தான் காங்கிரஸ் சபையிலும், செனட் சபை யிலும் பணிகள் ஆரம்பிக்கப்படும். பிரிட்டிஷ் நாடாளுமன்றில் கிறிஸ்தவ பாதிரியார் வந்து போதனை நடத்தியதன் பின்னர் தான் சபை அமர்வுகள் ஆரம்பிக்கப்படும். இவற்றையெல்லாம் அவர் பார்த்ததில்லை. ஆனால், எமது நாட்டில் அவ்வாறான நிலைமை இல்லை. நமது நாடாளுமன்றில் அமர்வுகள் ஆரம்பிக்கப் படும்போது பௌத்த சமயத்துக்கு அமையவோ அல்லது வேறு சமயத்துக்கு அமையவோ வழிபாடு நடத்துவதில்லை. ஏனெனில், நாட்டிலுள்ள ஏனைய சமயங்களுக்கும் அரசமைப்பினூடாக நாம் சுதந்திரம் வழங்கியுள்ளோம். எனவே, மேற்குலக நாடுகள் எம்மீது இனிமேலும் குற்றச்சாட்டுகள் முன்வைக்க முயற்சித்தால் அந்நாடுகளில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் குறித்த தகவல்களை நாம் எதிர்காலத்தில் வெளியிட நேரிடும் - எனத் தெரிவித்துள்ளார். (த-சி)

### திருமலைத்

சர்வதேச மனித உரிமைகள் தினமான கடந்த 10 ஆம் திகதி திருகோணமலை பஸ் நிலையத்துக்கு அருகில் காணாமற் போனோரின் உறவினர்கள் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இந்த ஆர்ப்பாட்டத்தின் மீது இனந்தெரியோதோரால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. முகங்களை துணிகளால் மூடிக்கட்டிக் கொண்டு வந்தவர்களே இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர். அதனால் சிலர் காயமடைந் னர். இந்தத் தாக்குதல் சம்பவமானது சட்டத்தையும் ஒழுங்கையும் சீர்குலைக்கும் செயற்பாடாகும்.

எனவே இந்தத் தாக்குதலை நடத்தியவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றுள்ளது. (த)

### போரழிவு

இதேவேளை யாராவது இந்தக் கணக்கெடுப்புத் தொடர்பில் தகவல்கள் வழங்கவில்லையாயின் தமது பகுதிக்குப் பொறுப்பான கிராம சேவையாளரையோ அல்லது பிரதேச செயலாளரையோ தொடர்பு கொண்டு, தகவல்களை வழங்குமாறு அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு மற்றும் தொகை மதிப்பு, புள்ளி விபரத் திணைக்களம் ஆகியன அறிவித்துள்ளன. (த-5)


## வடமாகாண எல்லேப் போட்டி

யாழ்ப்பாணம், டிசெ.17
வடமாகாண அமைச்சுக்களுக்கு இடையிலான விளையாட்டு விழாவில் ஓர் அங்கமான ஆண்,பெண் இருபாலாருக்குமான எல்லே போட்டிகள் இன்றும் நாளையும் யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளன. (த-23)

## பூப்பந்து இறுதியாட்டம் உள்ளூராட்சி 'பி' அணி வெற்றி

யாழ்ப்பாணம், டிசெ.17
வடமாகாண அமைச்சுக்களுக்கு இடையிலான விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான ஆண், பெண் இருபாலாருக்குமான பூப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் பெண்களுக்கான இறுதியாட்டத்தில் உள்ளூராட்சி அமைச்சு அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.
உள்ளூராட்சி அமைச்சு அணிக்கும்,ஆளுநர் செயலக கொத்தணி அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் உள்ளூராட்சி அமைச்சு அணி 3:2 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. (த-23)

## பூப்பந்தாட்ட இறுதியாட்டம்




யாழ்ப்பாணம், டிசெ.17
வடமாகாண அமைச்சுக்களுக்கு இடையிலான விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான ஆண், பெண் இருபாலாருக்குமான பூப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் ஆண்களுக்கான இறுதியாட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை மணிக்கூட்டு வீதியில் அமைந்துள்ள பூப்பந்தாட்டத் திடலில் இடம்பெறவுள்ளது.
இறுதியாட்டத்தில் உள்ளூராட்சி அமைச்சு அணியை எதிர்த்து கல்வி அமைச்சு அணி மோதவுள்ளது. (த-23)

## ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டம்



யாழ்ப்பாணம், டிசெ.17
யாழ். மாவட்ட கூடைப் பந்தாட்ட சங்கத்தினரால் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தப்படும் ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் ஆண்களுக்கான போட்டி எதிர்வரும் 22 ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத்திடலில் இடம்பெறவுள்ளது. (த-23)




நெஸ்லே லங்கா பிறைவேட் நிறுவனத்தின் ஆதரவுடன் யாழ். மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவினரால் நடத்தப்பட்ட மைலோ வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டித் தொடரில் சிறந்த கோல் காப்பாளராகத் தெரிவான சக்கோட்டை விண்மீன் விளையாட்டுக்கழக கோல் காப்பாளர் அனஸ்லின் டினேஸ்"க்கு வடமாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் ராஜா ரணசிங்க விருது வழங்குகிறார். (த-23)

# இறுதி ஆட்டத்துக்கு உடுப்பிட்டி நவஜீவன்

யாழ்ப்பாணம், டிசெ.17
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் தலைவர் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் முதலாவது அரை இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.
கடந்த வாரம் கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் உடுப்பிட்டிநவஜீவன்ஸ்விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.
இதில் உடுப்பிட்டி நவஜீவ ன்ஸ் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)



"-"
உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

## 'யாழ்ப்பாணச் சமர்' மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.17
யாழ்.உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையே ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் நடத்தும் 'யாழ்ப்பாணச் சமர்' உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இடைநிறுத்தப்பட்ட ஆட்டங்கள் எதிர்வரும் சனிக்கிழமை மீண்டும் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (த-23)

## யாழ். லீக்குக்கு புதிய நிர்வாகம்

யாழ்:உதைபந்தாட்ட லீக்குக்கு புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.
லீக்கின் வருடாந்தப் பொதுக் கூட்டம் கடந்த சனிக்கிழமை அரியாலையில் அமைந்துள்ள உதைபந்தாட்ட பயிற்சி நிலையத்தில் இடம் பெற் றது.
பின்வருவோர் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
தலைவர்- எஸ்.அன்ரனிப்பிள்ளை, செயலாளர்- ஏ.அஜித்குமார், உப செயலாளர் -எல்.மேவின், பொருளாளர்-எஸ்.தவஸ்காந்தா, உப தலைவர்கள்-ஏ.சுரேந்திரன், எம்.இளம்பிறையன், ரி.தர்மகுலநாதன், கே.தர்மரெட்ணம், இ.ஆனல்ட். (த-23)

## காலிறுதியாட்டங்கள் இன்று

யாழ்ப்பாணம், டிசெ.17
யாழ். மாவட்டத் தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் அனுசரணையுடன் வலி.தெற்கு பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளனம் மின்னொளியில் நடத்தும் தாச்சி சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உடுவில் மகளிர் கல்லூரிக்கு அருகில் உள்ள உதய சூரியன் விளையாட்டுக்கழக மைதா னத்தில் நடைபெற்று வருகின்றன.
இதில் இன்று செவ்வாய்க் கிழமை இடம்பெறும் காலிறுதியாட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-
இரவு 7 மணிக்கு இடம் பெறும் காலிறுதியாட்டத்தில் உடுவில் வைகறை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
இரவு 8 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில்பண்டத்தரிப்பு சாந்தை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மயிலிட்டி கலைமகள் விளையாட் டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.17
வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் சாந்தன், யூட்கசன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான மின்னொளி உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
அதில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ப்ரண்ட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யுனிபைட் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)


## உதைபந்தாட்டப் போட்டியில் வெற்றி பெற்ற அணிகள்

யாழ்ப்பாணம், டிசெ.17
அராலி தெற்கு மாவத்தை விளையாட்டுக் கழகம் உழவர் திருநாளை யொட்டி நடத்தும் 7 பேர் பங்குகொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் மாவத்தை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.
இதில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணி களின் விவரம் வருமாறு:-
முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் அண்ணா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து துணைவி நியூ செனிஸ்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.
இதில் அண்ணா விளையாட்டுக் கழக 'ஏ' அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
இரண்டாவது ஆட்டத்தில் அண்ணா விள்ளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து மூளாய் வளர்மதி விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.
ஆட்ட நேர முடிவில் இரு அணியினரும் தலா 3 கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.
வெற்றி தோல்வி காண்பதற்காக 5 சமநிலைத் தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.



"-"
அண்ணா விளையாட் டுக் கழக 'ஏ' அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இதில் மூளாய் வளர்மதி விளை யாட்டுக் கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)








# அமைச்சர்கள் அணியை வென்றது எம்.பிக்கள் அணி





அமைச்சர்கள் அணிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அணிக்கும் இடையிலான சபாநாயகர் கிண்ண மென்பந்து கிரிக்கெட் போட்டி விளையாட்டு அமைச்சு மைதானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இந்தக் கிரிக்கெட் போட்டியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அணி வெற்றி பெற்றது. (த)

## மெஸ்சியை முந்தினார் டெல் போட்ரோ



இந்த ஆண்டின் சிறந்த ஆர்ஜென்ரீனா விளையாட்டு வீரராக ரென்னிஸ் வீரர் ஜுவான் மார்ட்டின் டெல் போட்ரோ தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
இந்த ஆண்டில் மட்டும் நான்கு பட்டங்களை வென்ற டெல் போட்ரோ, இந்தியன் வெல்ஸ் மற்றும் ஷாங்காய் மாஸ்டர்ஸ் போட்டிகளில் இரண்டாம் இடத்தைப் பிடித்தார்.
சிறந்த விளையாட்டு வீரராகத் தெரிவு செய்யப்பட்டமை குறித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்திய போட்ரோ, இந்த ஆண்டு, தான் எதிர்பார்த்ததை விட மிகவும் சிறப்பாக இருந்ததாகத் தெரிவித்துள்ளார்.
மேலும் அடுத்த பருவகாலத்தைத் தான் ஆவலுடன் எதிர்நோக்கியிருப்பதாகவும் அவர் தனது இணையதளப் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.
இதே நாட்டை சேர்ந்த பார்சிலோனா உதைபந்தாட்ட அணியின் நட்சத்திர வீரர் லியோனல் மெஸ்ஸி, நான்கு முறை சிறந்த உலக உதைபந்தாட்ட வீரராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## மிஸ்டர் ஸ்ரீலங்கா ஆணழகன் போட்டி




மிஸ்டர் ஸ்ரீலங்கா ஆணழகன் போட்டி நேற்று முன்தினம் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.
தொடர்ச்சியாக 66ஆவது வருடமாக இடம்பெறும் இந்த ஆணழகன் போட்டியில் 125 போட்டியாளர்கள் பங்குகொண்டனர்.
இந்த போட்டியில் கட்டான பலமேன் கழகத்தைச் சேர்ந்த அன்ரன் புஸ்பராஜா சகல துறைகளிலும் வெற்றி பெற்றதன் மூலம் மிஸ்டர் ஸ்ரீலங்காவாக தெரிவானார்.
2ஆம் இடத்தை கடற்படையைச் சேர்ந்த சுபாஸ் சிறிவர்த்தனவும், மூன்றாம் இடத்தை இராணுவத்தைச் சேர்ந்த யூ ஜே அமிலவும் பெற்றுக்கொண்டனர்.
வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். துமிந்த சில்வா, அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் மற்றும் விளையாட்டுத்துறை இயக்குநர் ரஞ்சனி ஜெயக்கொடி ஆகியோர் வழங்கினர். (த)

## கடினமாக போராடினால் கனவு நனவாகும்

*-சச்சின்*

இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரரான சச்சின் டெண்டுல்கர், சமீபத்தில் சகல வகையான சர்வதேச போட்டிகளிலிருந்தும் ஓய்வு பெற்றார். இந்தியாவில் முதல் 25 அதிசிறந்த இந்தியர்களின் பட்டியலில் சச்சின் இடம்பெற்றுள்ளார்.
இதற்கான நிகழ்ச்சியில் சச்சின் கலந்து கொண்டு பேசுகையில், இளைஞர்களைக் கனவு காணுமாறு ஊக்குவிப்பேன், ஏனெனில் கடினமாகப் போராடினால் கனவுகள் நனவாகும். தோல்வி எனக்கும் வருத்தம் அளித்தது. தோல்வி அடைந்த பின்புதான் அடுத்த சவாலுக்கு உத்வேகத்துடன் தயாராக முடியும் என்பதே கிரிக்கெட் ஆடியதன் மூலம் நான் கற்ற பாடம்.
தற்போதைய இளம் தலைமுறையினர் வீடியோ கேம்ஸ், மடிக்கணினி, கணினி மற்றும் செல்போன்களில் விளையாடுவதற்கு அதிக நேரம் செலவிடுகின்றனர். இது அவர்களின் உடற்பயிற்சியை முடக்கும் விடயங்கள். அதற்கு மாறாக, களத்தில் விளையாடினால் உடல் வலுப்பெறும் என்று தெரிவித்துள்ளார். (த)

# கடும் நெருக்கடியில் ஹோக்லி



தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்டில் சச்சின் இடத்தில் ஹோக்லி களமிறங்க உள்ளதால் கடும் நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறார்.

தென்னாபிரிக்கா சென்றுள்ள இந்திய அணி ஒருநாள் தொடரை இழந்துள்ளதால், பல்வேறு விமர்சனங்களுக்கு ஆளாகி வருகிறது.

நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் ஓய்வுக்கு பின், இந்தியா மோதும் முதல் டெஸ்ட் என்பதாலும் எதிர்பார்ப்புகள் அதிகரித்துள்ளது.

இதற்கிடையே சச்சின் இடத்தில் யார் களமிறங்குவார் என்ற விவாதம் எழுந்துள்ளது. இதில் முதல் தெரிவாக இருப்பவர் விராட் ஹோக்லி.

எனவே இதற்காக தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார். பந்துகள் எகிறும் தென்னாபிரிக்க ஆடுகளத்தில் திறமையை நிரூபிக்கத் தயாராக உள்ளார். வலைப்பயிற்சியின் போது உமேஷ் யாதவ், சகீர் கான், இஷாந்த் சர்மா உள்ளிட்டோரை பவுன்சர் முறையில் பந்துவீசச் சொல்லிப் பயிற்சி கொள்வதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.


இது குறித்து தென்னாபிரிக்க அணியின் முன்னாள் பயிற்சியாளர் ரே ஜென்னிங்ஸ் கூறுகையில், சுழற்பந்துவீச்சை ஹோக்லி சிறப்பாக எதிர்கொள்வார்.

ஆனால் தென்னாபிரிக்க மண்ணில் வேகப்பந்துவீச்சை எதிர்கொள்வது கடினம். இவரது இந்த பலவீனம் ஒருநாள் தொடரில் நன்கு வெளிப்பட்டது.

மணிக்கு 100 கி.மீ., வேகத்தில் செல்லும் காரை ஓட்டிய வரை, திடீரென மணிக்கு 170 கி.மீ., வேகத்தில் பறக்கும் காரை ஓட்டச் சொன்னால் தடுமாற்றம் ஏற்படத் தானே செய்யும்.

டெஸ்ட் தொடர் ஹோக்லிக்கு கண்டிப்பாகச் சவாலானதாக இருக்கும் என்று தெரிவித்துள்ளார். (த)

# இங்கிலாந்துக்கு மற்றொரு பின்னடைவு



ஆஸ்திரேலியாவிடம் படுதோல்வியடைந்த இங்கிலாந்து அணிக்கு மற்றொரு பின்னடைவு ஏற்பட்டுள்ளது. ஆஸ்திரேலியா சென்றுள்ள இங்கிலாந்து அணி வரலாற்று சிறப்புமிக்க ஆஷஸ் தொடரில் பங்கேற்கிறது. இதில் இரண்டு டெஸ்ட் போட்டி களில் தோல்வியை சந்தித்த இங்கிலாந்து அணி, மூன்றாவது டெஸ்ட்டில் விளையாடிக் கொண்டிருக்கிறது.

இதில் முதல் இன்னிங்சின் போது துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணியின் ஸ்டூவர்ட் புரோட்க்கு வலது காலில் காயம் ஏற்பட்டது.

மிச்செல் ஜோன்சன் பந்துவீச்சில் எல்.பி.டபுள்யு ஆகி ஆட்டமிழந்த புரோட், வலியுடன் பவிலியன் திரும்பினார்.

உடனடியாக அவருக்கு எக்ஸ்ரே மற்றும் ஸ்கேன் பரிசோதனை நடத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து, ஆஸ்திரேலிய அணியின் 2ஆவது இன்னிங்சில் பந்துவீசாமல் அவர் ஓய்வெடுத்தார்.

பேர்த் டெஸ்டில் பந்துவீசும் வாய்ப்பு இல்லை என்று இங்கிலாந்து அணி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

நடப்பு தொடரில் இங்கிலாந்து அணியின் முக்கிய பந்துவீச்சாளராக இருந்த புரோட், காயம் காரணமாக விளையாட முடியாதது அந்த அணிக்கு மிகப் பெரிய பின்னடைவை ஏற்படுத்தி உள்ளது.

அவர் விரைவில் குணமடையாவிட்டால், 4ஆவது டெஸ்டில் அவருக்கு பதிலாக ஸ்டீவன் பின், போய்ட் ரேங்க்கின், கிறிஸ் டிரேம்லெட் ஆகியோரில் ஒருவருக்கு வாய்ப்பு கிடைக்கலாம். (த)

# நெய்மரின் அசத்தல் பார்சிலோனா வெற்றி

கொழும்பு, டிசெ. 17

லாலிகா உதைபந்தாட்டப் போட்டியில் நெய்மார் இரண்டு கோல் அடித்து அசத்த பார்சி லோனா அணி வெற்றி பெற் றது.

ஸ்பெயினில் லாலிகா உதை பந்தாட்டத் தொடர் நடக்கிறது. இதன் லீக் போட்டியில் பார்சிலோனா, வில்லா ரெல் அணிகள் மோதின.

இப்போட்டியின் முதல் பாதியில் பார்சிலோனா அணியின் நெய்மார் தண்டனை உதை வாய்ப்பைக் கோலாக மாற்றினார்.

இரண்டாவது பாதியில் வில்லாரியஸ் அணியின் மத்தியூ ஒரு கோல் அடித்து கை கொடுக்க, 68 அவது நிமிடத்தில் கோல் அடித்த நெய்மார்வெற்றியை உறுதி செய்தார்.

முடிவில் பார்சிலோனா அணி, 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ரியல்மாட்ரிட்அணிஒசனா அணிகள் மோதிய மற் றொரு போட்டி 2-2 என்ற கணக்கில் சம நிலை ஆனது.

புள்ளிப்பட்டியலில் 43 புள்ளி களுடன் பார்சிலோனா அணி முதலிடத்தில் உள்ளது.

இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களில் முறையே அத் லெட்டிகோ மட் ரிட் (40), ரியல் மட்ரிட்(38) அணிகள் உள்ளன. (த)


## தேவை

**நியூ வெல்டன் கல்லூரி**
**உமாமகேஸ்வரன் வீதி,**
**இறம்பைக்குளம், வவுனியா**

பின்வரும் பாட ஆசிரியர்கள் தேவை. தகுதியான ஆசிரியர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.
(தமிழ், விஞ்ஞானம், ஆங்கிலம்)
தொடர்பு: 077 8889388


## மரண அறிவித்தல்

### திருமதி கிருஸ்ணவேணி நவரட்ணசாமி



கதிரிப்பாய் அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் தாமரைக்குளத்தடி துன்னாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிருஸ்ணவேணி நவரட்ணசாமி (லிங்கம்) நேற்று (16.12. 2013) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நவரட்ணசாமியின் (லிங்கண்ணை) அன்பு மனைவியும், விஷ்ணுகாந் (LB FINANCE நெல்லியடி), அர்ச்சனா ஆகியோரின் அன்புத் தாயும், தேவானந்த்தின் (ஆனந்த்- லண்டன்) சிறிய தாயும், கிருஷ்ணநாதன் (பருத்தித்துறை), நாராயணநாதன் (பருத்தித்துறை), இராமநாதன் (இராமகட்டி- கதிரிப்பாய்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.12. 2013) செவ்வாய்க் கிழமை மு.ப. 11.00 மணியளவில் துன்னாலையில் உள்ள அவரது இல்லத்தில் நடை பெற்றுப், பூதவுடல் வேரூன்றடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தாமரைக்குளத்தடி, துன்னாலை. தகவல்: குடும்பத்தினர்.

அம்பாள் துணை

## அம்பாள் துணை காரைநகர் - மணற்காடு கும்பநாயகி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய பாலஸ்தாபனம்







10.02.2014 திங்கட்கிழமை காலை 7 மணி

**மீதமுள்ள திருப்பணிகளை நிறைவேற்ற மேலும் நிதி தேவைப்படுவதால் உலகெங்கும் பரந்துவாழும் அம்பாளின் அடியவர்கள் வாரி வழங்கி விரைவில் மகா கும்பாபிஷேகம் நடைபெற ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்**

நிதியுதவி செய்ய விரும்புவோர் நேரடியாக திருப்பணிச்சபை காரியாலயத்தில் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளலாம் அல்லது THIRUPANI SABAI BANK OF CEYLON ACCOUNT No. 7641518 ,KARAINAGAR (SWIFT CODE BCEYLKLX) என்னும் கணக்கிற்கு நேரடியாக செலுத்தி வங்கியில் வைப்பு செய்த ரசீதை திருப்பணிச்சபை காரியாலயத்தில் கொடுத்தும் பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு:

| | |
|---|---|
| திருப்பணிச்சபைக் காரியாலயம் | - 94 21 2211711 |
| திரு.க.பாலச்சந்திரன், செயலாளர் | - 94 71 3486725 , 94 75 5860153 |
| திரு.வே.நடராசா, தலைவா்பெறுநர் | - 94 21 2264237 |
| திரு.பொ.பரந்தாமன், பொருளாளர் | - 94 77 0711206 |


**எண்ணி 2 மாதங்கள் கனடா படிக்க உழைக்க பறக்கலாம் 3 பேருக்கு மட்டுமே இவ்வாய்ப்பு (முன்னர் ஆலோசனை பெற்றவர்களும் நிபந்தனைகளுடன் இலவசமாக ஆலோசனை பெறலாம்) 30% கட்டணக்கழிவு**

A/L தேவையில்லை IELTS உம் தேவையில்லை O/L மட்டும் போதும் நியூசிலாந்தில் படிக்க உழைக்க அரிய வாய்ப்பு 28 வயது வரை தொடர்பு கொள்ளவும்

UK இல் படிக்க உழைக்க A/L தேவையில்லை IELTS உம் தேவையில்லை

இத்தாலி சட்டரீதியாகச் செல்ல சட்ட ஆலோசனை

ஐரோப்பிய நாடான சைப்பிரசில் படிக்க மாதம் ஒரு இலட்சம் வரை பகுதி நேரமாக உழைக்க IELTS தேவையில்லை 20% கட்டணக்கழிவு

போலந்தில் படிக்க உழைக்க வெறும் 7 இலட்சம் போதும் 10% கட்டணக்கழிவு

இப்போது Skill Migration மூலம் 6 பேர் ஆஸ்திரேலியா, நியுசிலாந்து குடிபெயர்ந்துள்ளனர்

ஆஸ்திரேலியாவில் படிக்க உழைக்க விசா வகை 457 இன் மூலம் இதுவரை 3 பேர் ஆஸி பறந்தனர் 25% கட்டணக்கழிவு

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி யாழ்ப்பாணம்
021 2219016, 021 5689090. www. thisaivisa.com


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.12.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.